Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 06 வெள்ளிக்கிழமை(19-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:114

### புலிகள் பகுதி வாக்காளர்களுக்கு

## அரச கட்டுப்பாட்டுப்பிரதேசத்திலேயே கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்

கொழும்பு,மார்ச்19

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு அவர்கள் வந்து வாக்களிப்பதற்கான போக்குவரத்து வசதிகளை அந்தந்தப் பகுதி தெரிவத்தாட்சி அலுவலர்களான அரச அதிபர்கள் ஏற்படுத்திக் கொடுப்பர்.

-இவ்வாறு தேர்தல் ஆணையாளர் முடிவு செய்திருக்கின்றார் என அறிய வருகின்றது.

இது குறித்து வவுனியா மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரான வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றார். யாழ். மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம் ஆகியவற்றின் அரச அதிபர்கள் இன்று பிற்பகல் அந்தப் பிரதேச இராணுவ அதிகாரிகளுடன் நடத்தும் கலந்துரையாடலின் பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களின் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தேர்தல் ஆணையாளரை நேற்றுச் சந்தித்து உரையாடினர்.

மேற்படி முடிவுக்கு அமைய அந்தந்தப் பிரதேச இராணுவ அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்து மேல் நடவடிக்கை எடுத்து விடயங்களைச் செயற்படுத்தும் பொறுப்பு அந்தந்தத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

**வவுனியாவில்**

இவ்விடயம் குறித்து வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் நேற்றுத் தெரிவித்ததாவது:-

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வாக்களிக்க வரும் வாக்காளர்களை அடையாள அட்டை அல்லது கிராம சேவகரால் உறுதி செய்யப்பட்ட அத்

(16ஆம் பக்கம் பார்க்க)

### அன்னை பூபதி நினைவு நாள்கள் ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச்.19

இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகி அன்னை பூபதியின் 16 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கிலும் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின்றன.

பூபதி நினைவு நாள்களில் மட்டக்களப்பு, வன்னி உட்பட தமிழர் தாயகம் எங்கும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு பல்வேறு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

அத்துடன், வெளிநாடுகள் பலவற்றிலும் அன்னை பூபதியின் நினைவுதின நிகழ்வுகளை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நினைவு நாள்களின் இறுதி மூன்று தினங்களான ஏப்ரல் 17, 18, 19 ஆகிய நாள்களில் உண்ணாவிரதங்களும் அஞ்சலிக் கூட்டங்களும் இடம் பெறும். (ஐ-4)

# தொடர்பு வைப்பதற்குக் கருணா எடுத்த முயற்சியை நிராகரித்தார் ஜனாதிபதி!

## அவரே வெளியிட்ட தகவல் இது

லண்டன்,மார்ச்19

**புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தொடர்புவைக்க பலதரப்புகள் ஊடாக பலமுறை முயன்றார். ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ அதை அசட்டை செய்து நிராகரித்துவிட்டார்.**

**இந்தத் தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே வெளியிட்டிருக்கிறார்.**

ஜனாதிபதி குமாரதுங்க பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் திருமதி பிரான்சிஸ் ஹரிஸனுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

கருணாவின் பிரச்சினை வெளியாகிய பின்னர் அது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதல் தடவையாக இப்போதுதான் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தன்னுடன் தொடர்பு கொள்வதற்காக தனது கட்சியினரை கருணா பல தடவை அணுகினார் எனவும், ஆனால் இவை எதற்கும் தாம் பதிலளிக்காமல் இருந்து விட்டார் எனவும் இப்பேட்டியில் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்திருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவு அந்த அமைப்புக்குள் ஒரு யுத்தத்துக்குள் போய்முடியும் என்பது எனது உடனடிக் கண்ணோட்டமாக இருக்கிறது

நீண்டகால நோக்கில் பார்த்தால் விடுதலைப் புலிகள் அமைப்பின் பலம் வாய்ந்த இராணுவத் தளபதியான கேணல் கருணா அந்த அமைப்பிலிருந்து விலகியிருப்பது அந்த அமைப்பை

(16ஆம் பக்கம் பார்க்க)

## 14 தமிழகப் படகோட்டிகள் மீது யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு

### சட்டமா அதிபர் தாக்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்19

மீன்பிடிப் படகுகளின் தலைமைப் படகோட்டிகளாக இருந்துகொண்டு கடந்த வருடம் வெவ்வேறு காலப் பகுதிகளில் காங்கேசன்துறை, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மேலும் 14 தமிழக மீனவப் படகோட்டிகள் மீது சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றில் புதிதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம்,இராமநாதபுரம், நாகபட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவப் படகோட்டிகள் மீதே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட 14 தமிழக மீனவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

குருசாமி பாக்கியராஜ், அந்தோனி வின்சன்ற், இராமராஜ்பாண்டி, எமர்சன் ரூபன்ராஜ், முனியாண்டி, கருப்புசாமி, அமலதாஸ - அந்தோனிராஜ் சி.குருசராஜ், பூமிநாதன் -சிவா, இராஜேந்திரன் குணசேகரன், முத்துராஜன் -சின்னமனி, ஆரோக்கியசாமி - பொஸ்கோ, வேலுச்சாமி- முருகேஸ், முனிசாமி -இராமமூர்த்தி, குப்புசாமி -இராமலிங்கம் ஆகிய 14 தமிழக மீனவர்கள் மீதான வழக்குகளே யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே 27 தமிழக மீனவர்கள் மீதான வழக்குகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ஐ-5)

### ஆயிரம் பெண்கள் நாளை மாநாடு

யாழ்ப்பாணம்,மார்ச்19

பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் சுமார் ஆயிரம் பெண்கள் பங்குபற்றும் பெண்கள் சங்கமம் நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் ஒரேயொரு பெண் வேட்பாளரான பத்மினி சிதம்பரநாதனின் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் அங்கு இடம்பெறும்.

பெண்கள் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி குடாநாட்டின் பல் பகுதிகளையும் சேர்ந்த சுமார் ஆயிரம் பெண்கள் இந்த சங்கமம் நிகழ்வில் கலந்துகொள்வர் என்று பெண்கள் பண்பாட்டு மையத்தின் இணைப்பாளர் எஸ்.கிருஷ்ணவேணி தெரிவித்தார்.

### நீதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு

## அரச ஊடகங்களைக் கண்காணிக்க தகுதி வாய்ந்த அதிகாரி வேண்டும்!

### உடனே நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

கொழும்பு,மார்ச்19

பொதுத்தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு உடனடியாகத் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமியுங்கள். இப்படி தேர்தல் ஆணையாளரிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது. இந்தத் தகவலை அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்டார்.

ஊடகவியலாளர்களுக்கு அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்காக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்திலேயே பேராசிரியர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

ஊடக அமைச்சை ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் பின் அரச ஊடகங்களான ரூபவாகினி, ஐ.ரீ.என், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் லேக்கவுஸ் பத்திரிகைகள் ஜனாதிபதியின் தலைமையில் உள்ள சுதந்திரக் கூட்டணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளையே தீவிரமாக முன்னெடுத்துச்செல்கின்றன.

ஜே.வி.பியினரும், ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் அரசாங்கத்தின் மீதும் அமைச்சர்கள் மீதும் உண்மைக்கு மாறான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி சேறு பூசும் செயலில் ஈடுபட்டுவருகிறார்கள். அதற்கு இந்த அரச ஊடகங்கள் வெகுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை எல்லாம்விட ஜனாதிபதி வீட்டில் இருந்தபடியே அடிக்கடி ரூபவாகினி மூலம்தேர்தல் பிரசாரம் நடத்துகின்றார். இதற்குப் பொதுமக்களின் பணம் தான் செலவு செய்யப்படுகிறது. கொஞ்ச நஞ்சமல்ல லட்சக்கணக்கில்!

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அரசாங்கம் முறைப்பாடுகளைச் செய்துள்ளது. தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளைக்கூட அரச ஊடகங்கள் உதாசீனப்படுத்தி வருகின்றன. அரசுக்கு எதிரான சுதந்திரக் கூட்டணித் தேர்தல் பிரசாரம் தங்கு தடையின்றித் தொடர்ந்து வருகின்றது.

எனவே, தேர்தல் ஆணையாளர் தலக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தேர்தல் தொடர்பாக அரச ஊடகங்களைக் கண்காணிப்பதற்கு தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று

(16ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களின் கீழ் செயற்பட்ட

## பதின்மூன்று அமைச்சுக்கள் உடனடியாக அமுலுக்கு வரத்தக்க வகையில் செயலிழப்பு

அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களின் கீழ் முன்னர் இயங்கிய 27 அமைச்சுக்களில் 13 அமைச்சுக்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் செயலிழக்கப்பட்டுள்ளன.

17ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாடாளுமன்ற விவகாரம் தொடர்பான அமைச்சு, உள்நாட்டு மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சுடனும் நகரவசதிகள் சம்பந்தப்பட்ட அமைச்சு, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

நீர்முகாமைத்துவம்,வீடமைப்பு அபிவிருத்தி, வெளிவிவகாரத்துக்கு உதவும் அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபை, உள்ளூராட்சி, சமுர்த்தி, சுற்றுலா அபிவிருத்தி, விவசாயத் தொழில்நுட்பம், பயிர்செய்கை நெற்செய்கைக்கான காணி உரிமை,

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமான சென்றல் - சென். ஜோன்ஸ் பெரும் துடுப்பாட்டக் காட்சிகள்.

# வடக்கின் பெரும் மோதல் கோலாகலமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்19

வடக்கின் பெரும் மோதல் என வாணிக்கப்படும் கிரிக்கெட் ஆட்டம் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி கிரிக்கெட் அணிகள் களத்தில் மோதுகின்ற காட்சி காணப் பெரும் எண்ணிக்கையான கிரிக்கெட் ரசிகர்கள் நேற்று மத்திய கல்லூரி மைதானத்தில் திரண்டனர்.

முதல் நாள் ஆட்டம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்த மாபெரும் கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 101 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக தீர்மானித்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்கமுடியாது திணறியது. மத்திய கல்லூரி அணி தனது முதல இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய கல்லூரி அணிசார்பாக ர.யசிந்தன் மட்டும் அதிகபட்சமாக 37 ஓட்டங்களைப் பெற்றார். ஆர்.மதுஷன் 13 ஓட்டங்களையும், எம்.யசோதரன் 08 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 24 ஓட்டங்கள் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பந்து வீச்சில் 15 ஓவர்கள் பந்து வீசிய எம்மயூரன் 19 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும், 6 ஓவர்கள் பந்து வீசிய என்.நவகீதன் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர். எஸ்.கிருஸ்ணகுமார், ரி.சி.அன்ரூ மற்றும் மதன்ராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ர.அன்புஜன் 27 ஓட்டங்களையும், ரி.மதன்ராஜ் 9 ஓட்டங்களையும்,பி.சகிந்தன் 16 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். எஸ்.கிருஷ்ணகுமார், அணியின் உபதலைவர் சி.எம்.டினேஸ் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 23,16 ஓட்டங்களுடன களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் 19 ஓவர்கள் பந்து வீசிய வி.ரஜிவ்குமார் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஆர்.மதுஷன், ஆர்.சியாம்ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டம் இன்றும் தொடரும்.

நேற்ற முதல்நாள் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் வடக்கின் மாபெரும்போட்டியில் பங்குபற்றும் அணி வீரர்கள், கல்லூரி அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள் மற்றும் இரு கல்லூரிகளின் அணிகளினதும் கடந்தகாலத் தலைவர்கள் ஆகியோர் மாணவர்களின் பாண்ட் வாத்தியம் சகிதம் கல்லூரி கனிஷ்ட பிரிவு வாசலில் இருந்து மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

அங்கு யாழ். மத்திய கல்லூரியின் கொடியினை அதிபர் க.இராசதுரையும், சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கொடியை அதிபர் ரி.தனபாலனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து இரு கல்லூரிகளிலும் கடந்த காலங்களில் அணித்தலைவர்களாக, பயிற்றுவிப்பாளர்களாக செயற்பட்ட சுமார் 20 பேரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து ஆட்டம் ஆரமபமானது. (ஐ-5-86)

முதல்முறையாக மூன்றாம் மத்தியஸ்தத்துடன் போட்டி:

# பொன் அணிகள் போரில் சென்.பற்றிக்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான - மூன்றாவது மத்தியஸ்தம் கொண்ட - பொன் அணிகளின் மாபெரும துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெற்றது.

ராஜன் கதிர்காமர் வெற்றிக் கேடயத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் சென். பற்றிஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியது. இப்பொன் அணிகளின் போர் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

முதன்முறையாக மூன்றாவது மத்தியஸ்தம் கொண்ட போட்டியாக இப்போட்டி நடைபெற்றது. இதற்கென மைதானத்தின் பல கோணங்களிலும வீடியோ கமராக்கள் பொருத்தப்பட்டு மூன்றாவது மத்தியஸ்தர் தொலைக்காட்சி மூலம் போட்டியை அவதானித்துக் கொண்டிருந்தார். அவர் தனது முடிவை வெளியிடுவதற்கான சிவப்பு, பச்சை மின்குமிழ்களும் அங்கு பொருத்தப்பட்டிருந்தன. அத்துடன் இப்போட்டியில் பங்குபற்றிய இரு அணிகளும் தனித்தனியான வர்ண உடைகளை அணிந்து காணப்பட்டன.

யாழ் குடாநாட்டில் முதன்முறையாக சர்வதேச ஒரு நாள் போட்டிகள் போல மூன்றாவது மதியஸ்தத்துடன் வர்ண உடைகளில் விளையாடும் கிரிக்கெட் வீரர்களைக் காணப் பெரும் எண்ணிக்கையான கிரிக்கெட்ரசிகர்களும் மாணவர்களும் மைதானத்தில் திரண்டிருந்தனர். முன்னதாக இரு பாடசாலைகளினதும் அதிபர்கள் பாடசாலைக் கொடிகளை ஏற்றிவைத்தனர். பின்னர் அணிகளின் அறிமுக நிகழ்வு இடம் பெற்றது. இதன் பின்னர் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 37.4 ஓவர்களில் தமது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெறறனர். யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பில் வி.நிருபன் 16 ஓட்டங்களையும் ஜே.செந்தூரன் 17 ஓட்டங்களையும் எஸ்.எம்.திலீபன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென். பற்றிக்ஸ் அணியின் பந்து வீச்சில் ரி.கஜாந்தன் மூன்று ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் ஏ.சுரேன், ஏ.எல்.கஜீவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணியினர் 23.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்களைப் பெற்று தமது வெற்றி இலக்கை அடைந்தனர்.

அந்த அணியின் சார்பில் ஆர்.வினோதன் 23 ஓட்டங்களையும் எ.எல்.கஜீவன், ஆர்.நிசாந்தன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 35, 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்து வீச்சாளர் எஸ்.வை.தனுஜன் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் எஸ்.எம்.திலீபன், எஸ்.தனராஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த வீரர்களில் சிறந்த துடுப்பாளர் மற்றும் சிறப்பாட்டக்காரராக ஏ.எல். சுஜீவனும் சகலதுறை ஆட்டக்காரராக ஆர்.வினோதனும் சிறந்த பந்துவீச்சாளராக ரி.கஜாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரியின் எஸ்.தனராஜன் தெரிவு செய்யப்பட்டார்.


மற்றும் விசேட விருதுகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் தனுஜன் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஏ.சுரேன் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. (ஐ-8-9)

## திருமலையில் வேட்பாளர் விலகல்

திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுவினை சமர்ப்பித்திருந்த நா.சாம்பசிவமூர்த்தி போட்டியிலிருந்து தாம் விலகுகிறார் என்று அறிவித்துள்ளார்.

சுகவீனம் காரணமாகவே போட்டியிலிருந்து தாம் விலகுகிறார் என்று அவர் தெரிவித்துள்ளார். திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும் முதலாவது வேட்பாளர் இவராவார்.





வட்டுக்கோட்டை மைதானத்தில் இடம்பெற்ற பொன் அணிகள் போரின் காட்சிகள். (படங்கள்: வசந், தேவா)

# கிழக்குப் பல்கலைக்குச் செல்ல திருகோணமலை மாணவர் மறுப்பு

திருகோணமலை,மார்ச்19

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் புதன் கிழமை ஆரம்பித்த போதிலும் திருகோணமலை மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நாம் பல்கலைக் கழக பதிவாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக திருகோணமலை மாவட்டக் கிழக்குப் பலகலைக்கழக மாணவர் சங்கச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிலவும் சிக்கலான சூழ் நிலையில் தாங்கள் பல்கலைக் கழகம் செல்வதைத் தமது பெற்றோர் விரும்பவில்லையெனவும், சாதாரண நிலை உருவாகும்வரை வகுப்புக்களைப் பிற்போடுமாறும் கடிதத்தில் தெரிவித்திருப்பதாக மாணவர் சங்கச செயலாளர் தெரிவித்தார். (ஐ-8)

## குடும்ப அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ்,பெரியகடை (ஜே.80) கிராம சேவையாளர் பிரிவில் உணவுப் பங்கீட்டு அட்டை, குடும்ப அட்டை ஆகியன மீளாய்வு செய்யப்படுவதாக அந்தப்பகுதி கிராம சேவையாளர் எம்.ஆர். கே.ரட்ணராஜா அறிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள இந்த மீளாய்வு எதிர்வரும் 22ஆம் திகதி வரை இடம்பெறும் என றும் -

இக்காலப்பகுதியில் தமது அட்டைகளை மீளாய்வு செய்து கொள்ளும் படியும் அவர் கேட்டுள்ளார்.

(எ-3)

இன்று யாழ். நகரில் விசேட நிகழ்வு

# குழாய் பொருத்துநர்களுக்கு ஆயுட் காப்புறுதிச் சான்றிதழ்

## மின்னிணைப்பாளர் பயிற்சி நெறியும் இடம்பெறும்

எஸ்-லோன் குழாய் பொருத்துநர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு ஆயுட் காப்புறுதி வழங்கும் விசேட வைபவம் இன்று யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் (ரெலிகொம் அலுவலகத்துக்கு அருகில்) நடைபெறவுள்ள இந்த விசேட வைபவத்தை, எஸ்-லோன லங்கா நிறுவனத்தினர் ஏற்பாடு செயதுள்ளனர்.

எஸ்-லோன் குழாய் பொருத்துநர் சங்க அங்கத்தவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை போட்டி நடத்தி, அந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படுவது நடைமுறையாகும்.

அந்த வரிசையில் இன்று நடைபெறும் வைபவத்தில், கெவில்ரன் மின்னிணைப்பாளர் பயிற்சி நெறியும் இடம்பெறவுள்ளது. மின்னிணைப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 300 பேர் இந்த ஒருநாள் பயிற்சி நெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறியை (கெவில்ரன் - Kevilton மின்னிணைப்பாளர் பயிற்சித் திட்டத்தை) எஸ்-லோன் லங்கா நிறுவனமும் தேசிய கைத்தொழில் அதிகார சபையும் இணைநது நடத்தவுள்ளன.

பிரஸ்தாப பயிற்சி நெறியின் பின்னர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பரீட்சை மட்டும் நடத்தப்பட்டு தேசிய தொழில் பரீட்சை - தரம் III National Trade Test Grade - III) சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்படி சான்றிதழைப் பெறுபவர்கள் கெவில்ரன் மின்னிணைப்பாளர் சங்கத்தில் சேர்க்கப்படுவர். கெவில்ரன் மின்னிணைப்பாளர் சங்கத்தில் சேர்க்கப்பட்டுவோருக்கு ஆயுட்காலக் காப்புறுதிச் சான்றிதழ் வழங்குதல், தொழில் ஊக்குவிப்பு மற்றும் பல சலுகைகள், பதிவுகள் என்பன வழங்கப்படும்.

### கிளிநொச்சியில்

இதேவேளை - நேற்று வியாழக் கிழமை கிளிநொச்சியில் 44 பேருக்கு கெவில் ரன் மின்னிணைப்பாளர் பயிற்சித் திட் டம் வழங்கப்பட்டது.

இவர்களுக்கு விரைவில் வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் பரீட்சை நடத்தப்பட்டு தேசிய தொழிற்பரீட்சை தரம் III சான்றிதழ் வழங்கப்படும். (அ)

# பக்தாத்தில் பெரும் குண்டுவெடிப்பு! 27 பேர் பலி; 45 பேர் வரை படுகாயம்!!

## ஈராக்கை உலுக்கிய மற்றொரு கோரம்

பக்தாத்,மார்ச்19

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மிக மோசமான குண்டுத்தாக்குதலில் ஐந்து மாடி ஹோட்டல் ஒன்று நாசமானது. 27 பேர் உயிரிழந்தனர்; 45 பேர் படுகாயமடைந்தனர்.

நகரின் மத்தியில் அமைந்திருந்த சிறிய ஹோட்டல்களுள் ஒன்றான 'மவுண்ட் லெபனான்' ஹோட்டலே இத்தாக்குதலுக்கு இலக்கானது.

சுமார் 450 கிலோ (ஆயிரம் இறாத்தல்) வெடிபொருள்களைக் கொண்ட கார் ஒன்றின் மூலமே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதை உறுதிப்படுத்துவது போல ஹோட்டலின் முன்புறம் கார் குண்டு வெடித்தாகக் கருதப்படும் இடத்தில் பத்து அடி ஆழத்திற்கு பெரிய கிடங்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால், ஹோட்டலை நோக்கி ரொக்கெட்டுக்களை ஏவியும் தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. ரொக்கெட்டுக்கள் வந்து தாக்கியதை தாங்கள் கண்டதாக சிலர் கூறியிருக்கின்றனர்.

ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தை அடுத்து ஏப்ரலில் பக்தாத் வீழ்ந்தது. அச்சமயம் பக்தாத் நகர மத்தியிலிருந்த - அப்போதைய ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் - பாரிய சிலை ஒன்றை அமெரிக்கப் படைகள் கிரேனின் உதவியுடன் இழுத்து வீழ்த்துவதைக் காட்டும் வீடியோக் காட்சி நேரடியாக உலகம் முழுவதும் ஒளிபரப்பப்பட்டது.

அந்தச்சிலை இடித்து வீழ்த்தப்பட்ட இடத்திற்கு மிக அருகில் உள்ள ஹோட்டல் மீதே தற்போது மிக மோசமான வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.



குண்டுத்தாக்குதலில் கருகிப் போன ஹோட்டல்

தாக்குதலினால் ஹோட்டல் கட்டடம் மாத்திரமல்ல, அருகிலிருந்த வேறு பல கட்டடங்களும் நாசமாகின. குண்டு வெடிப்பின் அமுக்கம் அதிர்ச்சி தருவதாக இருந்தது என்று பக்தாத் செய்திகள் தெரிவித்தன.

இந்தக் குண்டுவெடிப்பின் அதிர்வால் அதற்கு அரை மைல் தூரத்திற்கு அப்பால் இருந்த கட்டடங்களின் ஜன்னல்கள்கூட சிதறியதாகக் கூறப்படுகின்றது.

குண்டு வெடித்ததும் அப்பிரதேசம் எங்கும் தீப்பற்றிக்கொண்டது. நாசமான கட்டடங்களில் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. நீண்ட போராட்டத்தின் பின் தீ கட்டப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும், அந்தக் கட்டடப் பகுதியிலிருந்து கிளம்பிய கரும்புகை பக்தாத்தில் பலமைல்களுக்கு அப்பாலும் தென்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தக்குண்டு வெடிப்பில் உள்ளூர் ஈராக்கியர்களும் ஏனைய அரபு நாடுகளைச் சேர்ந்த பலரும் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏனெனில், இந்த சிறிய ஹோட்டலில் உள்ளூர் ஈராக்கியர்களும் அரபு நாடுகளைச்சேர்ந்தோருமே பெரும்பாலும் தங்கிவருவது வழமை என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா, பிரிட்டிஷ் மற்றும் ஏனைய மேற்கு நாட்டுப் பிரஜைகள் பெரும்பாலும் இங்கு தங்குவதில்லை.

இக் குண்டு வெடிப்பில் எகிப்தியர் பலர் உயிரிழந்தனர் என்றும், காயமுற்றவர்களில் ஒரு சில பிரிட்டிஷ் பிரஜைகளும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"இந்தப் பகுதியில் கூட்டுப் படையினர் எவரும் செயற்படுவதில்லை என்பதால் கூட்டுப்படையினருக்கு எதிரான தாக்குதல் அல்ல இது" - என்று அந்தப் படைகளின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் -

அரபு நாட்டு தொலைக்காட்சி ஒன்று தன்னுடைய நிகழ்ச்சி ஒன்றை ஒளிப்பதிவு செய்வதற்காக சற்றுத் தொலைவில் உள்ள கட்டடம் ஒன்றின் மாடி அறையில் தொலைக்காட்சிக் கமராவைப் பொருத்தி தயாராகிக் கொண்டிருந்த சமயம் இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்திருக்கின்றது.

தொலைக்காட்சியில் தோன்ற இருந்தவரின் பின் புறத்தில் ஜன்னல் வழியாக குண்டு வெடித்து அதிர்வோடு பெரும் தீப்பிழம்புவிரிந்து பரவுவதையும், அந்த அதிர்ச்சியில் தொலைக்காட்சியில் தோன்ற இருந்தவர் முன்னே பாய்ந்து விழுந்ததையும் அந்தத் தொலைக்காட்சி பின்னர் ஒளிபரப்பியது.

குண்டு வெடித்த இடத்தின் கோரக் காட்சிகளையும் சில ஊடகங்கள் ஒளிபரப்பின.

இடிபாடுகளுக்கு இடையிலிருந்து மீட்கப்பட்ட இளம் சிறுமியான தனது மகளின் கால் பகுதியை மட்டும் வைத்துக்கொண்டு கதறும் ஒரு தந்தையின் சோகத்தையும் சர்வதேச ஏஜென்ஸி ஒன்று ஒளிபரப்பியது. (ம-க)

## செவ்வாய்க் கிரகத்தில் உறைநிலையில் தண்ணீர்!

செவ்வாய் கிரகத்தை ஆராய ஐரோப்பிய நாடுகள் எக்ஸ்பிரஸ் என்ற விண்வெளிக்கலத்தை அனுப்பியுள்ளன. அந்த விண்கலம் எடுத்து அனுப்பிய படங்களில் செவ்வாய்க் கிரகத்தின் தென் துருவப்பகுதியில் தண்ணீர் ஏராளமாக இருப்பது தெரிய வந்துள்ளது. 3 வெவ்வேறு நிலைகளில் தண்ணீர் உறைந்து இருக்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஐஸ்கட்டிகளாக இறுகிய தண்ணீரில் ஏராளமான கார்பன்டை ஒக்சைடு சேர்ந்திருப்பது முதல் நிலை. இங்கு ஆண்டு முழுவதிலும் தண்ணீர் காணப்படுகிறது. வெய்யில் குளிருக்கு ஏற்ப இங்கு தண்ணீர் பரப்பு சுருங்கியும், விரிந்தும் மாறுகிறது. துருவப்பகுதியை அடுத்துள்ள இடங்களில் தண்ணீர் உறைந்து காணப்பட்டாலும் அதில் கார்பன்டை ஒக்சைடு இல்லை. இது இரண்டாம் நிலை. இன்னும் சற்று தொலைவில் பனிப்பாறைகளும் தூசும் சேர்ந்து காணப்படுகின்றன. இது மூன்றாம் நிலை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ம)

## புஷ்ஷின் கோரிக்கை நிராகரிப்பு!

பக்தாத்,மார்ச்19

ஈராக் விடயத்தில் அமெரிக்க நிலைப்பாட்டுக்கு ஆதரவாகச் செயற்படும்படி அமெரிக்க ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஸ்பெயினின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜொஸ் லூயிஸ் றொட்றிகஸ் ஸப்பட்டரோ நிராகரித்து விட்டார்.

"எனது நிலைப்பாடு மாறவில்லை; நாம் எமது நிலைப்பாட்டை தேர்தல் பிரசார காலத்திலேயே தெரியப்படுத்திவிட்டோம். ஆக்கிரமிப்பு குழப்பகரமான நடவடிக்கை. ஈராக்கில் யுத்த காலத்திலும் பார்க்க அதற்குப் பின்தான் - இப்போதுதான்- அதிகளவில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

"நிலைமையைத் தனது கட்டுப்பாட்டில் ஐ.நா.சபை கொண்டுவருவதற்கு ஆக்கிரமிப்புப் படைகள் அனுமதிக்கவில்லை. ஐ.நா.சபை ஈராக்கைப் பொறுப்பேற்காவிட்டால் ஜூலை முதலாம் திகதி ஈராக்கில் உள்ள அனைத்து ஸ்பானியப் படைகளும் திருப்பி அழைக்கப்பட்டுவிடும்" - என்று அறிவித்திருக்கின்றார் ஸப்பட்டரோ. (ம-க)

## மூன்று பிள்ளைகளை விற்று நிதிதிரட்டி தேர்தலில் குதிக்க விரும்புகிறார் ஆசிரியர்!

ஒரிஸா,மார்ச்19

தனது மூன்று குழந்தைகளையும் விற்றுப்பணம் திரட்டி, அதைக் கொண்டு தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளார் ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பள்ளி ஆசிரியர்.

அவர் அந்த விபரீத முடிவுக்கு வரக் காரணம் ஹிந்திப்பாட நூலில உள்ள பிழைகளைத்திருத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்காததுதான்.

ஒரிசாவின் பலாங்கீர் மாவட்டம், பாங்கோமுண்டா வட்டம், பார்பள்ளியில் உள்ள உயர் நிலைப்பள்ளியில் ஆசிரியராக இருப்பவர் சரத் பெஹரா.

'ஹிந்திப்பாட நூலில் பல பிழைகள் உள்ளன. அவற்றைத் திருத்தி புதிய நூலை அரசு வெளியிடவேண்டும்' என்று மாநில அரசுக்கு அவர் கோரிக்கை விடுத்தார். ஆனால், அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை. அது தொடர்பாக நீதிமன்றத்தையும் அவர் அணுகினார்.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி கந்தபஞ்சியில் தாலுகா அலுவலகம் முன் வழிமறிப்புப் போராட்டமும் நடத்தினார். கடைசியில் தானே அரசியலில் குத்துவிட முடிவுசெய்தார் ஆசிரியர் சரத்.

"ஒரிஸாவில் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் கந்தபஞ்சி தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடத்திட்டமிட்டுள்ளேன். ஆனால், செலவுக்குப் பணம் இல்லை. எனவே, வாங்குவதற்கு ஆள்கிடைத்தால் எனது குழந்தைகள் மூவரையும் விற்றுப்பணம் திரட்ட முடிவு செய்துள்ளேன்" என்றார் ஆசிரியர் சரத்.

பாங்கோமுண்டா வட்டத்தில் வறுமையில் வாடும் மக்கள் தமது குழந்தைகளை விலைக்கு விற்கிறார்கள் என அடிக்கடி செய்திகள் வருவதுண்டு. ஆனால், அரச அதிகாரிகள் அதை மறுத்து வந்துள்ளனர். (ம-க)

## சேர்பிய-அல்பேனிய இனத்தவரிடையே கொசோவோவில் கலவரம் 22 பேர் பலி!

கொசோவோவில் சேர்பியர்களுக்கும் அல்பேனிய இனத்தவர்களுக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டை, கலவரம் மற்றும் தெருச் சண்டை என்பவற்றில் சிக்கி 22 பேர் உயிரிழந்தனர். 500இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

நேற்று வியாழக்கிழமையன்று வட அத்திலாந்திக் நாடுகளின் கூட்டமைப்பான நேட்டோ அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தார்கள்.

பொல்ஜி என்ற நகரத்தில் புதன் கிழமையன்று இந்தக் கலவரம் ஆரம்பமானது. கார்கள் எரிக்கப்பட்டன. வீடுகள் தாக்கப்பட்டன.

இந்த நகரம் இரு இனத்தவர்களும் கலந்துவாழும் பகுதியில் அமைந்துள்ளது. மிட்ரோவிக்கா என்ற பட்டினத்திலேயே கலவரம் ஆரம்பமாகியது என்று தெரிவிக்கப்படுகின்றது. அல்பேனிய இனத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் சேர்பியர்களால் விரட்டப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து தெருச் சண்டைகள் ஆரம்பமாகின. அவை பரவி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் வரை சென்றுள்ளன.

கலவரங்கள் மேலும் பரவாமல் அவற்றைக் கட்டுப்படுத்தி நிலைமையை சுமுகமாக்க அங்குள்ள நேட்டோப் படைகள் முழு முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன. 1999ஆம் ஆண்டு கொசோவோ போரின் பின்னர் நேட்டோ தலைமையிலான படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கலவரம் இடம்பெற்ற பொல்ஜி நகரில் சேர்பியர்கள் வசிக்கும் பகுதியையும் அல்பேனிய இனத்தவர்கள் வசிக்கும் பகுதியையும் பிரிக்கும் பாலம் ஒன்று உள்ளது. அதனைத் தாண்டி சேர்பியப் பகுதிகளுக்குள் அல்பேனியர்கள் நுழைவதைத் தடுக்க நேட்டோ தலைமையிலான படையினரும் ரோமானிய பொலீஸ் பிரிவினரும் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் றப்பர் குண்டுகளையும் வீசி அல்பேனியர்களின் ஊடுருவலைத் தடுப்பதில் அவர்கள் ஈடுபட்டனர் என்று செய்திகள் கூறுகின்றன.

பெரிய அளவில் உயிரிழப்புக்களை ஏற்படுத்தி உள்ள இந்தச் சம்பவம், அங்கு இரு இனத்தவர்களுக்கும் இடையில் நல்லுறவை வளர்க்க ஐ.நாவும் நேட்டோவும் மேற்கொண்டு வரும் முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளமையைக் காட்டுகின்றன என்று செய்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கலவரங்களில் ஐ.நா. அதிகாரிகளும் நேட்டோப் படையினரும்கூட காயமடைந்துள்ளனர்.

கலவரங்களுக்குப் பயந்து ஆயிரக்கணக்கான சேர்பியர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். (ம)



கலவரத்தை அடக்கும் பணியில் நேட்டோப் படையினர்.

### துருக்கியில் இனக்கலவரம்; 14 பேர் பலி!

இஸ்தான்புல்,மார்ச்19

துருக்கியில் சிறுபான்மை குர்து இன மக்களுக்கும் மற்ற இனத்தவர்களுக்கும் இடையே கடந்த சில நாள்களாக மோதல் இடம்பெற்று வருகிறது. இந்த மோதலில் கடந்த 3 நாள்களில் மட்டும் 14பேர் பலியாகி விட்டனர்.

இதில் 3 பேர் உயிரோடு எரித்து கொல்லப்பட்டனர். இதைத்தொடர்ந்து இஸ்தான்புல் அருகே மூன்று பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், கலவரம் ஓய்ந்தபாடில்லை. இப்போது மேலும் இரு நகரங்களுக்கு கலவரம் பரவியிருக்கிறது.

### லொட்டரிச் சீட்டில் ரூ.800 கோடி பரிசு!

அமெரிக்காவில் வேலை இழந்த ஒரு வாலிபருக்கு லொட்டரியில் சுமார் 800கோடி ரூபா 'ஜாக்பொட்' பரிசு கிடைத்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள இண்டியானா மாகாணத்தில் உள்ள சேலம் என்ற ஊரைச் சேர்ந்தவர் டிம் ரிவர்ஸ். இவர் ட்ராக்டர் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்துவந்தார். பிறகு ஏதோ ஒரு காரணத்திற்காக அந்த வேலையில் இருந்து நீக்கப்பட்டார்.

வேலை பறிபோன டிம் ரிவர்ஸ் வேலை கிடைக்காமல் அவதிப்பட்டு வந்தார். அடுத்தவேளை சாப்பாட்டுக்குக்கூட பணம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். தங்குவதற்குக் கூட இடமில்லாமல் அவதிப்பட்டார்.

எப்படியோ சிறிதுபணம் சேர்த்து இண்டியானா மாநில லொட்டரியான 'கவர்பால்' என்ற லொட்டரியில் சீட்டு ஒன்றை வாங்கினார்.

'கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்' என்பார்களே, அதேபோல் அவர் வாங்கிய கவர்பால் லொட்டரிச் சீட்டிற்கு 800 கோடி ரூபா ஜாக்பொட் பரிசு விழுந்துள்ளது. இந்த ஜாக்பொட் பரிசுத் தொகையின் வரிகள் போக அவருக்கு 500 கோடி ரூபா கிடைக்கும்.

இதை வைத்துக்கொண்டு தான் மகிழ்ச்சியோடு வாழப்போகிறார் எனவும் சொந்தவீடு, கார் வாங்கப் போகிறார் எனவும் அவர் கூறினார். தம்பதிகள் இருவரும் அந்த லொட்டரி சீட்டை நிறுவனத்திடம் கொடுத்து பரிசுத்தொகையை பெற்றுக்கொண்டனர்.

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2449479 இருந்து
2465132 வரை
சீட்டிழுப்பு இல. 1488
திகதி 17.03.2004



**வெற்றி எண்கள்** 17 35 38 39 47 போனஸ் எண் 03

**ஜக்பொட் பரிசு**

**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 86 | 10,000/- | 860,000/- |
| 3 | 4,948 | 500/- | 2,474,000/- |
| 2 | 82,154 | 20/- | 1,643,080/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 17ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 100,542 | 10/- | 1,005,420/- |

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் **ரூபா.2,277,850/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,182,500/-

தொடர் இல. 3417324க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 மார்ச் 20ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2450803-0-14
2454521-3-90
2463766-8-73
2452828-5-21
2452476-6-14

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# தேர்தல் - 2004

TRRO

இலங்கையில் தேர்தல் முறைமை பற்றிக் கற்றுக்கொள்வோம்.

எமது மக்கள் அடிக்கடி தேர்தல்களை முகங்கொள்ளவேண்டியவர்களாக உள்ளார்கள்.

வாக்காளர்களாகிய நாம்,
**வாக்களிப்பது எப்படி, வாக்களிக்கும் உரிமையின் பெறுபேறு என்ன**
என்பதனைக் கற்றுக்கொள்வோம்.

**X யாழ். தேர்தல்களம் மீது ஆர்வமுடைய அனைவரும் கலந்துகொள்ளலாம் X**

தலைமை - **வி.ஸ்ரீசக்திவேல,** தலைவர். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
கருத்துரை வழங்குவோர் - **பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
(முன்னாள் துணைவேந்தர்)
**கே.ரி.கணேசலிங்கம்,**
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

**காலம்: 19.03.2004 வெள்ளிக்கிழமை**
**காலை - 9.00 மணி**

**இடம்: கேட்போர் கூடம்**
**106, 4ஆம்குறுக்குத்தெரு,**
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.
யாழ்ப்பாணம்.

**சென்றமுறை தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 5.4% வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.**

(C/33708)(34-14-24)


# மரண அறிவித்தல்கள்

## விசுவலிங்கம் சுப்பிரமணியர்



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் No.06, செட்டித்தெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் பிரதமகர்த்தா விசுவலிங்கம் சுப்பிரமணியர் (பாட்டுக்காரப் பராசர்) நேற்று 18.03.2004 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*No.06, செட்டித்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சு.பாலசுப்பிரமணியம் - மகன்

(29798) (26-14-24)

## கந்தையா தனபாலசிங்கம்

(மின்மானி வாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், கந்தர்மடம், இல.14/1, புகையிரத வீதியைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் அவர்கள் கடந்த 16.03.2004 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமியின் அன்பு மகனும் இந்திராவின் அன்புக் கணவரும் ஜெயரஞ்சினி (பிரான்ஸ்), சுஜீவன், சுஜேந்திரன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), சுதாகரன் (கொழும்பு), ஜெயசீலி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகதாஸ் (பிரான்ஸ்), றஜனி, செல்வமலர், ஜெனோதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிஷோர், சஜிதா, பவித்ரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் குணபாலசிங்கம், செல்வராசா, பத்மநாதன், காலஞ்சென்ற தவமணி, நேசமலர், தேவிகா, இராசமலர், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வண்ணை கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 14/1, புகையிரத வீதி,*
*கந்தர்மடம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-33715) (24-14)

வன்னியில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும்

# வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டம்

கிளிநொச்சி,மார்ச்19

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெயர்ந்து வாழும் வறுமைக் கோட்டுக்குக்கீழுள்ள 250 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்றைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடைமுறைப படுத்தவுள்ளது.

முல்லைத்தீவு, புதுக்குளத்தில் 50 வீடுகளும் வவுனியா, கனகாம்பிகைக் குளத்தில் 25 வீடுகளும் மாங்குளத்தில் 25 வீடுகளும் மன்னார், அடம்பனில் 50 வீடுகளும் கிளிநொச்சியில் 50 வீடுகளும் அறிவியல் நகரில் 50 வீடுகளும் முதற்கட்டமாக அமைக்கப்படவிருக்கின்றன.

இடம்பெயர்ந்து வீடுகளை இழந்த குடும்பங்களில் மிகவும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் வழங்கப்படவிருக்கின்றன.

வீடமைப்புப் பணிகளில் அந்தக் குடும்பங்களின் பங்களிப்பும் பெறப்படுகின்றது என்றும் - தெரிவிக்கப் பட்டது.

இத்திட்டம் விரைவில் பூர்த்தியடைந்தபின் வேறு பிரதேசங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-3)

## மண்டபத் திறப்புவிழா

மாதகல் சென்.யோசவ் மகாவித்தியாலயத்தின் சென்.யோசவ் தினமும், சென்யோசவ் பிரார்த்தனை மண்டபத்திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும், மாதகல் பங்குத்தந்தை அருட்தந்தை சீ.கிறிஸ்தோபர் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-ரி-95)

## இலவச கண்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச்19

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண்சிகிச்சை முகாமும, பொதுமருத்துவ முகாமும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடியிலுள்ள நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நீரிழிவு நோயாளர்களுக்கான பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன.(ம-ரி)

## எரிபொருள் நிரப்பு நிலையத்தை மீண்டும் இயக்கக் கோரிக்கை

வலி. வடக்கு,மார்ச்18

மருதனார்மடத்தில் இயங்கிய தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இணுவில் பகுதி விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

மருதனார்மடம் சந்தியில் அமைந்திருந்த எரிபொருள் நிரப்பு நிலையம் திடீரென மூடப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் வாகன உரிமையாளர்கள் இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் மூலம் தமது தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தனர்.

கடந்த சில வாரங்களாக இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் மூடப்பட்டு இருப்பதனால் விவசாயிகளும் மற்றும் வாகன உரிமையாளர்களும் பல்வேறு சிரமங்களையும் அடைகின்றார்கள். (ம-86)


## வேலைக்கு ஆள்தேவை

எமது தொலைத் தொடர்பகத்தில் பணிபுரிவதற்கு ஆண், பெண் இருபாலாரும் வேண்டப்படுகின்றனர். விரும்புபவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
**நமிலாஸ் தொலைத் தொடர்பகம்**
நெல்லண்டை, பருத்தித்துறை.
021-2263149

(29805)



## வெளிவந்துவிட்டது

**தரம் 5 புலமைப் பரிசில் வழிகாட்டி**

(எல்லாப் பாடங்களையும் உள்ளடக்கியது)

ஆசிரியர்: **வே.அன்பழகன்**

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
**T.P.:0777 244094.**

(29803)


## பரிசளிப்பு விழா

செம்பியன்பற்று,மார்ச்19

கரவெட்டி, மாணிக்கவாசகர் வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி கலந்துகொள்வார். (ம-118-ரி)


## தொழிலாளர்கள் உடனே தேவை

கொழும்பில் கட்டடத் தொழிலில் முன்னணி வகிக்கும் நிறுவனம் தான் செய்யும் யாழ். கல்வியியற் கல்லூரியின் பல கோடி ரூபா பெறுமதியான கட்டட வேலைகளுக்குப் பின்வரும் தொழிலாளர்களை வேலைக்கு உடனே அமர்த்த விரும்புகின்றது.

☆ மேசன்மார்
☆ தச்சுத்தொழிலாளர்
☆ கம்பி முறுக்குவோர்
☆ பயிற்சிபெற்ற தொழிலாளர்
☆ பயிற்சி பெறாத தொழிலாளர்
☆ வர்ணம் பூசுவோர்

மிகவும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
**வேலை பெறவிரும்புவோர் வேலை நேரத்தில் நேரில் தொடர்புகொள்ளவும்.**

ஐ.சி.சி.வேலைத்தளம்,
**தேசிய கல்வியியற் கல்லூரி,**
**இராசபாதை, கோப்பாய்.**

(29808) (26-14-24)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மீசாலையைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டு J/301 கோயில் குடியிருப்பு கிராம அலுவலராக நீண்டகாலம் பணியாற்றி தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் தரம்1 பதவியுயர்வு பெற்ற

**திரு.க. செல்வராசா**

*அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

*தமிழினி பனை மரக்காலை,*
*மீசாலை தெற்கு, சாவகச்சேரி.*

**நா.சரவணமுத்து குடும்பம்,**
**க.கருணேஸ்வரன் குடும்பம்.**

(29800) (26-14-24)


## தனியார் சுத்திகரிப்புச் சேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்புச் சேவையை 01/07/2004 தொடக்கம் 30/06/2005 வரை வழங்குவதற்குத் தனியார் சுத்திகரிப்புச் சேவை நிலையங்களிலிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை | - | 40 |
| மேற்பார்வையாளர்கள் | - | 04 |
| விண்ணப்ப முடிவுதிகதி | - | 31.03.2004 |

விண்ணப்பங்கள் 31.03.2004 10.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் கேள்விகள் திறக்கப்படும். தகுதியுடைய தனியார் சுத்திகரிப்பு நிலையங்கள் நேரிலோ தபால் மூலமோ *பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

,கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி **எஸ்.சதுர்முகம்**
*பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

(C/33709)(34-24-14)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22 - 03 - 1948



மறைவு 19 - 02 - 2003

## அமரர் வேலாயுதம் கணபதிப்பிள்ளை

(முன்னாள் சாரதி, வடபிராந்திய இ.போ.ச.)

நாள்கள் முப்பத்தி ஒன்று ஆயிற்றே!
நீங்கள் மறைந்து?
கள்ளமில்லா வெள்ளை உள்ளமும்
கனிவுமிக்க பொன் மொழிகளும்
புன்னகை மாறா பொன்முகமும்
கொண்ட எம்மினிய தெய்வமே!

*தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (19-03-2004) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மட்டுவில் வடக்கு,*
*சந்திபுரம், சாவகச்சேரி.*

(29804) (26-14-24)

- குடும்பத்தினர்.

உதயன்

# கட்டுமீற முன்னர் கட்டுப்படுத்துக!

"கிழக்கில் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா ஏற்படுத்தியுள்ள பிரச்சினை ஒரு தற்காலிகக் கோளாறே. அது காலக்கிரமத்தில் தீர்க்கப்பட்டு விடும். அந்தப் பிரச்சினையால் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கோ, தமிழ்த் தேசியப் போராட்டத்துக்கோ எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாது" - இவ்வாறு தெளிவுபடுத்தியிருக்கின்றார் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

என்றாலும்கூட, இந்தப் பிரச்சினையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய தென்னிலங்கைச் சக்திகளினால் விபரீத விளைவுகள் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

"அங்கீகாரத்தையும் சலுகைகளையும் பெறுவதற்காக இராணுவத் தலைமையோடும், பேரினவாத அரசியல் சக்திகளோடும் ஒளிவுமறைவான தொடர்புகளைக் கருணா இப்போது ஏற்படுத்தியுள்ளார். கருணாவின் இந்தக் குளறுபடிப் போக்கை எவரேனும் வஞ்சகமாகப் பயன்படுத்துவதற்கு முயன்றால் அது சமாதான நடவடிக்கைகளுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பை ஏற்படுத்திவிடும் என்பதை அவரது அந்தத் தொடர்பாளர்களுக்குக் கூறி வைக்க விரும்புகிறோம்" - என்று ஓர் எச்சரிக்கைத் தகவலையும் வெளியிட்டிருக்கின்றார் பாலசிங்கம்.

புலிகளின் தலைமையில் இருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டுவிட்டார் எனக் கருணா நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டை - இயக்கப் போக்கை - அறிந்தவர்கள் கருணாவின் ஒவ்வொரு நகர்வும், நடவடிக்கையும் புலிகளின் தலைமைக்குத் துல்லியமாகத் தெரிந்து கொண்டுதான் இருக்கும் என்ற உண்மையை ஒப்புக் கொள்வார்கள்.

இராணுவத்தின் எந்தப் பிரிவு, எந்த முகாம் ஊடாக, எந்த அதிகாரி மூலமாகக் கருணாவுடன் தொடர்புகளை வைத்துக் காய்களை நகர்த்துகின்றது என்பதெல்லாம் புலிகளின் தலைமைக்கு நன்கு தெரிந்தே இருக்கின்றது என்பதை இராணுவத் தரப்பு மறந்துவிடாமல் இருப்பது நல்லது.

இலங்கை அரசின் ஆட்சி நிர்வாக முறையில் இப்போது சிறிய குழப்ப நிலை - இழுபறி - உள்ளது.

இலங்கைத் தரப்பில் சமாதான முயற்சிகள், பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் போன்றவற்றுக்கு யார் பொறுப்பு என்பதில் சிக்கல்கள் உள்ளன. அரசுக்குத் தலைமை வகிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவா அல்லது நாட்டின் தலைவியான ஜனாதிபதியா இதற்குப் பொறுப்பு என்பதில் உறுதியான - தெளிவான - நிலைமை இல்லை. இதைப் பயன்படுத்தி - சந்தர்ப்பத்தைப் பாவித்து - 'வெட்டி ஓடுவதற்கு' இராணுவத்தரப்பு முயல்வதாகப் புலிகளுக்குத் தகவல்கள் எட்டி வருகின்றன என்று தெரிகிறது.

இராணுவத்தின் மின்னேரியாத்தளத்தை மையமாக வைத்து அரங்கேறும் விவகாரங்களைப் புலிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றார்கள்.

புலிகள் இயக்கத்தில் மட்டுமல்லாமல், வடக்கு - கிழக்குத் தமிழர்கள் உட்பட முழு ஈழத் தமிழ் சமுதாயத்தினாலுமே, கீழ்த்தரமான காட்டிக்கொடுப்பு மற்றும் வஞ்சகத்தனமான போக்கு ஆகியவற்றின் காரணமாக இன்று வெறுத்தொதுக்கப்படும் பிரகிருதி கருணா. தமக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமையால் விரக்தியின் விளிம்புக்குச் சென்றிருக்கும் கருணா, தன்னை நிலை நிறுத்திக்கொள்வதற்காக எந்த மட்டத்துக்கும் கீழிறங்கி, இனத்துக்கு எதிரான இழிசெயல் புரிவதற்கும் தயங்கமாட்டார் என்பதை இராணுவத்தரப்பு நன்கு உணர்ந்திருக்கின்றது.

இந்த உறுதியை வைத்துக்கொண்டு சில தந்திரோபாய நகர்வுகளை மேற்கொள்ள முயல்கின்றது இராணுவத் தலைமை.

புலனாய்வுப் பிரிவில் முன்னிலை வகித்த அதிகாரிகளின் கைகளில்தான் இன்று கூட்டுப்படைத் தலைமையும், இராணுவமும் உள்ளன. தங்களுடைய அனுபவமிக்க, வழமையான செயற்பாட்டை - கைவரிசையைக் - காட்ட முயல்கின்றனர் இந்த அதிகாரிகள்.

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் இத்தகையோரின் போக்கும் செயற்பாடும் தற்காலிகமாகச் சில வெற்றிகளை அவர்களுக்குத் தரலாம். ஆனால், அதன் இறுதி விளைவு மதியுரைஞர் பாலசிங்கம் சுட்டிக்காட்டுவதுபோல விபரீதமாகத்தான் இருக்கும்.

படைத்தரப்புக்கு நீண்ட கயிற்றைக் கொடுத்து அவர்கள் ஓடும் அளவுக்கு ஓடவிட்டிருக்கும் நாட்டின் அரசியல் தலைமை, இவ்விடயத்தில் நேரத்துடன் எச்சரிக்கை அடைவது நல்லது. இல்லையேல், 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதை' போல, நிலைமை சீர்கெட்டு மோசமான பின்னர் நடவடிக்கை எடுப்பதாக விவகாரம் போய் முடிந்துவிடும்.

தமிழர் தரப்பில் உண்டாகியிருக்கும் தற்காலிகமான - மிகச் சிறிய - பிணக்கைத் தமக்குச் சாதகமாக்கி அதில் குளிர்காய்ந்து தமது அரசியலை வளர்ப்பதற்குச் சிங்களத் தலைமைகள் முயன்றால் அது நாசகாரமான எதிர்விளைவுகளுக்குத் தூபமிடுவதே அன்றி வேறல்ல.

### யாழ். பல்கலைக்கழகத்தில்

# ஆங்கிலப் பாடத்தில் சித்திபெறாமையினால் 300 மாணவர் பட்டத்தைத் தவறவிட்டனர்

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டுப் பரீட்சைகளில் ஆங்கிலப்பாடத்தில் சித்தியடையாமை காரணமாக 300 மாணவர்கள் இந்த ஆண்டு பட்டத்தைத் தவறவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆங்கிலப் பாடத்துக்கு மீள்பரீட்சை நடத்தி அதன பெறுபேறுகள் வெளியாகும் வரைக்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு விழாவைப் பிற்போடுமாறு மாணவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸுக்கு கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

ஒவ்வொரு கற்கை நெறியிலும் உள்ள மாணவர்கள் உரிய துறைப் பாடங்களில் சித்தியடைந்தபோதும் ஆங்கிலப் பாடநெறியில் சித்தி எய்தாமையால் இந்த ஆண்டு பட்டம் பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாட மீள்பரீட்சையினை நடத்தி முடித்த பின்னர் பட்டமளிப்பு விழாவினை நடத்துமாறு அந்தக் கடிதத்தில் மாணவர்கள் கோரியுள்ளனர். (ம-6)

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது

நெடுந்தீவு,மார்ச்19

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

வழமையாக மூன்று தினங்கள் நடைபெறும் இந்த உற்சவம் நிதிப் பற்றாக்குறை காரணமாக இம்முறை ஒருநாள் மட்டுமே நடைபெறவுள்ளது.

இததிருவிழாவுக்கு நெடுந்தீவு, குறிகாட்டுவான் ஆகிய துறைமுகங்களிலிருந்து யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான இறுதி ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், வேலணை உதவி அரச அதிபர் எஸ்.நந்தகோபாலன், நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.பேரானந்தன் ஆகியோரும் நெடுந்தீவுப் பிரதேச சபைச் செயலாளர், சுகாதாரத் திணைக்கள அதிகாரி, பொலீஸ் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். உற்சவம் தொடர்பான இறுதித்தீர்மானம் இக்கலந்துரையாடலில் எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலி யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஜே.நீக்கிலஸ் தலைமையில் நடைபெறும். யாத்திரிகர்கள் அங்கு செல்வதற்கென நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து படகுச்சேவை நடைபெறும். இதற்கு ஒருவழிக் கட்டணமாக 40 ரூபா அறவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாத்திரிகர்கள் தமக்குத் தேவையான உணவு, குடிதண்ணீர் என்பனவற்றைத் தாமே கொண்டுவர வேண்டுமென ஆலயப் பரிபாலகர் அருட்திரு. எஸ்.ஜெபநேசரட்ணம் தெரிவித்துள்ளார். (ம-8-ரி)





அன்னை சாரதாதேவி ஆன்மீக இரத பவனி காங்கேசன்துறை வீதி வழியாக மல்லாகம் சந்தியை வந்தடைந்தபோது பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பவனியைத் தரிசிப்பதையும் இரதத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# நாடாளுமன்றத் தேர்தல் குறித்து குடாநாட்டில் 'பவ்ரல்' ஆராய்வு

யாழ்ப்பாணம்,மார்ச்19

எதிர்வரும் பொதுத் தேர்தலை யாழ். குடாநாட்டில் ஜனநாயக ரீதியாக நடத்துவது தொடர்பாக கொழும்பு 'பவ்ரல்' அமைப்புப் பிரதிநிதிகள் நேற்று யாழ். குடாநாட்டில் ஆராய்ந்தனர்.

'பவ்ரல்' அமைப்பைச் சேர்ந்த ஜெகன் பெரேரா, நிமால் பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய குழுவொன்று நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்தது. இவர்கள் முற்பகல் 11 மணிக்கு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் அதன் உறுப்பினர்களைச் சந்தித்துத் தற்போதைய நிலைவரங்கள் பற்றிக் கலந்துரையாடினர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களிலுள்ள வாக்காளர்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பாகவும் -

யாழ். குடாநாட்டில் தேர்தலை வன்முறையற்ற ரீதியில் நடத்துவதற்குக் கண்காணிப்பு அமைப்புக்களை அமைப்பது தொடர்பாகவும் - கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இணையத் தலைவர் வி.ஶ்ரீசக்திவேல் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் சு.ஜெயராஜ், அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் திட்டமுகாமையாளர் தே.தேவானந்த், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதன் ஜெகதீசன், அறவழிப்போராட்டக் குழுத்தலைவர் எம்.கே.ஜீவகதாஸ் மற்றும் இணைய நிர்வாக உத்தியோகத்தர் என்.சோதிநாதன் உட்படப் பலர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

'பவ்ரல்' அமைப்பினர் இது தொடர்பாக வண.பிதா பேர்னாட், வண.பிதா நேசகுமார், கியூடெக் பணிப்பாளர் வண.பிதா சி.ஜி. ஜெயக்குமார் ஆகியோருடனும் கலந்துரையாடினர். (ம-5)

### நாளை

பங்குனி 07
சனிக்கிழமை
(20.03.2004)
திதி: அமாவாசை
பின்னிரவு 4.56 வரை
நட்சத்திரம்: புரட்டாதி
இரவு 10.31 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம்: 3.17 - 4.47
ராகுகாலம்: 9.17 - 10-47
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தீபங்கள் உன்னால் எரியுமானால் அதற்கு நீ தீக்குச்சியாக இருக்கவும் தயங்காதே.

# சாரதாதேவி இரத பவனி நேற்று நல்லூரை வந்தடைந்தது

தெல்லிப்பழை,மார்ச்19

பருத்தித்துறையிலிருந்து நேற்றுமுன்தினம் ஆரம்பித்த அன்னை சாரதாதேவி திருவுருவம் தாங்கிய ஆன்மீகப் பவனி நேற்றுமுன்தினம் மாலை தெல்லிப்பழை அருள்மிகு ஶ்ரீதுர்க்கையம்பாள் ஆலயத்தை வந்தடைந்தது. நேற்றுக்காலை அங்கிருந்து புறப்பட்ட பவனி, மல்லாகம் சந்தியினை வந்தடைந்தபோது பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் இரத பவனிக்கு மலர்மாலைகள் வழங்கியதோடு, மலர்களைத் தூவி அன்னையின் ஆன்மீக அருளை வேண்டி நின்றனர். வழி நெடுகிலும் மக்கள் பூரண கும்பம் வைத்து அன்னையின் பவனியைத் தரிசித்தனர்.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறையிலிருந்து ஆரம்பமான இரத பவனி, அச்சுவேலி, புத்தூர் வழியாகத் தெல்லிப்பழையை வந்தடைந்தது. பின் நேற்றுக்காலை தெல்லிப்பழையிலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாகப் பாடசாலைகள், ஆலயங்கள் என்பவற்றைத் தரிசித்தபடி இரவு 7 மணியளவில் நல்லூரை வந்தடைந்தது.

தமிழ் நாட்டில் 3ஆயிரத்து 500 மைல்கள் நடைபெற்ற இந்த ஆன்மீக பவனி ஈழத்திருநாட்டிலும் ஆன்மீக சிந்தனையை மக்களிடையே பரப்பும் நோக்குடன் நடைபெற்று வருவதாக இரத பவனியைத் தலைமைதாங்கி நடத்தும் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (ம-150)

### பெருமழிவு நிலை நீங்கத் திருவருள் தந்திடுவாய்!

எழில் மருவு வண்ணைதனிற் கோயில்கொள் ஈசனே
என்றுமடி யாரிடர் தீர்த்திடும் நாதனே
விழிநுதலில் வருபொறிகள் சரவணையிலே சென்று
வசைமலர் மீதாறு குழந்தை யாகி
அழிவுதனை யேசெய்த சூரனுடல் கூறுபட
வேசெய்த வேலனைத் தந்த சீலா
பழிபகைக ளேபெருகப் பாவச் செயலோங்கும்
பெருமழிவு நிலை நீங்கத் திருவருள்தந் திடுவாய்.

- மீசாலையூர் தமிழிசைக் கவிஞர்
ஏ.கே.ஏரம்பமூர்த்தி

(இன்று வண்ணை ஶ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 8ஆம் திருவிழா)



# இது ஒரு தமிழனின் குரல்........

ஜனாதிபதி அவர்களே! 45 ஆண்டுகள் தீவிர அரசியலில் ஈடுபட்டிருந்தவன் என்பதால் எம்மை ஆதரிக்கும் மக்கள் நாம் கூறுவதை செவிமடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடையவன் நான். நாம் நியாயமானவற்றைக் கூறினால் மக்கள் ஏற்பார்கள் என்பது நான் அனுபவரீதியில் கண்ட உண்மை. நியாயமற்ற அழுத்தங்களை கட்சித் தலைமைகளுக்கு சிலர் கொடுத்ததனால்தான் எமது நாடு இப்படிச் சீரழிந்திருக்கிறது. பதவியில் ஒட்டியிருப்பதற்காகவோ அல்லது சிறு குழுக்களின் நியாயமற்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவோ தலைவர்கள் தடம்புரண்ட சம்பவங்கள் நடந்துள்ளன. நான் இதற்குப் பல உதாரணங்களைத் தரமுடியும். ஐக்கிய தேசியக் கட்சியின் குழந்தையான பிரஜாவுரிமைச் சட்டம் 1949 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதனால், அந்த மக்கள் சொல்லொணாத வேதனைகளையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கினார்கள். இன்று 55 வருடங்களின் பின்னர் இப்பிரச்சினைக்கு தீர்வுகண்டுள்ளோம். மொழிப்பிரச்சினையை எடுத்துக்கொண்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகராகிய தங்களின் தந்தையாரின் மொழிக்கொள்கை சுயபாஷையாகும். அதன் அர்த்தம் சிங்களமும் தமிழும் இந்நாட்டினரின் மொழி. இது அவர் ஸ்தாபித்த கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும். தனிச் சிங்களச் சட்டத்தை அவர் கொண்டுவந்த பொழுதிலும் தமிழரசுக் கட்சித் தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களுடன் சேர்ந்து, தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்கக்கூடிய முறையில் பண்டா - செல்வா ஒப்பந்தம் எனப்படும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தார். உண்மையில் தங்களுடைய தந்தையார் மொழிப்பிரச்சினை மட்டுமன்றி அத்துடன் பல தொடர்புடைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணவே விரும்பினார். அவ் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் நம்நாடு இன்று சிங்கப்பூரின் தரத்துக்கு உயர்ந்திருக்கும். அவரே நாட்டின் பிரச்சினைகளை முன்கூட்டியே உணர்ந்து சமஷ்டிக் கொள்கையே சிறந்ததெனத் தான் பிரதமராக வரமுன்பே கூறிவிட்டார், கற்பனை பண்ணிப்பாருங்கள். அவரை அவருடைய போக்கில் செயற்படவிட்டிருந்தால் எத்தனை ஆயிரம் மனித உயிர்களும், கோடானுகோடி பெறுமதியான அரச, தனியார் சொத்துக்களும் காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால், என்ன நடந்ததென நீங்கள் அறிவீர்கள். அன்றைய தங்களின் தந்தையாரின இச்செயல்களை எதிர்த்து கண்டியாத்திரை போக அதனை இம்புள்கொடையில் வைத்து திரு.எஸ்.டி.பண்டாரநாயக்கா முறியடித்து இம்புள்கொடைவீரர் என்ற பெயர் எடுத்தும் துரதிர்ஷ்டவசமாக சிலரின் அழுத்தத்துக்கு அடிபணிந்து அவ்வொப்பந்தத்தை இரத்தாக்கியதும், பின்னர் அதே குழுவினரே திட்டமிட்டு அவரைக் கொலைசெய்ததும் நடந்துமுடிந்த விடயங்கள். பயங்கரவாதம் 1971 இலோ அதற்குப் பின்னரோ ஏற்படவில்லை - உங்கள் தந்தையார் கொலைசெய்யப்பட்ட 1957ஆம் ஆண்டே நாட்டில் கால் ஊன்றிவிட்டது.

இந்தியாவிலிருந்து இலங்கையைப் பிரிப்பது 28மைல் அகலமுடைய பாக்குத் தொடுவாய் ஆகும். நான் படிக்கின்ற காலத்தில் வல்வெட்டித்துறை மாணவர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன், எவ்வாறு பொழுதுபடும் வேளை இந்தியா புறப்பட்டு 400 லட்சம் தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டுக்குச் சென்று ஓர் எம்.ஜி.ஆரின் படத்தைப் பார்த்துவிட்டு விடிவதற்கு முன்னர் வீடுவந்துவிடுவார்கள் என்று. **இந்த ஒரு விடயத்தை இந்நாட்டில் உள்ள இனவாதிகள் உற்று கவனிப்பார்களேயானால் மறைந்துநிற்கும் பலவிடங்களைப் புரிந்து கொள்வார்கள் என்பது மட்டுமன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கு தைரியமாக சில நடவடிக்கைகளை எடுக்க உங்களுக்கும் உதவும்.** இந்நாடு நம் எல்லோருக்கும் சொந்தமான நாடென்றே நான் எண்ணுகின்றேன். யார் முதல் இந்தநாட்டிற்கு வந்தார்கள். பின்பு யார் வந்தவர்கள் என்பதெல்லாம் பொருத்தமற்றவை. நாம் எல்லோரும் இந்தியாவில் இருந்து வந்தவர்களே. இந்தியா எமது தாய் நாடு என்றே நாம் அனைவரும் நோக்கவேண்டும்.

20 ஆண்டுகள் தொடர்ந்த யுத்தம் ஒருவருக்கேனும் வெற்றியைக் கொடுக்கவில்லை. எல்லோருக்கும் அழிவையே கொடுத்தது. பல விதவைகள், அனாதைகள், ஆதரவற்றவர்களை விட்டுவிட்டு பல்லாயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர். பல லட்சம் குடும்பங்கள் தம்வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்து, இந்தியாவிலும், இலங்கையிலும் தனிப்பட்ட வாழ்வின்றி போதிய உணவு வசதியின்றி, தகுதியான கல்வியை தமது பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியாத நிலையில் வாழ்கின்றார்கள். பெரிய வீடுகளின் சொந்தக்காரர்களாகவும், திருப்தியான வாழ்க்கையை நடத்தக்கூடிய சகலவசதிகளுடன் வாழ்ந்தவர்களும் இன்று ஏழைகளாகி அனாதரவாக வாழ்கின்றார்கள். தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்க முடியாது தவிக்கின்றனர். ஒரு தாய் என்ற முறையில் இத்துரதிர்ஷ்டவாதிகளின் உணர்வுகளை மற்றவர்களிலும் பார்க்க இலகுவாகத் தங்களால்தான் புரிந்துகொள்ளமுடியும்.

20 வருடங்களின் பின் முதற்றடவையாக விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தம்செய்து அரசுடன் பேச்சுநடத்தி தீர்வுகாண சம்மதித்துள்ளனர். இறப்பதற்கு முன்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம் அவர்கள் பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்கு இதுதான் நல்லசந்தர்ப்பம் மட்டுமல்ல இறுதிச் சந்தர்ப்பமும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி அவர்களே! இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - அற்ப கட்சிநலன்களைப் பாராது கடந்த காலத்தில், நடந்த மகிழ்ச்சிதராத பல்வேறு சம்பவங்களை மறந்து, ஒரு நிரந்தரத் தீர்வுகாணும் வகையில் ஆளும் கட்சியினரையும் எதிர்க்கட்சியினரையும் ஒன்றிணைத்து நடவடிக்கை எடுக்கும் புனிதமான கடமை உங்களுக்குண்டு.

சமாதான முயற்சிகளுக்கு கடந்த காலத்தில் ஆட்சிக்கு வந்தவர்களுக்கு எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்புக் கிடைக்காமையினால் முயற்சிகள் எதுவும் வெற்றிபெற முடியவில்லை. இம்முறையும் அதேபோன்று நடக்க நாம் விடக்கூடாது. இன்றுள்ளநிலையில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் நிரந்தரத் தீர்வினைக் காண்பதில் எதுவித சிரமமும் இருக்காது.

ஜனாதிபதி அவர்களே! இடைக்கால நிர்வாகக் கதை புதியதல்ல என்பதை அறிவீர்கள். என்றோ ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களும் விடுதலைப்புலிகளுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவத்துடன் வழங்கப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சமாதான முயற்சியில் வெற்றியடைய பெருந்தன்மையாக இவ்வாலோசனைக்கு ஆதரவைத் தாருங்கள். அத்துடன் ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு மேலாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை பிரிக்காமல் இருந்ததுபோல இணைந்த மாகாணமாக இயங்க விடுவதன்மூலம், கிழக்குப் பகுதியில் வாழும் மக்கள் மத்தியில் நல்லுறவை வளர்க்க உதவுவது மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் மூன்று சமூகத்தினரும் ஒற்றமையாக வாழ உதவும்.


நம்மக்களுக்கு இன்று வேண்டுவதெல்லாம் சமாதானமே! - நிரந்தர சமாதானமும் இயல்பான வாழ்க்கைக்கு விரைவில் திரும்புவதுமே யாகும். அவர்கள் தம் வீடுகளுக்குச் சென்று இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க விரும்புகின்றார்கள். அதுமட்டும்தான் அவர்களுக்கு வேண்டியது. ஜனாதிபதியான நீங்கள் கடந்த காலத்தை மறந்து சமாதான முயற்சிக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி கருணைகாட்டுவீர்கள் என நான் திடமாக நம்புகின்றேன். நீங்கள் ஜனாதிபதியாக பதவிவகிக்கும் காலம் எமது சரித்திரத்தில் ஓர் பொற்காலமாக அமையட்டும்.

**தமிழினம் தம் விடியலுக்காய் ஏங்கும் நிலை**
**இனியும் வராமல் இருக்க**
**எல்லோரும் ஒன்றிணைந்து வாக்களிப்போம்**

**வீ.ஆனந்தசங்கரி** (தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)

தலைமையிலான

**சுயேச்சைக் குழு : 1**



**X**

விளம்பர அனுசரணை : புலம்பெயர்ந்த நம் தமிழ் உறவுகள் ரொரண்ரோ - கனடா.

குறிப்பு : எக்காரணங்கொண்டும் சுயேச்சைக்குழு 01 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளாது என உறுதியாகத் தெரிவிக்கின்றோம். வீண் வதந்திகளைத் தயவுசெய்து நம்பவேண்டாம்.

## ஞானக்கதிர்

# கொழும்பு அருகில் சிறந்து விளங்கிய ஆதி சிவன் ஆலயம் 'நந்தீஸ்வரம்'

பண்டைக் காலத்திலிருந்தே இலங்கைக் கடலின் மத்தியிலே எழுந்துள்ள ஒரு தீவாகவும், கந்தபுராண காலத்திலே இது முருகனுடைய ஒரு படைவீடாகவும், இயக்கர், நாகர் காலத்தில் சிவ வழிபாட்டுக்குப் பெயர்பெற்ற பூமியாகவும் இருந்துவந்துள்ளது. நாகர் காலத்தில் கேதுவினால் வழிபட்ட தலம் கேதீச்சரமாகவும் அமைந்துள்ளதாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன.

இராவணன் காலத்தில் இலங்கை சிவபூமியாகத் திகழ்ந்ததற்கான ஆதாரங்கள் பலவும் உள்ளன. இராவணன காலத்தில் இலங்கையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிவாலயங்கள் இருந்ததாகவும், அவனுடைய தாயும் மனைவியும் சிறந்த சிவபக்தைகளாக விளங்கினர் எனவும் இராமாயணம் கூறுகிறது.

அத்துடன், அவன் சிவனார் இருப்பிடமான கைலாசத்தையே பெயர்த்து இலங்கைக்குக் கொண்டுவரும் நோக்குடையவனாக இருந்தான் என்றும் நாயன்மார் பாடல்களிலும், பழைய வரலாறுகளிலும் இருந்து அறிகிறோம.

இலங்கையிலே இருந்த சிவன் கோயில்களில் சிறப்பு வாய்ந்தவையாக திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் அப்பர் சம்பந்தர் முதலியோரால் பதிகம் பாடப்பெற்று சிறப்பு எய்தியதைக் காண்கின்றோம். மற்றும் சிவத்தலங்களாகச் சிறப்புடையவை நகுலேஸ்வரம், முனீஸ்வரம் என்பனவாம்.

ஆதியிலே இருந்து கோவில்கள் பலகாரணங்களால் இயற்கை அன்னையினால் சிலகாலம் மறைக்கப்பட்டு பின்னர் அவை அருள் முகத்தோடு மீண்டும் மக்களுக்கு அருள்பாலிக்க வென்று தோன்றியுள்ளன. இதற்கு ஆதாரம் திருக்கேதீஸ்வரமாகும். திருக்கோணேஸ்வரப் பதியும் இவ்வாறே ஆதிக் கோயில் கடலினுள் அமிழ்ந்தாலும், அதன் பின்னர் அந்தத் தலம இருந்த இடத்தில் சில சிலைகள் கடலில் கண்டெடுத்தும், சில மீண்டும் தற்போது இருக்கும் கோயிலில் பிரதிஸ்டை பண்ணியும் மீண்டும் புனருததாரனம் செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும், ஆதிகோயில் அப்படியே கடலினுள் மூழ்கி இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கணித்திருக்கின்றனர்.

### பழம்பெரும் சிவாலயம்

இதுபோல இப்போது கொழும்பு மாவட்டத்திலும் பழம்பெரும் சிவாலயமொன்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரத்மலானையிலுள்ள கோணா கோவில் என்ற சிற்றூரில் நிலத்திற்கடியில் புதையுண்டிருந்த பல சிவாலயச் சின்னங்கள் அகழ்வுகளின் போது வெளிக்கொண்டுவரப்பட்டன.

அத்துடன், வெகு சமீப காலத்தில் 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பகுதியில் அத்திவாரத்துக்காக நிலத்தை அகழ்ந்தபோது சத்தி பீடம் என்று சொல்லப்படும் ஆவுடையார் பகுதி ஒன்று கிடைக்கப்பெற்றது. இது தற்சமயம் இந்தக் கோவிலில் ஆராதனைக்கென வைக்கப்பட்டது. கருங்கல்லால் ஆன இதன் லிங்கோற் பவர் இன்னும் கிடைக்கப் பெறாமையால் எதிர்காலத்தில் அகழ்வாராட்சியின்போது இது வெளிப்படலாம் என்ற நம்பிக்கையில் இப்போது ஆவுடையாருக்கு மட்டும் பூசைகள் நடைபெறுகின்றன.

இந்த ஆவுடையார் தட்டிப்பார்க்கும்போது வெண்கல ஓசை ஒலி எழுப்புவதைக் காணக்கூடியதாக உள்ளது. இங்கு மிகப்பெரிய தலவிருட்சமாக ஆலமரம் ஒன்று உள்ளது. இந்த ஆலமரம் ஆயிரம் வருடங்களுக்கு மேலானதாக இருக்கலாம்.

**டாக்டர் உ.கலைவாணி**

இங்கிருந்தும் அம்மன் விக்கிரகம் ஒன்றும் பெறப்பட்டதாகவும், அது புதைபொருள் ஆராட்சி நிலையத்தில் வைக்கப்பட்டதாகவும் அறிய வருகிறது. மேலும் விக்கிரகங்கள் இவ்விடத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அகழ்வாராட்சி நடத்தப்பெறின் இவை வெளிக்கொணரப் படலாம் என்றும் நம்பப்படுகிறது.

இந்தச் சக்திபீடமானது தற்போது இவ்விடத்தைச் சுற்றியுள்ள மக்களினால் மிகவும் சக்திவாய்ந்ததாகவும் வரமளித்திடும் ஆலயமாகவும் நம்பி வழிபடப்பட்டு வருகின்றது.

சமீபத்தில் இந்தக் கோவிலில் ஆலமரத்தின் கீழ் நவக்கிரகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாட்டுக்கென வைக்கப்பட்டுள்ளது. இக்கோவில் இரத்மலானை செவிப்புலன் அற்றோர் பாடசாலையின் முன்னே செல்லும் வீதியிலுள்ளது. இக்கோயிலுக்கு மேற்படி பாடசாலைச் சந்தியிலிருந்து காலிவீதி - கோணா கோவில் என்று பஸ் சேவை ஒன்றும் நடைபெற்றும் வருகிறது. 20 நிமிடத்துக்கு ஒருமுறை இச்சேவை நடைபெறுகிறது. கோணா கோயில் என்பதற்கு மாட்டுக்கோயில் என்று பொருள் சொல்லலாம். அதாவது நந்தி குடிகொண்ட கோயில் என்பதே இதன் மறுபொருளாகும்.

### நந்தீஸ்வரம்

ஆதியில் நந்தியெம்பெருமானும் இங்கே அகழ்வில் கிடைக்கப்பெற்றதால் இவருக்கும் பூசைகள் நடைபெறும். இதுவும் விசேட தன்மை பொருந்தியதாகும். இதைச் சிலசமயம் 'கோணா கதரகம தேவாலயம்' எனச் சிங்களவர் சொல்லியழைப்பர். அதாவது 'நந்தி முருகன் ஆலயம்' என்பது பொருள்.

இந்துக்கோயிலைத் தமிழில் குறிப்பிடுவதானால் நந்திக்கோயில் அல்லது நந்தீஸ்வரம் என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும். ஏனெனில், சிவன் கோயில்கள் எல்லாம் ஈஸ்வரங்கள் என்றே குறிப்பிடுவதே வழக்கம்.

### அந்நியரால் ஆலயத்துக்கு அகழ்வு

இராமாயண காலத்திலிருந்தே இக்கோயில் இருந்ததாகவும் இராமரால் இராவண யுத்தம் முடிந்தபின் வணங்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது. இருந்தாலும் போர்த்துக்கேயர் இலங்கைக்குவந்து தமது ஆட்சியை இங்கு நிலைநிறுத்திப் பாரம்பரிய சைவ, புத்த கோயில்களை இடித்துத்தள்ளிய காலமான 15ஆம் நூற்றாண்டுக் காலமளவில் இக்கோவிலையும் இடித்துத் தரைமட்டமாக்கியதுடன் அங்கு பிரதான குருவாயிருந்த குப்புசாமிக் குருக்களையும் அவரது குடும்பத்தினரையும் அழித்துள்ளனர் எனக்கூறப்பட்டது. இந்த அழிவுகள் மூலம் கத்தோலிக்கத் தேவாலயத்தைக் கட்டி அங்கு குப்புசாமிக் குருக்களின் மகனொருவனை அவ்வாலயத்தின் முதலாவது மதகுருவாக பலவந்தப்படுத்தி நியமித்தனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. இது வரலாறுகளில் பதியப்பட்டும் உள்ளது.



அகழ்வின்போது மீட்கப்பட்ட ஆவுடையார்

மேலும் இங்கே ஓர் ஈஸ்வர கோயில் இருந்ததற்கான ஆதாரம் பிரபல பௌத்தபிக்குவான ராகுல தேரர் எழுதிய 'சலலிஹினிய சந்தேசிய' (பாடும் குயிலின் தூதம்) என்னும் நூலிலுள்ள பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர் பன்மொழிப் புலமைகொண்ட பௌத்த பிக்கு ஆவார். இந்த நூலிலே "6ஆம் பராக்கிரமபாகுவின் மகளான இளவரசி, புத்திரபாக்கியம் வேண்டி களனி தேவாலயத்திலுள்ள விபீசன தெய்வத்திடம் குயிலைத் தூது அனுப்புகிறாள். அவ்வாறு அனுப்பும் பறவைக்குக் கோட்டையிலிருந்து மாலை நேரத்தில் புறப்பட்டு அசில் சந்தனம் மணக்கும் தீபங்கள் காட்டப்படும். தமிழ் மக்களால் சிவார்ச்சனை செய்யப்படும். ஈஸ்வரகோவிலில் தங்கி மறுநாள் காலை களனி தேவாலயத்தை அடையும் வழி என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.



புதிதாக நிறுவப்பட்ட நவக்கிரக ஆலயம்

இந்தக்கோயிலில் இப்போது இந்துக்களும், சிங்களப் பௌத்தர்களும் பெரும் நம்பிக்கையுடன் வழிபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

*

# சமுதாயம் திருந்திக்கொள்ள சட்டமும், சமயமும் அவசியமே!

மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஓர் இடத்தைப் பெறுவது சமுதாய வாழ்க்கை ஆகும். இது அன்பு நெறியைமையமாகக் கொண்டு மனிதப் பண்புகளை உயர்த்திக்காட்டுவது ஆகும். சைவம் என்று சொல்லுகின்ற பொழுது அது அன்பு நெறியை உணர்த்தி நிற்கிறது. 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்..' என்பது திருமந்திரம். ஆகவே, எல்லா உயிர்களிடத்தும் காட்டுகின்ற அன்பே சைவமாகும். 'மக்கள் பணியே மகேசன் பணி' என்பது சைவத்தின் பரந்த கொள்கையாக அமைகிறது. ஒரு சமூகத்தை நல்லபடியாக நடத்துவதற்குச் சட்டம் தேவையாகும். ம்க்கள் நீதியான வாழ்வை வாழுகின்ற பொழுது சமயம் அதில் ஊடுருவி நிற்கின்றது. பொய்சொல்லக்கூடாது என்பது சட்டம், உண்மையே பேசி உயர்வடைய வேண்டும் என்பது சமயம். இது பல வழிகளிலும் உயிர்களிடத்துக்காட்டப்படுகின்றது. கருணை, இரக்கம், பாசம் ஆகியவற்றால் பிற உயிர்களை நேசிக்கவேண்டும் என்பதே சட்டமும் சமயமும் காட்டும் மேன்மையான வழியாகும்.

விஞ்ஞானத்தில் அணுக்களைப் பற்றியும் அதைச்சுற்றி நுண்பொருள்கள் இருப்பதையும் காட்டி இந்தச் சுற்றுதல் நின்றுவிட்டால் உலகம் அழிவடையும் என்று கூறப்படுகிறது. இந்த உண்மையை நடராசப்பெருமானின் தில்லை நடனம் காட்டுகின்றது. அந்த நடனம் ஓய்ந்துவிட்டால் உலக இயக்கமும் ஓய்ந்துவிடும் என்பது சமயக் கொள்கை. எனவே, சட்டமும் சமயமும் ஒரே கருத்தையே உணர்த்துகின்றன. சமூக மேம்பாட்டுக்கு சட்டம் எவ்வளவு அவசியமோ அதேயளவு சமயமும் இன்றியமையாதது என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். திருவுருவங்களின் மூலம் கடவுளை உணரவைக்கும் சமயம் சைவம். இதற்காகவே திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன. குழந்தையின் கையில் இருக்கின்ற ஒரு பொம்மையான யானையைக் காணுகின்றபோது உண்மை யானையின் உருவம் மனதில் வருகின்றது. அதேபோன்று திருக்கோயில்களைப் பார்க்கின்றபோது தெய்வத்தின் நினைவு உள்ளத்தில் வருகின்றது.

**ஈழத்தமிழ்ச் செல்வி**
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

சமுதாயத்தில் நீதியும் நேர்மையும் நிலவ வேண்டும் என்புதற்கே சட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆனால், சமய உணர்வு குன்றினால்தான் சட்டங்கள் பெருகவேண்டிவரும். சட்டத்தினால் பயம் ஏற்படுகின்றது. சமய உணர்வினால் மனப்பண்புகள் வளர்கின்றன. ஆதிகால மக்கள் விலங்குணர்ச்சியை நீக்கி மனித உணர்ச்சியைப் பெருக்கினர். அதனையே நாங்கள் கைக்கொள்ள வேண்டிய சமயமாக ஏற்றனர். இந்தச் சமயம் எப்பொழுது தோன்றியது என்று கூறமுடியாது. பிற சமயங்கள் எல்லாவற்றுக்கும் தோன்றிய காலம், தோற்றுவிக்கப்பட்ட பெரியோர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

ஆனால், எமது சமயம் காலத்தையும் கட்டுப்பாடுகளையும் கடந்தது. எத்தொழிலைச் செய்தாலும் வாய்மை மிகவும் முக்கியம் என்று கூறுவது சைவம். ஆடையினாலோ அல்லது புறத்தோற்றத்தினாலோ உண்மைச் சமயிகளாக முடியாது. உள்ளத்திலே சைவப் பண்பு உருவாகவேண்டும். எல்லோருக்கும் பரோபகாரசிந்தை வேண்டும். அழுக்காறு அற்ற உள்ளம் வேண்டும். ஆசையற்ற வாழ்க்கை வேண்டும். கோபமற்ற சாந்தம் தோன்ற வேண்டும். பிறர் நலம் பேணும் மனப் பக்குவம் வேண்டும். சட்ட வல்லுநர்களுக்கோ வணிகத்துறையில் ஈடுபடுபவர்களுக்கோ அல்லது வேறு எத்தொழிலைச் செய்பவர்களுக்கோ மேற்காட்டிய பண்புகள் இடம்பெற வேண்டும்.

நாங்கள் சைவ சமயத்தவர்கள் என்று மற்றவர்கள் அடையாளம் காணத்தக்க சிவசின்னங்களை அணிந்து கொள்ளவேண்டும். செய்கின்ற கருமங்கள் அத்தனையிலும் இறைவனின் சாந்நித்தியம் மிகுதியாக இருக்கவேண்டும். எதையும் நல்லவையோ கெட்டவையோ இறைவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கை எமது உள்ளத்திலிருந்து அகலக்கூடாது.

சைவ வாழ்வு என்பது ஓர் இனிய வாழ்வு. இதற்குச் சட்டமும் சமயமும வழிகாட்டுகின்றன. 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்தலரிது'.

எனவே, சட்டத்தின் வழிநின்று ஒழுகி வாழவேண்டும் என்பதே சமய வாழ்வின் உண்மையாகும். சட்டம் சில சமயம் எமது சைவ வாழ்வுக்கு மாறுபாடாக இருக்குமானால் அதனைச் சைவத்தின் வழிநின்று திருத்திக் கொள்ளவேண்டும். சமுதாயம் திருந்துவதற்கு சட்டங்கள் தேவைதான். ஆனால், சட்டங்களைப் பாதுகாப்பது சமயமே. ஆகவே, உண்மைச் சமய உணர்வு உலகெங்கும் ஓங்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வோமாக.

நன்றி: நக்கீரம்
(சட்டக் கல்லூரி
இந்து மகாசபை)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின்

# உற்சவ காலத்தில் ஆலய வீதியால் மாமிசம், சடலம் எடுத்துச்செல்லத் தடை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவ காலத்தில் மாமிச உணவுகள் மற்றும் சடலங்கள் ஆகிய வற்றை ஆலய வீதியால் கொண்டு செல்வது முற்றாகத் தடை செய்யப் பட்டுள்ளது.

- இவ்வாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா அறிவிததுள்ளார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர் வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் இடம் பெறவுள்ளது.

- அவ்வேளையில், ஆலயத்தின் பிரதான வீதி வழியாக ஆலயத்தின் மகிமைக்கு இடையூறு விளைவிக்கும் எந்தப் பொருள்களும் கொண்டுசெல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆலய பிரதான வீதிகளின் இருமருங்கிலும் நிரந்தரக் கடைகளைத் தவிர்த்து, ஏனைய கடைகள் யாவும் ஆலய வளவிற்குள் அமைய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருவிழா நடைபெறும் 18 தினங்களும் மானிப்பாய் பிரதேச சபை ஆலயச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அத்துடன், பவுஷர்மூலம் நீரை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா ஆலய உற்சவம் தொடர்பாக ஆராய்வதற்கென கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

ஆலயப் பகுதியில் நிரந்தர மலசல கூடத்தினை உருவாக்கினால் மேலதிக செல்வு தொடர்ந்து ஏற்படாது என்றும் -

வருடாந்தம் தற்காலிக மலசல கூடம் அமைப்பது வீணான செலவினை ஏற்படுத்துவதுடன் பராமரிப்புச் செலவும் ஏற்படுகிறது என்றும் பதில் சுகாதாரப் பொறுப்பதிகாரி கே.வர்ணநாதன் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் ஆலய தர்மகத்தா சபைத் தலைவர் சி.சிதம்பர நடராசா, பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர், சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலகர்கள், தொண்டரமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-8-152)

# முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் கொலைக்கு ஹக்கீம் கண்டனம்

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளரான காலிதீன் சலாம் என்பவர் அரசியல் காரணங்களுக்காக கொலை செய்யப்பட்டுள்ளார் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

காலித்தீன் சலாம் சம்மாந்துறையைச் சேர்ந்தவர். நான்கு பிள்ளைகளின் தந்தை.

அமைச்சர் ஹக்கீம் தனது அனுதாபச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"எமது கட்சி ஆதரவாளரான சலாம் மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டு சந்தேகத்திற்கு இடமான முறையில் மீட்கப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. கொலையாளியின் செயலுக்கான பழியை வேறு யார்மீது சுமத்தும் நோக்கத்துடன் இந்தக் கொலையின் பின்னணி அமைந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது."

- இப்படி அவர் தெரிவித்திருக்கிறார்.

சம்மாந்துறை பொலிஸாரிடம் இந்த விடயம் பற்றிக்கேட்டபோது அவர், விசாரணை நடைபெறுகிறது. அதன் முடிவில்தான் திட்டவட்டமாக எதனையும் கூறமுடியும் என்றார்.

## பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ். வேம்படிமகளிர் கல்லூரியில் சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும், எதிர்வரும் 27ஆம் திகதியும் நடைபெறவிருந்த வங்கியாளர் பரீட்சைக்கான நிலையம் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ், வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-8)


மகளிர் படைத்த சாதனைகள் காண வாரீர்!
மார்ச் 20,21
சனி - ஞாயிறு
பல்துறை கலைகள் சார்
கண்காட்சி
இடம்: ம.ம.வி.வீதி, நெல்லியடி.
ஒவ்வொரு மகளிரும் காணவேண்டிய காட்சிப்படுத்தல் இது.
அனைவரும் வருக!
தூரிகை நுண்கலை வளாகம்
(சி-33680)(26-12-14-31)



Dialog GSM
டயலொக் GSM
கையடக்கத் தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
kit
எந்நேரமும் உன்னுடன்...!
Sri Murugan
Tele Communication
& Agency Post Office,
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P. :021 222 5392, FAX : 222 3214.
email- del-smskr@eureka.lk
(C/33358)(12-14-31)



வெளிவந்துவிட்டது
தரம் 5 புலமைப்பரிசில் 2004 பரீட்சைக்கான அடிப்படை அறிவும் பயிற்சியும்
கே.ரி. அம்பிகைபாகன் B.Ed.
மொழிவளம் - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
கட்டுரைப்பேழை - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
தமிழ் (புலமைக்கானது) - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
கடந்தகால தரம் 5 பரீட்சை வினாவிடைகள் (தென்றல்)
(29521)(26)


## 3ஆம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 24 - 12 - 1945



உதிர்வு 19 - 03 - 2001

### திருமதி துரைராஜா தவமலர்

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்திடினும்
மாண்ட உம் நினைவு வாட்டுதம்மா எம்மை
வேண்டிநாம் நிற்கிறோம் சேர்ந்திங்கு
ஆண்டவன் சந்நிதி ஆறுதல் தந்திடவே!

'தவமஹால்',
அல்வாய். (29761)(26-12-14-31) - குடும்பத்தினர்.

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

### 19.03.2004



HAPPY BIRTHDAY

கொடிகாமத்தைச் சேர்ந்த
தவக்குமார் - விஜயமலர் (சுமதி)
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### அபிஷன்

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இந்தியாவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், கலா சித்தி, குமார் சித்தப்பா (அமெரிக்கா), சுபே மாமா (லண்டன்), அம்மப்பா (கொழும்பு), கொடிகாமத்தில் வசிக்கும் அம்மம்மா, தர்மசேகரம் பெரியப்பா, சித்ரா (பெரியம்மா), சந்திரன் மாமா, குஞ்சு மாமி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் வீரபத்திரர் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

'அபிஷவாசா,'
பெரியநாவலடி,
கொடிகாமம். (26-12-14-31)

தகவல்:
தர்மசேகரம் (பெரியப்பா). (29727)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 09 - 1903



மறைவு 29 - 03 - 1995

தோற்றம் 06 - 06 - 1908



மறைவு 05 - 04 - 1995

அமரர் கந்தையா குமரேசு

திருமதி குமரேசு தங்கம்மா

திதி: 18-03-2004

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்!
மனிதரில் மாணிக்கங்களாய்
மாந்தருள் திலகங்களாய் வாழ்ந்த
உங்கள் ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

தும்பளை,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்
குமரேஷ் வாணிப நிலையத்தினர்.
(சி-33676)(26-12-14-31)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

மீசாலையைச் சேர்ந்த பாஸ்கரன் - சகிலா
தம்பதிகளின் இரட்டைச் செல்வங்களான

### சாகித்யன் — சாகித்யா

தமது முதலாவது பிறந்தநாளை இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை மீசாலையிலுள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், அம்மம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் குறிஞ்சி குமரன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்:
பாஸ்கரன் - சகிலா
(அப்பா, அம்மா)
(29785)(39-12-14-31)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 02 - 12 - 1929



விண்ணுலகில் 19 - 03 - 2003

அமரர்

### சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை

அன்னாரின் முதலாம் ஆண்டை நினைவுகூருமுகமாக கரவைப் பரலோக அன்னை ஆலயத்தில் நாளை (20-03-2004) சனிக்கிழமை காலை 11மணிக்கு நடைபெறும் இரங்கற்பலியில் பங்குபற்றி அவரின் ஆன்மசாந்திக்காக மன்றாடுவதோடு, அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

'நவரட்ண வாசா',
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (29773)(26-12-14-31)

அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

# தமிழரை ஐக்கியப்படுத்தும் திட்டம்: மலையக மக்கள் முன்னணி கைவிடாது!

## அமைச்சர் சந்திரசேகரன் கூறுகின்றார்



கொழும்பு,மார்ச்19

நாட்டில் உள்ள தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி அவர்கள் சார்பில் 35 பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யும் திட்டம் ஒன்று உள்ளது. இந்தத் தேர்தலில் முடியாவிட்டாலும் எதிர்வரும் காலங்களில் அதை நிச்சயமாக செயற்படுத்துவேன்.

- மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை கண்டி இந்துகலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணி சார்பாகக் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் எஸ்.இராஜரட்ணத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக இக்கூட்டம் நடத்தப்பட்டது.

அமைச்சர் சந்திரசேகரன் அங்கு தெரிவித்ததாவது:-

மலையக மக்கள் முன்னணி வடக்கில் பிரபாகரனோடு தொடர்பு வைத்திருப்பதாகச் சிலர் குற்றஞ் சாட்டுகின்றனர். நம் நாட்டில் சமாதானம் நிலை பெறவேண்டுமானால் இத்தகைய தொடர்புகள் அவசியமாகும். ஜனாதிபதி, பிரதமர் உட்படப் பலரும் நாட்டில் சமாதானத்தைக் காண பிரபாகரனையே நாடுகின்றனர். சர்வதேச சமூகம் சமாதானத்தை நிலைநாட்ட பிரபாகரனையே நாடி நிற்கின்றது.

நாட்டில் 50 ஆண்டு காலமாக அரசியல் போராட்டங்களையும் 20 ஆண்டுகாலம் ஆயுதப் போராட்டத்தையும் நடத்தி வந்த இவர்கள், இன்று தங்கள் பிரச்சினைகளைச் சர்வதேச சமூகம் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர். மலையக மக்கள் முன்னணியும் மலையக மக்களின் சுபீட்சத்துக்காகப் பிரச்சினைகளைச் சர்வதேச சமூகத்தின் முன் கொண்டுசெல்லும் ஒரு மிகப்பெரிய பணியை மேற்கொண்டுள்ளது - என்றார் சந்திரசேகரன். (ஐ)

# வாக்களிப்பு நிலையங்களின் வசதிகள் குறித்து நேரில் ஆராய்வு

தெல்லிப்பழை,மார்ச்19

யாழ். மாவட்டத்தில் அமையவுள்ள வாக்களிப்பு நிலையங்களைப் பார்வையிட்டு அவற்றினை மதிப்பீடு செய்வதற்கான பணியினை யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகம் துரிதமாக மேற்கொண்டுவருகின்றது.

யாழ். குடாநாட்டில் அமையவுள்ள வாக்களிப்பு நிலையங்கள் வாக்காளர் சௌகரியமாக வாக்களிக்கும் நிலையில் உள்ளனவா? என்பதை மாவட்டச் செயலக அதிகாரிகள் குழுவொன்று நேரில் சென்று மதிப்பீடு செய்துவருகின்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள மக்கள் வாக்களிப்பதற்கான வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான இறுதியான முடிவுகள் எடுக்கப்படாத நிலையில் மொத்தமாக எத்தனை வாக்குச் சாவடிகள் அமையப்போகின்றன என்பது தீர்மானிக்கப்படவில்லை. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வாக்குச் சாவடிகளைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்யும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அசௌகரியமான நிலையிலுள்ள வாக்குச் சாவடிகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-150)

# வாக்குச் சீட்டின் நீளம் இரண்டு அடி 4 அங்குலம்

காரைதீவு, மார்ச்19

அம்பாறை மாவட்டப் பொதுத் தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டின் நீளம் 2 அடி 4 அங்குலம் ஆகும் இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயர் முதலிடத்தில் இருக்கிறது.

கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் என 41 அணிகளின் பெயர்கள் இதில் உள்ளன . 10 இலக்கங்கள் இடப்பட்டுள்ளன.

இம்முறை புத்தக வடிவில் இல்லாமல் பற்றுச்சீட்டு அமைப்பில் வாக்குச் சீட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஈக)

# வாக்காளர் அட்டை விநியோகம் முழு வீச்சில் ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,மார்ச்19

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் நேற்றுமுந்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் எஸ்.இராசதுரை தெரிவித்துள்ளார்.

வாக்காளர்களின் வாக்காளர் அட்டைகளை வீடுவீடாக விநியோகிக்கும் பணி நேற்றுக் காலைமுதல் யாழ். பிரதம தபாலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய நாள்கள் உட்பட எதிர்வரும் 25ஆம் திகதி வரையும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன. இதேவேளை -

யாழ்ப்பாணத்தில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வாக்காளர்களுக்கு தபால மூலம் அனுப்பிவருகின்றன. (ஐ-ரி)

# கிராமங்கள் தோறும் தேர்தல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்19

கிராமங்கள் தோறும் தேர்தல் குறித்து விழிப்புணர்வுக்கருத்தரங்குகளை எதிர்வரும் 20ஆம் திகதியிலிருந்து நடத்துவதற்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடுகள் மேற் கொண்டுள்ளது.

தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும் மற்றும் எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்தும் இக்கருத்தரங்குகளில் மக்களுக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளது. இதற்கென அகதிகள் புனாவாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் என நூறு பேர் வரை ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இச் செயற்றபாட்டுக்கென முதற் கட்டமாக பொது அமைப்புப் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்பைச் சேர்ந்தவர்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள் போன்றோருக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்று வெள்ளிக்கிழமை காலை 9:30 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறு வனக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சிப்பட்டறையில் யாழ், பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் கேரி கணேசலிங்கம் கலந்து கொண்டு விளக்கவுரை நிகழ்தவுள்ளார்.

யாழ், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் சிறி சக்திவேல் தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வுக்கு தேர்தல் களஆர்வலர்கள் எவரும் கலந்துகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்த தேர்தல்கள் போலன்று இம்முறை பொலீஸாரின் பணி திருப்தியளிக்கிறது

## 'பவ்ரல்' அமைப்பு பாராட்டு

கொழும்பு,மார்ச்19

இதற்கு முன்னர் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பான பொலீஸாரின் செயற்பாடுகள் சுதந்திரமான வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தோன்றுகிறது.

பொதுத்தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் 'பவ்ரல்' அமைப்பு இவ்வாறு தெரிவிததுள்ளது.




தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் குறைந்த அளவில் இடம்பெறுவதும் இதற்கானதொரு காரணமென 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரையில் 132 எழுத்து மூல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சிறுசம்பவங்களே எனத் தெரிவித்த அவர், பொதுத் தேர்தல் தொடர்பான விசேட பொலீஸ் பிரிவுக்குக்கிடைத்த முறைப்பாடுகளைப் பரிசீலித்த சமயம், அவற்றில் ஒரு சில சம்பவங்களே சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய பாரதூரமான சம்பவங்களாக இனங்காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் தொடர்பான விசேட பொலீஸ் பிரிவுக்கு மேலதிகமாக லஞ்சஊழல் தொடர்பான நடவடிக்கைகளுக்கெனத் தனியான பிரிவொன்றும், தொடர்பு சாதன நடவடிக்கைகளுக்காக மற்றொரு பிரிவும் ஏற்படுத்தப் படுவதன் மூலம், பொதுத் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தும் பணியைப் பொலீஸார் திறமையாக நிறைவேற்ற முடியுமெனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதும், நிறைவேற்று மற்றும் அரசமைப்பு அதிகாரங்கள் வெவ்வேறு கட்சிகளிடம் இருப்பதுமே இம்முறை தேர்தல் வன்செயல் நடவடிக்கைகள் குறைவடைந்தமைக்கான காரணமெனத் தெரிவித்த அவர், பொலீஸாரினால் சுதந்திரமாகப் பொதுத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட முடிவது இம்முறைத் தேர்தல தொடர்பான நடவடிக்கைகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதொரு விடயமாகுமெனவும் தெரிவித்தார்.

அமைதியான வகையில் தேர்தலை நடத்திமுடிக்கும் பொருட்டு 'பவ்ரல்' அமைப்பு கிராமிய மட்டத்தில் சமாதானக் குழுக்களை ஏற்படுத்தி வருவதாகவும், இதுவரையில் 40பிரதேசங்களில் அத்தகைய சமாதானக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் தெரிவித்தார். (ஐ)

# காரைநகரில் ஈ.பி.டி.பியினர் ஒலிபெருக்கி மூலம் பிரசாரம்

காரைநகர்,மார்ச்19

காரைநகர் பிரதேசத்திலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சுயேச்சைக்குழு - 1 என்பன தமது பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிராமங்கள் தோறும் கருத்தரங்குகளையும் கூட்டங்களையும் நடத்தி வருகின்றது. இவர்களுக்கு ஆதரவாக காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் பொது அமைப்புக்களும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இராணுவம் மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புடன் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் வீதிகள் தோறும் தமது பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளது. தமது கட்சி அலுவலகத்திலும் பொருத்தப்பட்டுள்ள ஒலி பெருக்கிகள் மூலம் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

சுயேச்சைக் குழுவினர் வீடுவீடாகச் சென்று தமது பிரசாரங்களை மேற்கொள்வதுடன் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர். (ஐ-73)




மாரீசன்கூடல் புனித கயித்தார் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரைநிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான சி.வீ.கே.சிவஞானமும் படத்தில் உள்ளார். (படம்:மாதகல் செய்தியாளர்)

# 20ஆண்டு யுத்தத்தில் அதிக பாதிப்பு பெண்களுக்கும் குழந்தைகளுக்குமே!

## கூட்டமைப்பு வேட்பாளர் பத்மினி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மார்ச்19

கடந்த இருபது ஆண்டு காலமாக இராணுவ நெருக்கடிகளால் தமிழ் மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டபோதும் பெண்களும், குழந்தைகளுமே அதிகம் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

- தமிழ்க் கூட்டமைப்பின் பெண் வேட்பாளரான திருமதி பத்மினி சிதமபரநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த திங்களன்று சுன்னாகம் அம்மன் கோயில் முன்றிலில் நடைபெற்ற தமிழ்க் கூட்டமைப்பின் அரசியல் பொதுக் கலந்துரையாடலில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பெண்களின் பிரச்சினைகள், தேவைகள் பொதுவாக வெளிவருவது குறைவு. பெண்களின் பிரச்சினைகள், தேவைகள் வித்தியாசமானவை. மிக நுட்பமானவை. அவற்றை விளங்கிக் கொள்தலும் வெளி உலகிற்குக் கொண்டு வருதலும் பெண்களால்தான் முடியும். பெண்கள் சார்பில் அப்பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ள முன் வந்துள்ளேன்.

"கடந்த 20வருடங்களாக இராணுவ நெருக்கடிகளால் தமிழ்மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டபோதும் பெண்களும் குழந்தைகளுமே மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வெளியில் பகிராமல் தங்கள் மனங்களில் பூட்டி வைத்துள்ளனர். உதட்டில் சிரிப்புடனும் உள்ளத்தில் நெருப்புடனும் உறைந்து போயுள்ளனர்.

"அவர்களுக்கு ஒரு நம்பிக்கையான சூழலையும் உறவையும் ஏற்படுத்தி அவர்கள் கதைகள் கேட்கப்படவேண்டும். அவர்கள் மனப்பாரத்தை இறக்கி வைத்த பின்தான் அவர்களிடம் உள்ள திறமைகளை அவர்களால் இனங்காண முடியும். எதிர்காலம் பற்றி ஆக்கபூர்வமான கற்பனைகளில் ஈடுபடமுடியும். செயலவலிமையுள்ள பெண்களாக அவர்கள் மாறமுடியும்.

"ஏற்கனவே பெண்களுடன் இவ்வாறான செயற்பாடுகளை நடத்தி பெற்ற அனுபவத்தின் மூலம் பெண்களை செயல் வலிமையுள்ளவர்களாக உருவாக்கமுடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

"விடுதலை எமது வாசல்வரை வந்துவிட்டது. அதனைப் பெற்று தேசத்தை நிர்மாணிக்கும் காலம் மிக நெருங்கிவிட்டது. அந்த நிர்மாணிக்கும் பணிகளில் ஆண்களும் பெண்களும் ஈடுபடவேண்டும். தேசநிர்மாணப் பணிகளில் ஈடுபட பெண்கள் சில திறன்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறான திறன் வளர்க்கும் பள்ளிகள் பரவலாக்கப்பட்டுப் புதிய புதிய தொழில்களில் ஈடுபடும் போது அனைவருக்கும் சுபீட்சமான எதிர்காலம் அமைவது நிச்சயம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# தமிழர் தேசிய ஆன்மாவில் கத்தி வைக்கும் தீயசக்திகள்

தமிழினத்துக்கென்று ஒரு தனித்துவமான அடையாளம் உண்டு. அவர்களுக்கென்று உயர்வான பண்புகள் உண்டு. யாரிடமும் சார்ந்து வாழாது தமது கடும் உழைப்பின் மூலம் உயர்ந்த நிலை அடைந்தவர்கள் இவர்கள்.

அடுத்தடுத்து கட்டவிழ்த்து விடப்பட்ட ஆக்கிரமிப்புப் போரினால் இவர்களது சுதந்திர இருப்பு சிதைக்கப்பட்டது. முற்றுகைக்குள் முடக்கப்பட்டது இவர்களது ஜீவிதம்.

ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்ட எம மக்கள் மீது போர் அழுத்தங்களை பிரயோகித்து அவர்களிடமிருந்து போரிடும் துணிவை, போராட்ட மன உணர்வை, இன அடையாளத்தை வெகுவிரைவில் தனது எண்ணத்தை நிறைவேற்றிவிடத் துடித்தான் ஆக்கிரமிப்பாளன். இருப்பினும், அவர்களது எண்ணங்கள் நிறைவேறவில்லை. அழுத்தங்கள் இறுக இறுக எம்மக்களிடையே போராட்டவுணர்வு அதிகரித்துச் சென்றது. இதனால் ஆத்திரமடைந்த ஆக்கிரமிப்பாளர்கள் பிறிதொரு வழியில் எம்மக்களை வசப்படுத்த முனைந்தனர்.

நேரடியான போரின் மூலம் எம் மக்களுக்கு உயிர் உடைமை அழிவுகளை ஏற்படுத்தியபோதிலும் அடிபணியாது தமது தனித்துவமான இன அடையாளத்தை இழக்காது நின்றனர். இதனால் அவர்களது மனச் சிந்தனையை உளவியல் யுத்தம் ஒன்றை ஏற்படுத்தி சிதைத்து விடலாமா என்று யோசித்தான். எம் மக்களிடையே குறிப்பாக இளைய சமுதாயத்தினரிடத்தில் தீய பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி சமூகத்துககுள்ளே பிளவுகளை ஏற்படுத்த முயன்றனர். இவ்வகை நடவடிக்கை பண்பாட்டு பேணுதலில் முதலிடம் வகிக்கும் யாழ். குடாவில் தீவிரமாகப் பரப்பப்பட்டது.

தீய செயல்களுக்கு வழிகாட்டி மறைமுக அனுசரணைகளையும் மேற்கொண்டு சில வேளைகளில் தாமும் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதுமாக படைத்தரப்பினரும், தேச விரோத குழுக்களும் செயற்படுவது அனைவரும் அறிந்ததொன்றே.

விடுதலைப் போராட்டம் நடைபெறும் எந்தவொரு நாட்டிலும் மக்களது பலத்தை நம்பியும் அவர்களது பங்களிப்புடனுமே போராட்ட அமைப்பு செயற்படும். ஆகவே, அந்த நாடுகளில் மக்களைப் போராட்ட சக்தியிலிருந்து, போராட்ட அமைப்பிலிருந்து பிரிப்பதற்காகவும் மக்களுக்கும் போராட்ட அமைப்புகளுக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்தவும் ஆக்கிரமிப்பாளர் முனைவர். அது போர்ச் சுமையை அதிகரிப்பதன் மூலம் நேரடியாகவும் அன்றேல் இவ்வகையான உளவியல் யுத்தத்தையும் அறிமுகப்படுத்துவர். இதில் இரண்டையும் எம்மண்ணில் படைத்தரப்பு அறிமுகப்படுத்தி நிற்கின்றது.

விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டில் குடாநாடு இருந்தபோது சட்டம், நீதி, பண்பாடு இறுக்கமாகப் பேணப்பட்டது. குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டபோது இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வின் பின் புலிகளது நேரடித் தலையீடு அங்கு குறைவடைந்தது. இந்நிலைமையினை எதிரியானவன் நன்கு தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். படிப்படியாக நச்சு விதைகளைத் தூவிவிட்டான். இதில் எங்களது இளைஞர்கள் சிலர் சிக்கிச் சீரழியும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. இந்நிலைமைக்கு நேரடியாக படைத்தரப்பும் இன்னுமொரு விதத்தில் காலநிலை, குடும்பச்செல்வாகககு மேன்மை நிலையும் காரணமாயமைந்துள்ளதை நாம் மறந்துவிடலாகாது.

குடாநாடு முற்றுமுழுதாக ஆக்கிரமிக்கப்பட்டதின் பின்னர் தனிமனித உலகிற்கு ஊறுவிளைவிக்கபட்டது. ஆள்கடத்தல், கொலைசெயதல், காணாமற்போதல் அச்சுறுத்தலாகியது. இதனால் குழுக்களாக அங்கிருந்த இளைஞர்கள் கூடி உலாவவில்லை. இதனைக் கண்ட படைத்தரப்பு அக்குழுக்களை வஞ்சகமாய் வளைத்து நடவடிக்கைகளின் பால் திசை திருப்பினான். மதுபோதையை, ஆபாசப் படங்களை, புகைத்தலை அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் ஒழுங்குகளைச் செய்தான் அதன பால் அவர்களை அடிமையாக்கினான். பின்னர் தீய வழிகளில் செல்ல அவர்களை தூண்டிவிட்டான்.

இதைவிட முற்றும் மாறுபட்ட ஒரு, தேசத்தில் மாற்று மொழிக் கலாசாரத்தின் நடுவே தம்மை வருததிக கடுமையான உழைப்பின் மூலம் கிடைக்கப்பெறும் பணத்தை டொலராகவோ அன்றி அந்தந்த நாட்டு பண ஓலைகளாக இங்கு அனுப்பும்போது அதை ரூபா பெறுமதியில் மாற்றும்போது அதிகளவில் பணம் எம் மக்களுக்கு கிடைக்கிறது. இதனால் அதிகளவு பணப்புழக்கம் எம்மக்களிடையே ஏற்படுகிறது. அதனைச் சரியான முறையில் பிரயோசனப்படுத்தாது கண்டபடி சில இளம் சந்ததியினர் பாழாக்குகின்றனர். இதன் அடிப்படையிலும் அங்கு பழக்க வழக்க ஒழுங்கும் மாற்றம் நிகழ்கின்றது. பின்னர் கண்டபடி தமது செயல்களை அமைத்துக் கொள்கின்றனர். சில இளைஞர்கள் இந்நிலை முதலில் எமது பெற்றோர்களினால் தடைப்படுத்தப்படவேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் இளையோரது பங்களிப்பு என்பது எந்த வகையில் உள்ளது என்பதை முதலில் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அடக்குவர் அடக்கினால் தான் இச்செயல்கள் அடங்குமெனும் நிலையில் தனியே புலிகள்மீது காரியத்தைச் சுமத்திவிட்டு பெற்றோர்கள் ஒதுங்கிவிடக்கூடாது. தமது பிள்ளைகளாகவும், தமது சகோதரர்களாகவும் இருப்பார்கள். அவர்களே தீய செயல்களில் ஈடுபடமுனைவோரை தடைப்படுத்தவும் தெளிவான போதனைகளை ஏற்படுத்தவும் அவர்களுக்கு முடியும். இளையோரது செல்நெறியானது நேரிய வழியில் செல்லவேண்டியதன் அவசியத்தையும் போராட்டத்தின் தாங்கு சக்திகளாகவும் தேச நிர்மாணிகளாகவும் உள்ளவர்கள் நீங்களே என்னும் உண்மையினை அவர்களுக்கு இடித்துரைக்கவேண்டும. தீயவர்களது நட்பும் அவர்களது எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் சோடைபோகா வண்ணம் தடைப்படுத்தவேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் எம்மக்களில் ஏற்படுத்தப்படும் கலாசார சீரழிவுக்ும் அழிவுக்கும் காரணகர்த்தாக்களாகவும் வழிகாட்டுவோர்களாகவும் அடையாளம் காணப்படுகின்ற அந்நிய ஆக்கிரமிப்பின் இருப்பு என்பது எம்மண்ணிலிருந்து முற்றாக அகற்றப்படவேண்டும்.

இவர்களால் தனியே தீயவழியை நோக்கி வழி மட்டும் காட்டப்படவில்லை. காலம்காலமாக எம்மால் பேணிப் பாதுகாக்கப்பட்டுவரும் பண்பாட்டு பொக்கிஷங்கள் சூறையாடப்படுகின்றன. தேசிய அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. திரிவுபடுத்தப்பட்ட வரலாறுகள் புகுத்தப்படுகின்றன. அந்நிய மொழிக் கலாசாரங்கள், வேற்றுமொழி அடையாளம் வலுக்கட்டாயமாக எம்மக்களால் பிரயோகிக்கப்படுகின்றது. இவையாவையும் தட்டிக்கேட்காது, தடைப்படுத்தமுடியாது, எம்மக்களால் தேசிய ஆன்மாவில் ஏற்படுத்தப்படும் வடுவை நாம் தாங்கிக்கொண்டு வெறும் கோழைகளாகவும் ஏமாளிகளாகவும் இருப்போமானால் நாளைய எமது பொழுதுகள் இருண்டதாகியதாகவே இருக்கும்.

ஏனெனில், பண்பாட்டுப் பழக்க வழக்கத்தை மறந்து இனத்தின் அடையாளத்தை இழந்து பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டவன் மனிதனாக இப்பூமியில் வாழமுடியாது. இவற்றைத் தக்கவைக்க உயிர்துறக்க நேரிடினும் அதற்காக துணிந்து சாவை எதிர்த்துக் கொண்டு வெற்றியீட்டுவோனே மனிதனாக முடியும். இதை தீர்மானிக்கின்ற சக்திகளாக எமது மக்கள் மாறும்நிலை உருவாகும் போதுதான் எமது அடையாளம் பேணிப்பாதுகாக்கப்படும்.

**அ.அன்ரனி**

நன்றி: எரிமலை




கலாநிதி **ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன்**

அவர்களை

மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் விரிவுரையாளர் நவாலியூர் ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன் (B.Sc.(Hons.), Ph.d.(medi.chem)London லிவர்பூல் பல்கலையில் பட்டம்பெற்றமையிட்டு மனதார வாழ்த்துகிறோம்.

செ.ரமேஷ்

உள்ளூராட்சி உதவியாளர் பிரதேச சபை, மானிப்பாய்.

HSCMF,
Navaly. (C33695)(34)


## DEPARTMENTAL HEALTH SERVICES - TH., JAFFNA

## CALLING FOR TENDERS

The Chairman, Divisional Tender Board, TH, Jaffna will receive sealed Tenders for the undermentioned repair work up to10 a.m. on 31.03.2004

1) Repairs to Ward No: 20
2) Repairs to Ward No: 21

(2) Tenders should be submitted on the forms obtainable from Director, TH, Jaffna on payment of Rs.2,000/- each up to 26/03/2004. Tenders will be opened immediately after the closing date on 31/03/2004 at 10 a.m.

(3) Tenderers or Authorised Representatives are requested to be present at the opening of Tenders. Tender forms will be issued to contractors having vaild registration in Grade M7 and above in the field of building construction under the ICTAD and valid membership of NCCASL.

(4) Sealed Tenders may be sent by Registered post or hand delivery and deposited in the Tender Box at the above address to receive before the colosing data.

(5) Tender documents may be inspected at Director's office on free of charge. For further details, please contact A.O.,GH.Jaffna.

**Dr.S.Sathurmugam,**
**Chairman,**
**Divisional Tender Board,**
**TH.,Jaffna.**

(c-33689)(36-21-19-26)

## கிராம அபிவிருத்தி அலுவலருக்கு பதவியுயர்வு

வலி.தென்மேற்கு,மார்ச்19

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.ஏச்.ஜே.சீவரத்தினம், வலி.தெற்கு பிரதேச செயலகப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி ஆகியோர் தரம் ஒன்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச சேவை ஆணைக்குழு இவர்கள் இருவரும் கடந்த 10.09.2002 திகதி முதல் தரம் ஒன்றிற்கு பதவி உயர்ததப்பட்டிருப்பதாக அறிவிக்கும் கடிதம் ஒன்றை இம்மாதம் அனுப்பி வைத்துள்ளது. (எ-135)

## கணிப்பீட்டுப் பரீட்சைகள்

தென்மராட்சி,மார்ச்19

தென்மாராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளின் தரம் 2முதல் 5 வரையிலான வகுப்பு மாணவர்களுககான முதலாம் தவணைக் கணிப்பீட்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி கணித பாடமும், 24ஆம் திகதி சமயம், தமிழ் ஆகிய பாடங்களும், 25ஆம் திகதி சுற்றாடல் சார் செயற்பாடுகள், ஆங்கிலம் ஆகிய பாடங்களும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-117)

## பாதீனியத்தை அழிப்பதில் உதவியோருக்கு உலர் உணவு

வலி.தெற்கு,மார்ச்19

உடுவில் கமநலசேவை நிலையத துக்குட்பட்ட விவசாய சம்மேளனங்கள மூலம் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பாதீனியம் செடிகளைக் கையால் களைகட்டியவர்களுக்கு உலர் உணவு விநியோகிக்கபபடவுள்ளது.

உலக உணவு ஸ்தாபனத்தின் மூலம் இந்த உலர் உணவுகள் வழங்கப்படவுள்ளன.

உலர் உணவுகள் சம்பந்தப்பட்டவர்களின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளுக்கு அனுப்பிவைக்கபட்டுள்ளன என்றும் -

இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டவாகள் தத்தமது சங்கக் கிளைகளுக்குச் சென்று உலர் உணவைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - கமநல சேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-152)


# சேரன் வாணிபம்

## பணிநிலை வெற்றிடம்

- ✦ பணிநிலை: வெதுப்பக உற்பத்தியாளர் - பயிலுநர் ஆண்
- ✦ தகைமைகள்: க.பொ.த.(சாதாரணதர) தமிழ், கணிதம் உட்பட 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- ✦ கொடுப்பனவுகள்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- ✦ பயிற்சிக்காலம்: 06 மாதங்கள்

☞ மேற்காணும் தகைமைகளை உடையவர்கள்-

❑ தேசிய அடையாள அட்டை

❑ பிறப்புச் சான்றிதழ்

ஆகிய ஆவணங்களுடன் 23.03.2004 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கீழுள்ள முகவரிக்கு நேரில் வருகைதருமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள்.


**அரஸ்கோ**

இல.431, கண்டி வீதி,

அரியாலை, யாழ்ப்பாணம். (C/33690)

(38-12-40)


# ஓராண்டை நினைவு கூருவோம்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 - 03 - 1935 |  | 31 - 03 - 2003 |

அமரர்

## சோமசுந்தரம் குலேந்திரன்

(ஓய்வுபெற்ற கணக்காளர் வ.பி.போ.சபை)

திதி: 19-03-2004 சதுர்த்தசி

*ஆண்டொன்று போனதப்பா ஆறவில்லை*
*எமதுள்ளப் பாசம்*
*நீண்ட நாட்த் தொடர்பன்றோ நீக்க*
*எம்மால் முடியுமோ அப்பா*
*ஆண்டகைக் கழகதாமோ எம்மை ஆறாத்*
*துயரில் விட்டுவிட்ட அன்பு*
*பூண்ட உங்கள் ஆத்ம சாந்திக்காக*
*என்றென்றும் நினைந்து பூசித்து வணங்குகின்றோம்.*

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

இணுவில் தெற்கு,
இணுவில். (29760) (26-19-21)


"தீயினால் எரிந்துபோன எங்கள் வாழ்வில் ஒளி ஏற்றியவர்
தலைவர் கொத்தலாவல"
யாழ்ப்பாணம் கிறாமீன் பெண் அங்கத்தவர்கள்
CEYLINCO GRAMEEN CREDIT
Touching People's Lives
HOLMES POLLARD & STOTT

# தையற் கண்காட்சி

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் சங்கம் நடத்தும் தையல்கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் புதுவீதியில் அமைந்துள்ள போருட் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்சின்னத்துரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு காரைநகர் உதவி அரச அதிபா வே.சாம்பசிவம், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்செல்வநாயகம ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக கலந்துகொள்ள உள்ளனர். (ம-73)

## கணனிப் பயிற்சி

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சங்க சனசமூக நிலையத்தில் கணனிப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படடுள்ளன. இந்தக் கணனிப்பயிற்சிநெறியில இணைந்து கொள்ளவிரும்புவோர் நிலையத்தின் தலைவர் சிவநாயகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-ரி)

# நல்லூர் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர்களுக்கு திடீர் இடமாற்றம்

தெல்லிப்பழை,மார்ச்19

நல்லூர் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபைகளுக்கு புதியசெயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உடனடியாகக் கடமையேற்குமாறு இரு செயலாளர்களுக்கும் மாகாண உள்ளூராட்சி அமைச்சு கடிதங்களை அனுப்பியுள்ளது. தேர்தலுக்காக இடமாற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இவர்கள் இருவருக்கும் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வலி.வடக்கு பிரதேசசபையின் செயலாளராக கடமையாற்றி வந்த பொ.வைரமுத்து நல்லூர் பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதேவேளை வலி. வடக்கு பிரதேச சபைக்கு செ.செல்வரததினம் மீள்பணியாற்றுகை அடிபபடையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே, இவ்விரு நியமனங்கள் தொடர்பாக கடிதங்கள் அனுப்பப்பட்டபோதிலும் மாகாண அமைச்சின் பொதுச்சுற்று ஒன்றிற்கமைவாக இந் நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது விசேட கடிதங்கள் மூலம் இவ்விடமாற்றம் மற்றும் நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-150)


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனித் திங்கள் 9 ஆம் நாள் (22. 03. 2004) திங்கட்கிழமை பிற்பகல் 1.15 மணி முதல் 3. 00 மணி வரையுள்ள துதியை திதியும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்



எமது புத்திரன் திருநிறை செல்வன்
துவச்செல்வன்
அவர்களுக்கும்

jpU.jpUkjpv]; .gh];fud; jk;gjpfspd;
புத்திரி திருநிறைசெல்வி
உஷேனுா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

மன்னந்தோட்டம்.
இணுவில் மேற்கு.
இணுவில்.

திரு.திருமதி.கே.ஆர்.புண்ணியமூர்த்தி
(தவில் வித்துவான்)
தம்பதிகள்.

(330707) (41)

தனிப்பட்ட அழைப்பு இல்லை. இந்த அழைப்பிதழை ஏற்று வருகைதருமாறு வேண்டுகிறோம்.

உ
ஸ்ரீராம ஜயம்

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனித்திங்கள் 09ஆம் நாள் (22.03.2004) திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரமும் பூர்வபட்சத் துதியை திதியும் சித்தயோகமும் இடபலக்கினமும் கூடிய சுபத்தினத்தில் முற்பகல் 10.00 மணிமுதல் 11.26 மணிவரையிலான சுபமுகூர்த்தவேளையில்,

நீர்வேலி, சிறுப்பிட்டி
ஸ்ரீசெல்லப்பிள்ளையார் தேவஸ்தானம்
பிரம்மஸ்ரீ ச.சதாசிவசர்மா தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி
அபிராமி
அவர்களை



கொக்குவில், தாவடி தெற்கு
ஸ்ரீவடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
பிரம்மஸ்ரீ ச.நாகேந்திரஐயர் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி
சசிதர சர்மா
அவர்களுக்கு

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்யத் திருவருளும், குருவருளும் பெரியோர்களின் ஆசியும் கூடி நிச்சயிக்கப்பட்டுள்ளதால் மணமகளில்லத்தில் நடைபெறும் மேற்படி முகூர்த்தத்தில் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துமித்திரர் சகிதம் வருகைதந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

ஸ்ரீமதி பா.சதாசிவ சர்மா
ஸ்ரீசெல்லப்பிள்ளையார் தேவஸ்தானம்
சிறுப்பிட்டி, நீர்வேலி.
தொலைபேசி இல. 077 6253404

ஸ்ரீமதி தி.நாகேந்திர ஐயர்
ஸ்ரீவடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
தாவடி தெற்கு, கொக்குவில்.
தொலைபேசி இல. 021 222 5135

சமாவர்த்தனம்: காலை 6.00 மணிக்கு
வதூவரகிருகப் பிரவேசம்: மாலை 4.00 மணிக்கு
} மணமகளில்லத்தில் நடைபெறும்.

(29797) (24-14-12-21) (இரு வீட்டார் அழைப்பு)

# NOW ON SALE

New medical Books for
1st year and 2nd year students

- BAILEY AND LOVE'S SHORT PRACTICE OF SURGERY - 2nd Edition
- ROBBITS BASIC PATHOLOGY - 7th Edition
- LAST'S ANATOMY Regional and applied *Chummy.S.Sinnathamby*

MANY OTHER MEDICAL BOOKS ARE AVAILABLE AT COLOMBO PRICE.

**SRI LANKA BOOK DEPOT**

(C/33706)(21-12-14) 234,K.K.S. ROAD, JAFFNA. T.P.: 222 2573

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 561 |
| திகதி | 16.03.2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4593016-4607140

வெற்றி இலக்கங்கள் **08 30 43 54**

லக்கினம்
சிங்கம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,682,700/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 2,370,500/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 307,802 | 10 | 3,078,020 |
| 2 இலக்கங்கள் | 28,345 | 20 | 845,160 |
| 1 இல + லக்கினம் | 28,172 | 30 | 566,900 |
| 2 இல + லக்கினம் | 2,521 | 100 | 252,100 |
| 3 இலக்கங்கள் | 742 | 500 | 371,000 |
| 3 இல + லக்கினம் | 80 | 5,000 | 400,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,682,700 | - |
| மொத்தம் | 367,666 | - | 5,913,180 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,913,180/-

தொடர் இல. 5574865க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 மார்ச் 19ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்.
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4595018-7-31
4604330-5-36
4601745-8-57
4594851-7-38
4601590-7-50

PHOENIX O&M

இந்தியாவில் படியுங்கள் ~ பெங்களூர் பல்கலைக்கழகம்

# பிருந்தாவன் கல்லூரி

(முன்னைய தேசிய முதலாம் தர கல்லூரி)

**BRINDAVAN COLLEGE**

க.பொ.த. உயர்தரம் முன்னரே ஆயத்தம்

3 வருடங்கள் → பெங்களூர் பல்கலைக்கழகப் பட்டம்

2nd Cross, Bhoopasandra, RMV Extn.2nd Stage, Bangalore 94
Tele:0091-80-23414557, 23417833 Fax:0091-80-23625621, 23417832
E.mail:nfgc@bgl.vsnl.net.in Website:www.nfgcollege.com.

*Undergraduate Courses*

B.Sc. Biotechnology
B.Sc. Genetics
B.Sc. Microbiology
B.Sc. Computer Science
B.B.M. Business Management
B.C.A. Computer Application
B.Com.+ Commerce + Computer

*Post Graduate Courses*

M.Sc. Microbiology
M.Sc. Biotechnology
M.B.A Business Administration
M.C.A Computer Application

## இலவசக் கருத்தரங்கு

மார்ச் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணி

## உடனே அனுமதிகள்

மார்ச் 21-22 ஆம் மு.ப.11.00 முதல் பி.ப.5.00 வரை

இடம்: COLOMBO HILTON

அனுமதி வழங்குபவர்: அதிபர்/நிறுவன முகாமையாளர்

# 100% சித்திகள் எல்லாமே 1 ஆம் தரம் - M.Sc. Micro Biology பல்கலைக்கழகங்கள் தரத்தில் 1 ஆம், 2 ஆம் நிலைகள்.
# 260இற்கு மேற்பட்ட சிறிலங்கா மாணவர்கள் கற்கின்றார்கள்.
# ஆண்கள், பெண்களுக்கு தனியான விடுதி வசதிகள்.
# ஏற்கனவே 250 சிறிலங்கா மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.
# 41 தேசிய இனங்களைச் சேர்ந்த மாணவர்
# ICCR மூலமாக இந்தியஅரசு புலமைப் பரிசில் மாணவர்கள்.
# 2004 ஆம் க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்கள் பதிவுசெய்து இடஒதுக்கீடு செய்யலாம். இதனால் ① வருடம் சேமிக்கலாம்.
# பதிவுசெய்து ஒதுக்கீடுபெறக் கட்டணம் US $ 400

**Company Secretarial Services (Pvt) Ltd**
# 285C-1/1, St Tillakaratne Mawatha, Jubilee Post, Nugegoda
Tel: 011-2854438-E.Mail: yapadd @ sol.lk. (சி33705)(21-34-19-12)

புலமைப் பரிசில் திட்டம்/ தவணைமுறை பணம் கட்டல்/கழிவுகள் என்பன கருத்தரங்கில் பதிவுசெய்வோருக்கு வழங்கப்படும்.

# உள்நாட்டு உற்பத்திகளுக்கு அரசாங்கம் முதலில் முக்கியத்துவம் தரவேண்டும்

## ஆடைத் தொழிற்சாலை அதிபர் ஹீனட்டிகல வலியுறுத்துகிறார்



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் ஆடைத்தொழிற்சாலை அதிபர் ஹீனட்டிகலவை செவ்வி காண்கிறார்கள். ஹீனட்டிகலவின் மனைவி வங்கி அதிகாரி, மொழிபெயர்ப்பாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் தொழிலதிபர் லால் ஹீனட்டிகல கடந்த 16ஆம் திகதி தோன்றித் தனது தொழில் முன்னேற்றம் பற்றி விவரித்தார்.

ஆடைத் தொழிலில் முன்னேற்றம் கண்டுள்ள 'ஹீனட்டி கல அப்ரல்ஸ்' ஆடைத் தொழிற்சாலையின் அதிபரான லால் ஹீனட்டிகல உள்நாட்டு உற்பத்திகளுக்கு அரசும் முக்கியத்துவம் தரவேண்டும் என்று வலி யுறுத்துகிறார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் ஹீனட்டிகலவை செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* நீங்கள் இந்தத் துறையை எப்படி ஆரம்பித்தீர்கள் என்பது பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* நான் யாக்கல பகுதியில் உள்ள எனது வீட்டில் ஐந்து தையல இயந்திரங்களுடன் ஆண்களுக்கான 'சேர்ட்' தைக்கும் தொழிலை ஆரம்பித்தேன். இதை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆடைகள் மொத்தமாக விற்பனை செய்யும் ஸ்தாபனமொன்றில் தொழில்செய்தேன். தையற்கலையிலும் பயிற்சிகள் உள்ளன. எனவே, இந்தத்துறையைத் தேர்ந்தெடுத்தேன்.

முதல்முதலாக நான்கு பேருடன் 'சேர்ட்' தைத்து கடைகளுக்கு விற்கும் வியாபாரத்தை ஆரம்பித்தேன். அந்த 'சேர்ட்டுகளுக்கு' 'கிவி' என்ற வியாபார அடையாளத்தை பொறிதது விற்பனை செய்துவருகிறேன். இன்று எனது தொழிற்சாலையில் 40 பேர் வேலை செய்கின்றனர்.

ஆரம்பகாலத்தில் மிகவும் கஷ்டபட்டேன். எனது வியாபாரத் துறையை மேலும் விஸ்தரிப்பதற்குத் தையல் இயந்திரங்கள், நூல் போன்றவற்றை வாங்குவதற்கு பெருந்தொகையான பணம்தேவை. இதற்குக் கடனுதவி செய்யுமாறு செலான் வங்கியிடம் சென்றேன்.

அவர்கள் எனது தொழில் நடைபெறும் இடத்திற்கு வந்துபார்த்தனர். பின்னர் எதுவித தயக்கமும் இன்றி உதவி செய்வதாகக் கூறினர். அதன்படி மிகவும் தரம்வாய்ந்த 18 தையல் மெசின்களை வாங்குவதற்கு உதவி புரிந்தனர். நாளொன்றுக்கு நாற்பது சேர்ட்டுகள் மட்டுமே உற்பத்தி செய்தேன். இன்று இருநூறு சேர்ட்டுகள் தினமும் தயாரிக்கிறேன்.

*கேள்வி:* உங்களின் உற்பத்திகளுக்குச் சந்தைவாய்ப்பு எப்படியுள்ளது?

*பதில்:* எனது தயாரிப்புகளுக்கு உள்நாட்டில் நல்ல சந்தைவாய்ப்பு இருக்கின்றது. செலான் வங்கி தொடர்ந்தும் எனக்கு ஒத்தாசை வழங்கி வருவதால் மேலும், உற்பத்திகளைப் பெருக்கக் கூடியதாகவுள்ளது. விரைவில் புதிய கட்டடத் தொகுதியில் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு செலான் வங்கி கடனுதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

அப்படியான சூழ்நிலையில் உற்பத்திகளைப் பெருக்கி மேலும், பலருக்குத் தொழில்வாய்ப்புக்களை வழங்கமுடியும்.

ஆரம்பகாலத்தில் வெறும் ஆடையகங்களுக்கு மட்டுமே சேர்ட்டுகளை மொத்தமாக விற்கக்கூடிய நிலை இருந்தது. இன்று ஐம்பதிற்கு மேற்பட்ட மொத்தவியாபாரிகள் என்னிடம் சேர்ட்டுகளைக் கொள்வனவு செய்கின்றனர்.

*கேள்வி:* மாதமொன்றுக்கு எவ்வளவு தொகையான சேர்ட்டுகளைத் தயாரிக்கின்றீர்கள்?

*பதில்:* உரியமுறையில் எனது உற்பத்திக்கு இருக்கும் சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்தினால் மாதமொன்றுக்கு 30 ஆயிரம் சேர்ட்டுகளைத் தயாரித்து அவற்றை விற்கவும்முடியும்.

எனவே, புதிய கட்டடத்தொகுதியில் மேலும் புதிய இயந்திரங்களை பயன்படுத்தி உற்பத்திகளைப் பெருக்க முடியும் என்பது எனது முழுநம்பிக்கையாகும். இன்றைய குறை, அதற்கான இடவசதிகள் போதாமையேயாகும்.

நாங்கள் உற்பத்திசெய்யும் சேர்ட்டுகளைக் கொள்வனவு செய்பவர்கள் சுமார் இரண்டு மாதகால அவகாசத்திலேயே காசோலைகளைத் தருகின்றார்கள். எனவே, பெருந்தொகையான பணத்தை அதில் முடக்கவேண்டியுள்ளது.

*கேள்வி:* நீங்கள் உள்நாட்டு உறபத்திகளைப் பெருக்குவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் உள்நாட்டு உற்பத்திகளுக்கு முதலில் முக்கியத்துவம் வழங்கவேண்டும். உள்நாட்டு உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கினால் பணப்புழக்கம் அதிகரித்து மற்றும் தொழில்வாய்ப்புக்கள் அதிகரிக்கும். நான்கு பேருடன் ஆரம்பித்த எனது தொழிற்சாலையில் இன்று நாற்பது பேர் தொழில் புரிகின்றனர். இதை இன்னும் விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளேன். அப்போது நூற்றுக்கணக்கானோருக்குத் தொழில் வாய்ப்புக் கிடைக்கும்.

*கேள்வி:* உங்கள் முன்னேற்றத்தின் ரகசியம் என்ன?

*பதில்:* அயராத உழைப்பு. எனது வியாபாரத்துறைக்கு எனது மனைவி முக்கிய பங்கு வகிக்கிறார். என்ன செய்தாலும் இருவரும் கலந்தாலோசித்தே முடிவெடுப்போம். செலான் வங்கியிலும் நாம் இருவரும் இணைந்த கணக்கொன்றை ஆரம்பித்தோம். அக்காலத்தில் மிகவும் கஷ்டமான சூழ்நிலை. எனது மனைவியின் ஒத்துழைப்பு எனக்கு மிகவும் பயனளித்தது. இன்றும் இருவரும் கலந்தாலோசித்தே முடிவு செய்வோம்.

- இவ்வாறு ஹீனட்டிகல தெரிவித்தார்.

# தமிழக மீனவரால் ஏற்படும் இன்னல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குக!

## நெடுந்தீவு மீனவர்சங்கம் அரச அதிபரிடம் கோரிக்கை

கொக்குவில்,மார்ச்19

தமிழக மீனவர்களினால் ஏற்படும் இன்னல்களைத் தடுத்து நிறுத்துமாறு நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் யாழ். அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர் மி.யேசுதாசன் இது விடயமாக அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இரவு, பகல் பாராமல் எமது கடற்பிரதேசத்திற்குள் அத்துமீறிப் படையெடுத்துவரும் தமிழக மீனவர்களினால் நாம் அடையும் இன்னல்களைச் சொல்லில் அடக்கிவிடமுடியாது.

இங்குள்ள கடல்வளங்களை சூறையாடிப் பல லட்சம் பெறுமதியான தொழில் உபகரணங்களை அழிப்பதும் அல்லாமல், மீனவர்களின் உயிரையும் காவு கொள்ளுமளவிற்கு கோரத்தாண்டவமாடுகின்றார்கள். இத்தகைய செயல்கண்டு நாம் பெரும் அச்சமும், கவலையும் அடைந்துள்ளோம். எமது தீவிலுள்ள மீனவர்களும் தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

சர்வசாதாரணமாக பல மைல்களை தாண்டி ஆயுத சகிதம் இங்கு வந்து திட்டமிட்ட முறையில் செய்துவரும இந்தச் சதிமுயற்சி அவர்களது கட்டுக்கடங்காத செயலைக் காட்டி நிற்கின்றது. இவர்களை கட்டுப்படுத்துவது யார்? எம்மைப் பாதுகாப்பது யார்?

ஏற்கனவே, உள்நாட்டுப் போரால் நலிவடைந்துள்ள மீனவ சமூகம் இனியும் இதுபோன்ற சம்பவங்களை எப்படித்தாங்கிக் கொள்வது என்ற அச்சம் கலந்த சந்தேக வினாக்கள் எம்முன் எழுந்து நிற்கின்றது.

எனவே, எமக்குத் தொடர்கதையாகவிருக்கும் இந்தத் துயரச் சம்பவங்களை தங்கள் முன் கொண்டு வருகின்றோம். இதில் தாங்கள் தீவிர கவனம் எடுத்து எம்மைப் பாதுகாக்க இதற்குரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது.

இதேவேளை - குடாநாட்டில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் இது தொடர்பான வேண்டுகோளை அண்மைக்காலமாக அரச அதிபரிடம விடுத்து வருவது தெரிந்ததே.(எ-76)

# சண்டிலிப்பாய் – யாழ்ப்பாணம் பஸ் சேவை; போதியளவு பஸ்கள் இப்போது இல்லை

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை தெரிவிப்பு

சண்டிலிப்பாய் - யாழ்ப்பாணம் பஸ் சேவையை நடத்துவதற்கு போதிய பஸ்கள் (பேருந்துகள்) தம்மிடம் இல்லை என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் க.பாலசிங்கம், வலி. தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை செயலாளருக்கு எழுதிய கடிததத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆனைக்கோட்டை - நவாலி - கட்டுடை ஊடாக சண்டிலிப்பாய்வரை சேவையை நடத்துமாறு கோரி வலி.தென்மேற்குப் பிரதேச சபையும் மானிப்பாய் சுகாதார கழக சுற்றாடல் விவகார சபையும் போக்குவரத்துச் சபைக்கு கடிதங்களை அனுப்பி இருந்தன.

இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் புதிய சேவையை நடத்துவதற்குப் போதிய பஸ்கள் தேவை என்றும் -

தற்போது தம்மிடம் உள்ள பஸ்களைக்கொண்டு இந்தச் சேவையை நடத்த முடியாது என்றும் -

தங்களது கோரிக்கையை நிறைவேற்ற முடியாதுள்ளது எனவும் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் மேலதிக பேருந்திகள் கிடைக்கும் பட்சத்தில் தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படும் என செயலாற்று முகாமையாளர் க.பாலசிங்கம் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(ம-185)

## ஆன்மீக நிகழ்வு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைநது மாதாந்தம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் இந்துகலாசார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் "குறள் காட்டும் வாழ்க்கை நெறி" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ம-ரி)

# தொலை அஞ்சல் மூலம் மொறகொட பிரசாரம்

கொழும்பு,மார்ச்19

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தனது ஆதரவாளர்களுடன் தொலை அஞ்சல் மற்றும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு பிரசாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

மொறகொடவின் தொலை அஞ்சல்களுக்கு ஆதரவாளர்கள் பலர் ஆர்வத்துடன் பதில்தந்து வருகிறார்கள் என்றும் - சில பதில்கள் விமர்சனப்பாணியில் அமைந்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

குறிப்பாக, மொறகொடவின் ஆதரவாளர்கள் பலர் அனுப்பியுள்ள தொலை அஞ்சல் பதில்களில், தீர்க்க முடியாத நிலையில் இருந்துவரும் நமது நாட்டின் பிரச்சினைகளை நிதானமாகவும், பொதுச் சிந்தனையோ டும், ஒற்றுமையோடும் தேசியக் கடமையென்ற ரீதியிலும் அணுகித் தீர்க்கவேண்டும் என்று யோசனை கூறியுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மொறகொடவின் அஞ்சல் செய்திகள், ஆதரவாளர்களுக்குத் தமிழ், சிங்களம், ஆங்கிலமொழிகளில் அனுப்பிவைக்கப்படுகின்றன.



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் துணை நிறுவனமான செயற்றிறன் அரங்க இயக்கத்தினரால் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகம் மேடையேற்றப்பட்டு வருகின்றது. அண்மையில் மாதகல் - நுணசை வீதியில் விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. *(படம்: மாதகல் செய்தியாளர்)*

# முதலாம் ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்து 2ஆம் ஆண்டில் காலடி பதிக்கும்

## முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட Super Market




# Annai Nagaa Food City

- ★ சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள், இறைச்சி வகைகள்
- ★ பலவகையான ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள்
- ★ இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகள், பழரசங்கள்
- ★ ஆங்கில மருந்து வகைகள் (Pharmaceuticals)
- ★ அன்பளிப்பு, அழகுசாதன, வாசனைத் திரவியங்கள்
- ★ அனைத்து பாடசாலைப் பொருள்கள்
- ★ சிறுவர், சிறுமியருக்கான அனைத்துப் பொருள்கள்
- ★ நவீன டிசைன்களில் நங்கையர் விரும்பும் கண்கவர் தங்க நகைகள்
- ★ இவை மட்டுமன்றி மங்கையர்களின் - வேலைப் பளுவைக் குறைக்கும் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள்.

## இப்பொழுது

## முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு என்றுமில்லாத வகையில் விசேட விலைக் கழிவு

# Annai Nagaa Food City இல்

- ★ ஒன்றை வாங்கி மற்றொன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- ★ குலுக்கல் முறையிலான பரிசில்கள்.
- ★ கடன் அட்டை (Credit Card) மூலம் பொருள்களைப் பெறும் வசதி.
- ★ இலவச விநியோக சேவை (யாழ். மாநகர சபை எல்லைக்குள்).
- ★ Nilkamal வீட்டுத் தளபாடங்களை அதிகூடிய விலைக்கழிவில்.

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

இவை அனைத்தும் ஆண்டு நிறைவை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் விசேட சலுகைகளாகும்.

இன்றே விரையுங்கள்

175, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : (021) 2225515, (021) 2225223

(C/33707) (22-11-16)

**Hemas Pharmaceuticals**

நிறுவனத்தின் அனுசரணையுடன் இன்று காலை 10 மணிக்கு நீரிழிவு, குருதி அமுக்கம், ஆஸ்மா போன்ற நோய்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள் வழங்கப்படும். இதனை நடத்தும் டாக்டர்கள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்து வருகைதருவார்கள்.

# மெய்வன்மைப் போட்டிகள்

மானிப்பாய்,மார்ச்19

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மனிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் அ.நடராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில் பிரதமவிருந்தினராக வலிகாமம வலய உடற்கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக சேவைக்கால ஆலோசகர்களாக வி.குகவேள், எம்.லோகநாதன் மற்றும் பழைய மாணவர் யோகானந்த ராஜா ஆகியோரும் கலந்துகொள்ள வுள்ளனர். (எ-ரி-90)

★ ★ ★

செம்பியன்பற்று,மார்ச்19

செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி அதிபர் வே.அம்பலவாணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-118-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்19

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் அ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ-ரி)

★ ★ ★

கோப்பாய்,மார்ச்19

அச்செழு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.சின்னராசன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்ட உதவிக கலவிப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் சிறப்பு விருந்தினர்களாக தியாகி அறக்கொடை நிறுவன இயக்குநர் செ.கமலநாதன், அசசெழு கிராம அலு வலர் செ.வசந்தகுமார், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.இலட்சுமணன் ஆகியோர் கலந்துகொள்வா. (எ-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்19

திருநெல்வேலி றோ.க.த. கலவன் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் முன்பாகவுள்ள நல்லூர் சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தின் அருகில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி க.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் சட்டத்தரணி க.கேசவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

## வானியல் பாசறை

யாழ்ப்பாணம்,மார்ச்19

புத்தூர், யா/புத்தகலட்டி ஸ்ரீ வஷ்ணு வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை வானியல் பாசறை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இரவு 7.00 மணிமுதல் மாணவர்கள இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வர். (ஐ)

## கல்வியியற்கல்லூரி 3ஆம் அணியினருக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாம் அணி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

## காரைநகரில் சங்கக்கடை உடைப்பு

காரைநகர்,மார்ச்19

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளை உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப் பட்டுள்ளன.

காரைநகர் பாலாவோடையில் அமைந்துள்ள இந்தக்கிளை நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு சுமார் 15ஆயிரம் ரூபா பெறுமதியான பொருளகள் களவாடப்பட்டுள்ளன என்று சங்க நிர்வாகத்தினர் ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை, இப்பகுதியில் கடந்த வாரம் தனியார் வர்த்தக நிலையம் ஒன்றும் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் பல திருடப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-73)

## ஓராண்டில் நெஞ்சகலா நினைவலைகள்

19.03.2004

அமரர் செல்லப்பா பரமானந்தம்

பாண்டியந்தாழ்வு

*அன்பான பெரியப்பாவே! ஆண்டுகள் ஒன்றென்ன·*
*ஆயிரம் கடந்தாலும் பண்பான உங்கள் பேச்சும் பாசமுள்ள*
*சிரிப்பும் - எங்கள் இதயத்தை விட்டகலாது*
*என்றும் உங்கள் நினைவுடன்*

*மு.கார்த்திகேசு*
*யாழ். சுவை வெதுப்பகம்,*
*முல்லைத்தீவு.*

கா. பாஸ்கரன்
நிவேதினி - வெதுப்பகம்
யாழ்ப்பாணம்.

(29815)(31-16-11)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் திரு.த.சுஜேந்திரன் அவர்களின்

அன்புத் தந்தையார்

தனபாலசிங்கம்

அவர்கள் 16.03.2004 அன்று காலமாகிவிட்டார். இவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

நல்லூர் பிரதேச செயலக
நலன்புரிச் சங்க ஊழியர்கள்.

(29813)(17-11-16-31)

## 31 ஆம் நாளில் கண்ணீர் முத்துதிர்க்கின்றோம்.....

பெற்றவர் மகிழ்ந்திட... 15 . 06 . 1929



உற்றவர் உருகிட..... 18 . 02 . 2004

திருமதி வீரசிங்கம் சரஸ்வதி

திதி - 19.03.2004

*சிவராத்திரி தினத்தில்*
*எல்லோரும் விழித்திருக்க.....*
*நீர் மட்டும் விழி மூடியதேன்....?*
*ஈசன் திருவடி செல்ல*
*ஒரு வரிகூட பேசாது சென்றதேன்....?*
*சரஸ்வதி எனும் திருநாமம் – உம்*
*குண நலத்தை கோடுகாட்ட கூட்டை விட்டுப் பறந்ததேன்....?*
*தாயே....*
*நீர் சென்ற இடம் அமைதி தர*
*எமக்கும் அமைதி வருமா?*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*புகையிரத வீதி அருகில். மல்லாகம்.*
T.P. 077 6075121.

- குடும்பத்தினர்.

(29817)(31-11-16)


கணிப்பீட்டறிக்கைகள்

தரம் 1 முதல் 11 வரை வகுப்புகளுக்குரிய கணிப்பீட்டறிக்கைகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

★பாடசாலைக்குரிய சகல படிவங்களும் உண்டு

தயா அச்சகம்

கொம்பியூட்டர் ஓவ் செற் பிறிண்டேஸ்
138. நாவலர் வீதி. யாழ்ப்பாணம்
(நாவலர் பாடசாலை முன்பாக)
(T.P: 222-2881).
#33710)(37)

ENGLISH SPOKEN AND GRAMMAR

BY: BRITTO

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
புதிய பிரிவு ஆரம்பம:
20.03.2004
நேரம்: சனி காலை 10 மணி
இடம்:
கொக்குவில
(ஞான பண்டித வித்தியாசாலை அருகில்)
(C/33717)(38)

லிபேட்டி அச்சுவேலி



விஜய், ஜோதிகா, தேவயானி, வடிவேல் மற்றும் பலர் நடித்த
ஃபிரண்ட்ஸ் (ரீல்ஸ்)
காட்சிநேரம் : 3.00, 7.00 (பி.நே.)

ராஜா யாழ்ப்பாணம்



சூரியா, லைலா, திரிசா நடித்த



மௌனம்பேசியதே
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C/33519)(12)

நிரஞ்சனாஸ் சங்கானை



மக்கள் திலகம் எம்.ஜி. ஆர். லதா. மஞ்சுளா நடித்த
நேற்று இன்று நாளை
(புத்தம் புதிய பிரதி –ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
SPY KIDS II
(C/33515)(12)

நாகம்ஸ் சுன்னாகம்

டொல்பி ஒலிநயத்துடன்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

பொலீஸ் அதிகாரியாக சரத்குமார், லைலா, வடிவேலு நடித்த
தம்பிரம்



தினசரி காட்சிகள்
11.00. 3.00.7.00.10.00(பி.நே.)
(C/33520) (12)


# மரண அறிவித்தல்கள்

## குமாரவேற்பிள்ளை முத்துகுமாரதாஸ்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், 117/5, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய நெடுஞ்சாலை திணைக்களத்தின் ஓய்வுபெற்ற எழுதுவினைஞரான P.C. முத்துகுமாரதாஸ் அவர்கள் 18.03.2004 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி குமாரவேற்பிள்ளையின் கனிஷ்ட புதல்வனும் திருமதி தங்கலக்சுமியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தா (நிறைவேற்று பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், மன்னார்), ஸ்ரீகுமார் (நோர்வே), நாகேஸ்வரா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சத்தியவதி (மன்னார்), தயாநிதி (நோர்வே), யமுனா கலா ஆகியோரின் அன்பு மாமனாரும் லதா (இந்தியா), நிவேதா (மருத்துபீடம், யாழ்ப்பாணம்), நிரோஷா (நோர்வே), ஹரிகிஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை லங்கா மலர்ச்சாலை புஞ்சிபொறளையில் வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பொறளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
T.P. 011 2361815.

(சி-3720)(31-16-11)

## திருமதி மகேஸ்வரி காசிநாதர்

**(கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை)**



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி காசிநாதர் 18.03.2004 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் ஆறுமுகம் காசிநாதர் (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொல்லங்கலட்டி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மலேசியா பிரதம எழுதுவினைஞர் நரசிங்கம் - சிவகாம்பிகை தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான குகதாசன், சிவதாசன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஸ்ரீதரன் (கிறீஸ் கப்பல் பணியாளர்), சசிதரன் (தெ.ப.நோ.கூ.ச.) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாக்கியலீலாவதி, குகரதி ஆகியோரின் அருமை மாமியும் குழகன், வாமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.03.2004 வெள்ளிக்கிழமை பி.ப. மயிலணி, சுன்னாகத்தில் உள்ள அவரின் தற்போதைய வதிவிடத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு சுன்னாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலனி, சுன்னாகம்.*

தகவல்:
ஆ.காசிநாதர் (கணவர்).

(29818)(39-16-11-31)

## ஆறுமுகம் இராசையா

நுணாவில் மேற்கு, வீரபத்திரர் வீதியை வசிப்பிடமாகவும் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசையா அவர்கள் நேற்று (18.03.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன் இராஜேஸ்வரி (லண்டன்), கிரிதரன் சசிகலாதேவி (சுவிஸ்), பாலச்சந்திரன் நித்தியகலா (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), கேதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஸ்ரீதரன், கிரிதரன், பாலச்சந்திரன், தர்சினி ஆகியோரின் மாமனாரும் யசோதரன், விஜித்தா, நிசாந்தன், அரவிந்தன், பத்மா, அகலியா, மிதுசியா ஆகியோரின் அன்புப் பேரனும் மயில்வாகனம், சரஸ்வதி, தனபாலசிங்கம், செல்வகுமார், சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான லோகநாதன், தவமணி, சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் பொன்னுத்துரை, பவளறாணி, தவமலர், நாகேஸ்வரி, ஜெயா, சிவா, தம்பிராசா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் சிவகுமார், நந்தினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் வீதி,*
*நுணாவில்.*
*T.P:- 0602213451,*
*0602212506*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(சி-33721)(39-16-11-31)

## திருமதி ஒப்பிலாமணி புவனேஸ்வரி

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி ஒப்பிலாமணி புவனேஸ்வரி அவர்கள் நேற்று (18.03.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிவக்கொழுந்துவின் மகளும் ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் முருகேசம்பிள்ளை ஒப்பிலாமணியின் மனைவியும் சுமதியின் (ஆசிரியர், யா/இந்து ஆரம்பப் பாடசாலை) தாயாரும் காலஞ்சென்ற நாகம்மா, சபாபதிப்பிள்ளை மற்றும் அம்பிகைபாகன், பத்மாவதி ஆகியோரின் சகோதரியும் பத்மநாதனின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.03.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*556,கஸ்தூரியார் வீதி.*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மு.ஒப்பிலாமணி,
ஒ.சுமதி (மகள்).

(29820)(17-11-16-31)

## அருளம்பலம் ஞானசம்பந்தன் (திரு)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அ.ஞானசம்பந்தன் நேற்று (18.03.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நீராவியடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வழக்கறிஞர் அ.அருளம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் நவாலியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தரத்தினம் மற்றும் மகேஸ்வரியின் அன்பு மருமகனும் சிவயோகத்தின் (யோகம்) அன்புக் கணவரும் திருமதி திலகவதி யோகநாதன், அ.அம்பலவாணர், அ.சேனாதிராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிறவுண் வீதி வைத்திய கலாநிதி வேலுப்பிள்ளை யோகநாதன், திருமதி அ. இந்திராணி, திருமதி சே.காயத்திரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 5 மணியளவில் (பு.நேரம்) கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*67, கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
திருமதி யோ.திலகவதி
(சகோதரி).

(29821)(31-11-16-)

## அரச கட்டுப்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாட்சிப்பத்திரம் போன்றவற்றை எடுத்து வரும்படி கோரப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் பொதிகள் எதையும் எடுத்து வரத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் அரச கட்டுப்பாடற்ற பகுதியில் 79 ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். வாக்காளர்கள் ஓமந்தை, மடுரோட், உயிலங்குளம் போன்ற பகுதிகள் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்து வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இராணுவச் சோதனைச் சாவடியிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும்.

வாக்காளர் வசதி கருதி வாகன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் - என்றார் அவர்.

**யாழ். மாவட்டத்தில்**

யாழ் தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு முகமாலை இராணுவச் சோதனை நிலையப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ். செயலகத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் உயர்மட்ட மாநாட்டில் இது விடயமாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படும்.

யாழ் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் அரச அதிபருமான செ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த மாநாட்டில் விடுதலைப்புலிகள், படையினர், பொலீஸார் ஆகிய முத்தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

முகமாலை இராணுவச் சோதனை நிலையப் பகுதியில் உள்ள கொட்டகைகளில் இந்த வாக்களிப்பு நிலையங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பாக கிளிநொச்சி, யாழ். செயலகங்களின் அதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் முகமாலைக்குச் சென்று நேரடியாக ஆராய்ந்துள்ளது.

கிளிநொச்சியில் இருந்து வாகனங்கள் மூலம் வாக்காளர்களை அழைத்து வருவதற்கான செலவை வழங்கத் தேர்தல் ஆணையாளர் யாழ். செயலகத்துக்கு உறுதி அளித்துள்ளார்.

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மோனகுருசாமி இவ்விவகாரம் குறித்துக் கூறியதாவது- இன்று (வெள்ளி) மாலை 3மணிக்கு இராணுவம் மற்றும் பொலீஸ் உயரதிகாரிகளுடன் நடைபெறும் சந்திப்பையடுத்து அதில் எடுக்கப்படும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்படி தேர்தல் ஆணையாளர் கூறினார்.

இதே போன்று ஏனைய வடக்கு - கிழக்கு தெரிவத்தாட்சி அதிகாரிகளையும் அவர் கேட்டுள்ளார். இன்று பிரதேச ரீதியாக மாநாடு கூட்டுகின்றோம். அதில் இறுதி முடிவெடுப்போம்- என்றார் அவர். (ஐ-க)

## பதின்மூன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விஞ்ஞான தொழில்நுட்பம், போன்ற அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சுக்கள் முற்றாகச் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட முன்னர் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களின் கீழ் இயங்கி வந்த 27 அமைச்சுக்கள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் நேரடியாக ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்த 27 அமைச்சுக்களிலேயே 13 அமைச்சுக்கள் தற்போது செயலிழக்கச் செய்யப்பட்டு 14 அமைச்சுக்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. (ஐ-4-7)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவருக்கு அரசு கோரிக்கை விடுத்திருக்கிறது. இப்படி அமைச்சர் பீரிஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.(ஐ-க)

## தொடர்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பலவீனமாக்கிவிடும்.

எதிர்வரும் தேர்தலில் பதவியேற்கும் அரசு விடுதலைப் புலிகள் தலைவராக ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும் தலைவர் வே.பிரபாகரனை அணுகியாக வேண்டும். அதேவேளை, விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகியிருக்கும் கருணாவை எப்படிக் கையாளலாம் என்பது பற்றிய வழிமுறைகளையும் அந்த அரசு ஆராய வேண்டியிருக்கும்.

கருணா பலமுறை எம்மை அணுக முயற்சித்தார். இருந்தும் திரைமறைவு பேரம் எதனையும் மேற்கொள்ளும் பழக்கம் எனக்கு இல்லை என்பதால் அதை நிராகரித்துவிட்டேன்.

மேலும் எனது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்குமிடையே பல்வேறு தொடர்புகள் இருந்து வருகின்றன. ஆனால், அதுபற்றி இப்போது கூறமுடியாது.

வரும் தேர்தலில் எமது கட்சி வெற்றியீட்டினால் அதன்படி அமையும் அரசு பேச்சுக்களை தொடர்ந்து நடத்தும்.

தற்போதைய பிரதமர் பேச்சுக்களை நடத்திய விதத்தைவிட தொழில்முறை திறனுடன் எமது பேச்சுக்கள் அமையும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருக்கமான சில சகாக்களை மட்டும் ஒரு மூலையில் வைத்துக்கொண்டு ஆலோசனைகளைச் செய்து பேச்சுக்களை நடத்தினார்- என்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

"பாதுகாப்பு விடயங்களை பிரதமர் கையாண்ட விதம் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது எனக் குற்றஞ் சாட்டி அந்த அமைச்சை உங்கள் வசம் எடுத்துக் கொண்டீர்களே? தாங்கள் பொறுப்பேற்ற பின்னர் ஏதாவது மாற்றம் செய்தீர்களா?" என ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டது.

"அவசியமான நடவடிக்கைகளைச் செய்வதற்கான நிதிகளை நிதியமைச்சர் தராமல் முடக்கிவிட்டார். எனவே, அவருடைய பதவியையும் பறித்தாகவேண்டிய சூழநிலை எனக்கு ஏற்பட்டது. ஆனால் நான் அவ்விதம் செய்யவில்லை, அப்படிச் செய்து அனைத்து அமைச்சுக்களையும் என் வசப்படுத்தி பைத்தியக்காரத்தனமாக நடந்துகொள்ள நான் விரும்பவில்லை"- என்று பதிலளித்தார் ஜனாதிபதி. (ஐ-4-7)

## 'காவிய நாயகன்' ஆற்றுகை 5 நாள்கள் மேடையேறும்

யாழ். திருமறைக்கலாமன்றத்தின் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி இம்முறை ஐந்து நாள்கள் மேடையேற்றப்படவுள்ளது.

'காவிய நாயகன்' என்ற பெயரில எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளிலும் ஏப்ரல் முதலாம், 3ஆம், 4ஆம் திகதிகளிலும் யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் இக்காட்சி மேடையேற்றப்படவுள்ளது.

நவீன தொழில்நுட்ப உத்திகளுடன் மிகப்பிரமாண்டமான அளவில் தயாரிக்கப்படவுள்ள இப்படைப்பில் 250இற்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இக்காட்சி நான்கு நாள்கள் மட்டுமே நடைபெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டபோதிலும் தற்போது அது ஐந்து நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தூர இடங்களில் இருந்து வருகை தருபவர்களின் நன்மை கருதி ஆசனப் பதிவுகள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கள்கிழமை முதல் ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## குப்பி விளக்கில் எரியுண்ட குழந்தை நேற்று மரணம்!

குப்பிவிளக்கு தட்டுப்பட்டு தீப்பற்றி எரிந்ததாகத் தெரிவித்து கடந்த 5ஆம் திகதி யாழ். ஆஸ்பத்தியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஆறு மாதக் குழந்தை ஒன்று நேற்று உயிரிழந்தது. கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த வீரப்பன் சதீஸ் என்ற ஆறுமாதக் குழந்தையே உயிரிழந்ததாகும். சடலம் மரணவிசாரணையின பொருட்டு பிரேத அறையில் வைக்கப பட்டுள்ளது. (4-7-15)


**விற்பனையாகின்றது!**

**க.பொ.த. உயர்தரம், க.பொ.த. சா/த பரீட்சைக்கான**

**S.S .ஆனந்தனின் புதிய வெளியீடுகள்**

- ★தமிழ் வழி - பரீட்சைக்கான வழிகாட்டி
- ★திருவடிசூட்டுப்படலம்
- ★செய்யுள் தொகுப்பு
- ★புனைகதை இலக்கியம் - (தேர்ந்த சிறுகதைகள், நாகம்மாள் நாவல்)
- ★பாரதியார் கவிதைகள்
- ★இலக்கண வழிகாட்டியும், உரைநடைத் தொகுப்பும்
- ★திருக்குறள்

க.பொ.த. சா/தரம்

- ★தமிழ் வழி - பரீட்சைக்கான வழிகாட்டி
- ★தமிழ் இலக்கியம்
- ★வீடற்றவன் - நாவல்
- ★தமிழ் மொழியும், இலக்கியமும் (சந்தர்ப்ப வினாக்கள்)
- ★தமிழ் மொழியும் இலக்கியமும் (வினாக்களும், விளக்கமும்)

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல,04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி:- 021 222 6693
(சி.33623)(39-11-16-30)

**CHEMISTRY**
GROUP CLASSES
2005 விரைவில் ஆரம்பம் 2006
★ THERMO ★ BASIC
DIAS B.Sc. (Hons)Spl. (2867)
104/4, Cross Rd., Athiyady.

மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை
அளவையியல்:- N.ஜெயசுரேஸ்
புவியியல்:- கிரிதரன்
தமிழ்:- சிவா
இந்து நாகரிகம்:- S.ஜெயக்குமார் முகுந்தன்
பொது ஆங்கிலம்:- தனேந்திரன்
A/L 2005 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
A/L 2006 புதிய வகுப்புக்கள் ஆரம்பம் மார்ச் 21 8.00 a.m.
- நிர்வாகி
(29814)(39)

**Kilinochchi Medical Association Inauguration Ceremony - 2004**

Date - 21.03.04 (Sunday)
Time - 10.00 a.m. Onwards
Venue - 1 - 9 Hotel - Kilinochchi
Chief Guest -
Dr.(Mrs.).J.Ganeshamoorthy
M.B.B.S. (Cey.) FRCP (Lon.)
The Head, Department of Medicine
Faculty of Medicine
University of Jaffna

Sponsored by - E.S.PERAMPALAM & CO
Kasthuriar Road, Jaffna
(C/33701)(39-11-16)

**மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது கல்வி நிலைய 2000 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்புரையாற்றி பரிசில் வழங்கிச் சிறப்பித்ததோடு, எமது கல்வி நிலைய வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவரும் யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய அதிபரும் நல்லூர் ப.நோ.கூ. சங்க T/14 கிளைக்குழு உறுப்பினரும் அறிவொளி சன சமூக நிலைய முன்னாள் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

**உயர்திரு.வாமதேவன் ஜெயரட்ணம் அவர்கள்**
(B.A. Dip. M.ED,SLPS.I)

16.02.2004 திங்கட்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரது பொதுச் சேவை மென்மேலும் சிறப்புற அகமகிழ்வோடு பாராட்டிவாழ்த்துகின்றோம்.

*யாழ். கல்வி நிலையம், மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.*
இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்
(29721)(38-11-16)



**இனவாத அரசியலுக்கு எதிரான**
**தன்மான அரசியலை நிலைநாட்ட........**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**
**க.சுரேஷ் பிரேமச்சந்திரன்**





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கருணா மீது ஜனாதிபதிக்கு கருணை பிறந்தது ஏன்?

**இது விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை தளபதி கருணாவின் திடீர் நிலைப்பாட்டால் ஏற்பட்டுள்ள, ஏற்படப்போகின்ற நிலைமைகளின் யதார்த்தமான மதிப்பீடு. சிறந்த சிந்தனையாளரும் பத்திரிகையாளருமான சுனந்த தேசப்பிரிய 'ராவய' வார இதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜனாதிபதி சந்திரிகாவின் பொறுப்பிலுள்ள அரச ஊடகங்கள் அண்மைக்காலமாக வெளியிட்டுவரும் செய்திகளை வாசிக்கும்போது வானொலிச் செய்திகளைக் கேட்கும்போது தொலைக்காட்சி ஒளிபரப்புக்களைப் பார்க்கும்போது பிரபாகரன் மற்றும் கருணா அம்மான் ஆகிய இருதரப்பினர் மத்தியில் அண்மையில் உரு



வாகியுள்ள சிக்கல் தொடர்பாக ஜனாதிபதி தரப்பினர் பக்கச்சார்பான கொள்கையைக் கடைப்பிடித்து வருவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி செயலகத்துடன் மிகநெருக்கமாக இயங்கிவரும் சில அரசியல் வாதிகளினாலேயே அரச ஊடகங்கள் யாவும் இன்று வழிநடத்தப்படுகின்றன என்பது சகலரும் அறிந்த விடயமாகும். பொதுமக்களின் தகவல்களுக்காக வெளியிடப்படக்கூடிய மற்றும் வெளியிடப்படக்கூடாத செய்திகளெனத் தெரிவுசெய்வது தொடர்பான நேரடி அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகள் யாவும் ஜனாதிபதி மாளிகையிலிருந்தே ஊடகங்களுக்கு வழங்கப்பட்டு வருவதொன்றும் இரகசியமானதல்ல.

### சிக்கல்

பிரபாகரனையும் அவரது விடுதலைப் புலிகள் அமைப்பையும் ஒரு தரப்பாகவும் கருணாவையும் அவரது படையணியையும் பிறிதொரு தரப்பாகவும் கொண்டு உருவாகியுள்ள தற்போதைய சிக்கல் தொடர்பாக ஜே.வி.பியும் போரார்வம் கொண்ட அமைப்புகளும் வெற்றிக் களிப்பில் கோஷமெழுப்பி வருகின்றன. இந்த வகையில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மேலும் ஒரு படி மேலே சென்று விடுதலைப் புலிகள் அமைப்பினுள் ஏற்பட்டுள்ள இச்சிக்கலை அரசு தனக்குச் சாதகமான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமெனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்போது ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரச ஊடகங்களின் செயற்பாடுகள்கூட மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவன போன்றே அமைந்துள்ளன. கருணாவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான பிரசாரங்களை இந்த அரச ஊடகங்கள் தாமே முன்னின்று மேற்கொண்டு வருகின்றன. பிரபாகரன் மற்றும் கருணா ஆகிய இருதரப்பினர்களுக்கும் இடையேயான சிக்கலில், கருணாவின் தரப்பை நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிடுவதன் மூலம் பிரபாகரனின் செல்வாக்கை நலிவடையச் செய்யும் அணுகுமுறையை ஜனாதிபதி கடைப்பிடிக்கிறார் என்று தோன்றுகிறது. அதுமட்டுமின்றி, தனது கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அரச ஊடகங்கள் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு விரோதமான கருத்துக்களைப் பொதுமக்கள் மத்தியில் பரப்ப ஜனாதிபதி தரப்பு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது என்றும் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் குறித்து விமர்சிப்பதற்கு எந்தவோர் அரசியற்கட்சிக்கும் உரிமை உண்டென்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், நடைமுறையிலுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் பேணப்படவேண்டுமென அவர்கள் கருதினால் - சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகப் பரஸ்பர நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டுமென அவர்கள் விரும்பினால் தற்போதைய தமது விமர்சனங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டிய பொறுப்பும் புரிந்துணர்வும், ஜனாதிபதிக்குத் தாளம்போடும், அல்லது ஒத்தூதும் விதத்தில் செயற்படும் இந்த ஊடகங்களின் தலைவர்களுக்குண்டு.

தமது அமைப்பின் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் விமர்சிக்கும், அதேவேளை தற்போதைய தமது எதிர்த்தரப்பான கருணா அம்மானுக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம் தமது அமைப்பை நலிவடையச் செய்யும் யுக்தியைக் கையாளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டு முன்னணிமீது கெரில்லா அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு நம்பிக்கை வைத்து நேர்மையாகவும், விசுவாசமாகவும் பேச்சுக்களில் ஈடுபட முன்வருமெனக் கருதமுடியாது. நீண்டகாலமாகப் போரில் ஈடுபடும் இருதரப்புக்கள் பின்னர் சமாதானப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பினால் சம்பந்தப்படும் இருதரப்பினர் மத்தியிலும் பரஸ்பர நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டியது மிக அவசியமாகும். இது இவ்வித அரசியல் ரீதியிலான அமைப்புகளுக்கு மட்டுமின்றி சாதாரண பொதுமக்களிடையேயான சிக்கல்களுக்குக்கூடப் பொருத்தமான அவசியத் தேவையாகும்.

### பரஸ்பர நம்பிக்கை

1997ஆம் ஆண்டுக் காலப்பகுதி முதல் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகளை நேரடியாகக் குற்றஞ்சாட்டும் விதத்தில் விமர்சிப்பதைத் தவிர்த்து, தமது கருத்தை மற்றவர்கள் புரிந்துகொள்ளவைக்கும் வகையில் மென்போக்கைக் கடைப்பிடித்து வந்தார். 2001 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தல் பிரசாரச் சமயத்தில்கூட பிரபாகரனை ஒரு கொலைக்காரனெனப் பகிரங்கமாகக் கூறுமாறு அனுரா பண்டாரநாயக்கா ரணிலுக்குத் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்தபோதும் எந்தவொரு பொதுமேடைகளிலும் அவ்வித கருத்தை வெளியிடாது ரணில் எச்சரிக்கையாக நடந்துகொண்டார். அத்தேர்தலில் வென்று அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் யுத்தநிறுத்த உடன்பாட்டை மேற்கொள்ளவும் அதனூடாக இரண்டாண்டுகளாக நாட்டில் யுத்தம் இடம்பெறாத நிலையை உருவாக்கவும் ரணிலுக்குச் சாதகமாக அமைந்தது. அவர் தனது மென்போக்கு மூலம் உருவாக்கிக்கொண்ட பரஸ்பர நம்பிக்கையேயாகும்.

ஆனால், இன்று ஜனாதிபதியின் அணுகுமுறை இதற்கு முற்றிலும் வேறுபட்ட வகையிலேயே அமைந்துள்ளது. அரசியல் ஆதரவு தேடும் பிரசாரம் என்ற வகையில் அண்மைய நாள்களில் அவரது தொலைக்காட்சி உரைகள் மூலம் ஐ.தே.முன்னணி அரசால் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத, பொய்யான ஒப்பந்தம் என்ற விதத்தில் அவர் கருத்து வெளியிட்டு வருகிறார். அரச படையினர் பலரின் உயிர்த் தியாகங்களின் மூலம் அரசினால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தை இந்த ஒப்பந்தத்துக்கு அமைய மீண்டும் விடுதலைப் புலிகளிடம் ரணில் கையளித்து விட்டார் என்று குற்றஞ்சாட்டி வருகிறார் ஜனாதிபதி. இவ்வித கருத்து வெளிப்பாடுகள் மூலம் தாம் நியாயமற்றது எனக் கருதும் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் விலக்கிக்கொள்ளப்பட வேண்டுமெனவும் ஒப்பந்தத்துக்கமைய விடுதலைப் புலிகள் வசம் கையளிக்கப்பட்ட பிரதேசங்கள் மீண்டும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி கருதுவதாகத் தோன்றுகிறது. இந்தவகையில், இக்கருத்து ஜே.வி.பியும் அதன தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும் வெளியிட்டுவரும் கருத்துக்களின் எதிரொலியே ஆகும்.

ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ள அரச ஊடகங்களால் அண்மைய நாள்களில் வெளியிடப்படும் பலதரப்பட்ட அரசியல் விமர்சனங்களை அவதானிக்கும்போது விடுதலைப் புலிகள் அமைப்பை எவ்விதத்திலாவது தனிமைப்படுத்தும் நோக்கத்துடனேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயற்பட்டுவருவதாக எண்ணத்தோன்றுகிறது. 1995ஆம் ஆண்டுமுதல் 2000ஆம் ஆண்டுவரை சந்திரிகாவால் முன்னெடுக்கப்பட்ட 'சமாதானத்துக்கான' யுத்தம் அரச படைகளுக்குத் தோல்வியையே வழங்கியது.


இவ்வித அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எவ்வித உரிமையும் கிடையாதென எவராலும் கூற இயலாது. ஆனால், இவ்வித நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் மூலம் போர்நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேணிவரவோ, சமாதானப் பேச்சுகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்லவோ இயலாதுபோய்விடும் என்பதை மட்டும் தெளிவாகக் கூற இயலும்.

தென்பகுதி அரசியல் நிலைமை குறித்து விடுதலைப் புலிகள் அமைப்பு மிகுந்த அக்கறை செலுத்திவருவது இரகசியமல்ல. போரார்வம் கொண்ட தென்பகுதி அரசியல்வாதிகளின் கருத்துவெளிப்பாடுகள் குறித்தும் விடுதலைப் புலிகள் அமைப்பு அக்கறையுடன் அவதானித்து வருகின்றது. சமாதான நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கும் மத்தியஸ்த தரப்புகளின் கருத்துப்படி, இந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டு முன்னணியின் போர் ஆர்வம் கொண்ட தேர்தல் அணுகுமுறை குறித்து விடுதலைப் புலிகள் அமைப்பு மிக நுணுக்கமாக அவதானித்து வருவதாகத் தெரிகிறது.

### சமாதான முயற்சி தொடர...

இக்கூட்டு முன்னணியினூடாக எதிர்வரும் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றச் சந்தர்ப்பம் கிட்டுமானால், ஜனாதிபதி உண்மையில் இப்போர் நிறுத்த உடன்பாட்டினூடாகச் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல விரும்புவாரானால் இப்போர் ஆர்வம் வெளிப்படுத்தும் வகையிலான தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள அரச ஊடகங்களால் வெளிப்படுத்தப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பை நலிவடையச் செய்யும் வகையிலான பிரசார உத்திகளையும் நிறுத்திவிடவேண்டியது அவசியமாகும்.

அவ்விதமன்றி, தற்போதைய தமது நிலைப்பாடு இதேவிதத்தில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு ஜனாதிபதி இடமளிப்பாரானால் அவரது கூட்டு முன்னணி எதிர்காலத்தில் சமாதானத்தை எட்டுவதற்காகவன்றி யுத்தமொன்றை எதிர்கொள்வதற்கே தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டி ஏற்படும்.



### கருணாவின் முடிவு

மற்றொரு வகையில் கருணா அம்மான் தொடர்பான சமீபத்திய சிக்கல ஒரு குறுகிய காலச் சிக்கலே என்றும்-

மட்டக்களப்புப் பிரதேசவாதம் தொடர்பான அவரது நிலைப்பாட்டைத் தோற்கடித்து போர்வலு மிக்க தமிழ்த் தேசிய வாதத்தை நிலைநிறுத்துவது காலம் தொடர்பான பிரச்சினை மட்டுமே என்றும் -

புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

கருணா அம்மானால் கிளப்பப்பட்டுள்ள பிரச்சினை அவரால் தனியான போர்வலுக்கொண்ட அரசியல் அமைப்பொன்றை உருவாக்கிக் கட்டிக்காக்கக்கூடிய அளவு வலுவானது அல்ல. ஆதலால், ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பை எதிர்த்துப் போரிடுத் தோல்வியடைய நேர்வது அன்றேல் சிங்கள அரசுடன் சேர்ந்து இயங்க முயல்வதன் மூலம் முன்னைய ஒரு சில விடுதலை இயக்க உறுப்பினர்களின் வழியைத் தெரிவுசெய்வது ஆகிய இவ்விரு வழிகளில் ஒன்றைத தெரிவுசெய்வது மட்டுமே தற்போது கருணா அம்மான் முன்னுள்ள தெரிவுகளாகும். அவ்வாறில்லாதுவிடில் பிரபாகரன் தரப்பால் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் நாட்டைவிட்டு வெளியேறிவிடும் முடிவும் கருணாவின்முன் தெரிவுக்காகக் காத்துள்ளது.

கருணாவினால் உருவாக்கப்பட்டுள்ள சிக்கலால் விடுதலைப் புலிகள் அமைப்பு நலிவடையக் கூடுமெனக் கருதினாலும் அது அந்த அமைப்புக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அளவில் செயற்பட கருணாவுக்கு ஆதரவளிக்கும் படையணி போதிய பலம் கொண்டிருக்கவில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகச் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தம்மிடையே மோதிக்கொள்ளும் நிலையொன்று உருவாகாமல் தவிர்க்க முயலும் வகையில் தூரநோக்குக் கொண்ட அரசியல் செயற்பாடாக அமையவேண்டியது தன்னிச்சையான அவசர முடிவுகளை மேற்கொள்வதைத் தவிர்த்தலாகும். முன்னரைப் போன்ற போரார்வம்மிக்க சூழ்நிலை தற்போதும் நிலவியிருந்தால் இவ்விதம் விடுதலைப் புலிகள் அமைப்புக்குள்ளேயே சிக்கல் தோன்றுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்க மாட்டாது. மற்றொருபுறம் சிந்திப்போமானால் இச்சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்கான வழி மீண்டும் போரார்வம் மிக்க நிலைமையொன்றை உருவாககிக்கொள்வதாகும்.

ஏனெனில், அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையே மீண்டும் யுத்தமொன்று உருவாகும் சூழ்நிலை ஏற்படுமானால் கருணா அம்மானும் அவருக்கு ஆதரவளிக்கும் படையணியும் பல தரப்புகளாலும் பலவித நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். இதற்கு மாறாகக் கருணா அம்மான் அரசுடன் இணைந்து செயற்படமுயன்றால் தாமாகவே தம்மைத் 'துரோகி' என்ற நிலைக்கு ஆளாக்கிக கொள்ள நேரிடும். அவ்வித சந்தர்ப்பம் ஏற்படுமானால் தற்போது கருணாவுக்கு ஆதரவுதெரிவிக்கும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த போராளிகளும், பொதுமக்களும், தமிழ் இனப்பாதுகாவலர்கள் எனக் கருதப்படும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் மீண்டும் ஒன்றிணைந்து கொள்ளவேண்டிநேரிடும்.

### வியெஸ்ரி

பிறிதொரு கோணத்தில் சிந்தித்தால் அரச படைகளை எதிர்த்துப் போரிடும் அளவுக்குத் தனியானதோர் அமைப்பாக நின்று இயங்கத்தக்க அளவு பலம் கருணாவுக்கு ஆதரவளிக்கும் படையணியிடம் கிடையாது. அவ்விதம் கருணாவின் தரப்பு தனித்துநின்று அரச படைகளுடன் போரிடும் நிலை உருவாகுமானால் நிச்சயம் கருணா தரப்பு தோல்வியைச் சந்திக்க நேரிடும். அதுமட்டுமன்றி, தற்போதைய நிலையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்களைக் கவர்ந்து தனியான தமிழ்ப் போராளிகள் அமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாக அவர்களால் சிந்தித்துக்கூடப் பார்க்க இயலாது.

இந்துநிலையில், சூழ்நிலைகளின் அடிப்படையில் மீண்டும் யுத்தமொன்றில் இறங்குவது விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சாதகமாக அமையும். ஆனால், அவர்களுக்கு அவ்வித மனவெழுச்சி ஏற்பட இடமளிக்காத வகையில் தூரநோக்குடனும், கட்டுப்பாட்டுடனும் நடக்கமுற்படுவது அரசியல்வாதிகளின். பொறுப்பாகும். ★

# தேர்தலுக்கு முன் 5 பிரமுகர்களை கொல்லத் திட்டமிட்டனராம்

## பாதாள உலக நபர்கள் மூவர் கைது!

கொழும்பு,மார்ச்19

பொதுத் தேர்தலுக்கு முன்னதான 5 பிரமுகர்களைச் சுட்டுக்கொல்வதற்குத் திட்டமிட்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 5 நபர்களை கொழும்பு விசேட அதிரடிப்படையினர் மடக்கிப்பிடித்துள்ளனர்.

பாதாள உலக நபர்கள் என்று வர்ணிக்கப்படும் இவர்கள் அரசியல்வாதிகள் பலருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்கள் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

கிராண்டபாஸ், அங்கொட பகுதிகளிலிருந்து கைதுசெய்யப்பட்ட இந் நபர்களிடம் ரி56 ரக துப்பாக்கிக்குரிய மூன்று மகஸின்களும், 87 தோட்டாக்களும், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 9 எம்.எம். சுழல் துப்பாக்கியொன்றும், இவர்களால் ஏற்கனவே 5 கொலைகளுக்கும் கொலை முயற்சிகளுக்கும் பயன்படுத்தப்பட்டன என்று கருதப்படும் 0.38 ரக சுழல் துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இருபத்தொன்றுக்கும் இருபத்திரண்டுக்கும் இடைப்பட்ட வயதினரான இவர்கள் 'சண்டி', 'சமின்தா', 'சுட்டா', 'அறக்கு பிரியன்தா', 'தமிழ்நாடு மொடி குமார' என்று அழைக்கப்படுபவர்கள் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

இவர்களில் ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவரென்று பொலீஸார் கூறுகின்றார்கள். இவர்களின் தலைவன் என்று கூறப்படும் 'பிரின்ஸ் கொலம்' என்பவர் ஏற்கனவே கொலைகள், கொள்ளைகளுக்காக சிறைத்தண்டனை அனுபவித்துவருகிறார்கள். (ம)

# புதிய ஜனநாயகக் கட்சி தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவளிக்காது

## அதன் பொதுச்செயலர் செந்திவேல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்19

தமிழ்த் தேசியத்தை முன்வைத்திருக்கிறார்கள் என்பதற்காக தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவு செலுத்தும் நிலையில் எமது கட்சி இல்லை.

- இவ்வாறு புதிய ஜனநாயகக கட்சி பொதுச் செயலாளர் செந்திவேல் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் தேர்தலில் பங்குகொள்வதில்லை என்ற முடிவினை எடுத்த பின்னர் எமது முடிவுதொடர்பாக நாடு முழுவதும் எமது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் விளக்கிவருகிறோம்.

நாங்கள் கூட்டங்களை நடத்தும் இடங்களில் எல்லாம் எமது மக்கள் எதிர்வரும் தேர்தல் ஒரு தேவையற்ற தேர்தல் என்ற தமது முடிவினைத் தெரிவிப்பதைக் காண்கின்றோம். இத்துடன் தேர்தல் தொடர்பாக மக்கள் அக்கறை கொண்டிருக்காத நிலையினை நாம் அவதானித்தோம். எமது கட்சியினைப் பொறுத்தவரை நாங்கள் மக்களுடைய பிரச்சினையைத்தான் பேசுவோம்.

நாங்கள் மக்களை அறிவூட்டும் வகையில் செயற்படவேண்டும். அரசியல் ரீதியாகவும் இச்செயற்பாடு அமையவேண்டும் மக்களுக்கான அரசியல் இந்த நாட்டில் வளர்ச்சிபெற வேண்டும் என்பதுதான் எமது கட்சியின் நிலைப்பாடு.

கடந்த இரு தேர்தல்களில் நாங்கள் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டோம். அப்போது யாழ்ப்பாணத்தில் ஜனநாயகம் இல்லை; அச்சுறுத்தல் சூழல இருந்தது. அரசியல் பேசவே பயந்த சூழலில் எமது கட்சி தேர்தலில் பங்குகொண்டு மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டியுள்ளோம்.

இம்முறை தேர்தலில் பங்குகொண்டுவிடுவது என்ற எமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக மக்களுக்கு விளக்கிவருகிறோம்.

நாங்கள் ஓர் அரசியல்கட்சி. கடந்தகாலத்தில் பல போராட்டங்களில் சுயநிர்ணய உரிமைக்கான கொள்கைகளை முன்னிலைப்படுத்தி வந்திருக்கிறோம்.

அந்நிய சக்திகள் எமது மண்ணில தலையிடும் காரணத்தால் விடுதலைப் போராட்டம் தடைப்படும், திசைதிருப்பப்படும் என்ற ஆபத்துக்களை மக்களுக்கு வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

இப்போது தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் முன்னர் எமது கட்சிபோனறு செயற்படவில்லை. முன்னர் தமிழ்க் கட்சிகள் விட்டதவறுகள், தமிழ்மக்கள் மத்தியில் பிளவுகள் தோன்ற வழிகோலியுள்ளன. உட்கட்டமைப்பின நிலைப்பாடு தொடர்பாக எமக்குப் பூரணதிருப்தி இல்லை. தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை - விடுதலைப் போராட்டத்தை -வலுப்படுத்தவேண்டுமாகவிருந்தால் அவர்கள் ஒரு பொது வேலைத்திட்டத்தை வைத்திருக்கவேண்டும். இன்று கூட்டமைப்பிடம் அவ்வாறான பொது வேலைத் திட்டம் இல்லை.

தமிழ்மக்களின் நலன் என்றால் அது ஒரு சிலரின் நலன் அல்ல. தமிழ் மக்கள் மேல்மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை பல பிரிவுகளாக உள்ளார்கள். இன்று கூட சாப்பிட வழியில்லாத மக்கள் பலர் உள்ளனர். அதேவேளை, பணம்மிஞ்சி அதனைத் தேவையில்லாத தேவைகளுக்குப் பயன்படுத்தும் மக்களும் உள்ளனர்.

முழுத் தமிழ்மக்களையும் அணிதிரட்டி பொதுவேலைத் திட்டத்துக்குள் உள்வாங்கி அமெரிக்காவின், இந்தியாவின் தலையீடுகளையும் பல்தேசியக் கம்பனிகளின் வரவுகளையும் தனியார்மயமாக்கலையும் எதிர்த்திருந்தால் கூட்டமைப்புக்கு எமது கட்சியின் ஆதரவினை வழங்கியிருப்போம்.

அத்துடன், கூட்டமைப்பில் இருக்கின்ற பல கட்சிகளை கடந்தகாலங்களில் நாங்கள் எதிர்த்துவந்துள்ளோம்.

பழைமைவாதக் கட்சிகள், தமிழ் மக்களை ஏமாற்றிய கட்சிகள், மக்கள் போராட்டம் என்று இரத்தக்களரிக்கு உட்படுத்திய கட்சிகள், இந்தியாவை ஆதரித்த கட்சிகள், எங்களைக் கூட அச்சுறுத்திய கட்சிகள் இவையெல்லாவற்றையும் மறந்துவிட்டு நாங்கள் தமிழ்க்கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்க முடியாது.

தமிழ்த்தேசியம் என்பதற்காகத் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவு செலுத்தும் நிலையில் எமது கட்சி இல்லை. அத்துடன் நாங்கள் இடதுசாரிகள் வடபிரதேசத்தில் பல உயிர்களை எமது தோழர்கள் அர்ப்பணிப்புச் செய்துள்ளார்கள்.

பேரினவாதத்திற்கு எதிராக ஒரு போராட்டம் இடம்பெறும்போது நாங்கள் எதிராக நின்றவர்கள் இல்லை எனவும் தெரிவித்தார். (ம-ரி)

### பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரியில்

# சிகிச்சை பெறவரும் நோயாளர் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,மார்ச்19

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

இங்கு ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் பொது மருத்துவ கிளினிக் நடைபெறுவதுடன், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கிளினிக், குழந்தைகளுக்கான கிளினிக் என்பனவும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் சுகவனிதையர் கிளினிக்கும் நடைபெற்று வருகின்றது.

வைத்தியசாலைக்கு முன்பக்க கேற் ஒன்றை நிறுவுவதற்கும், முட்கம்பி வேலி அமைப்பதற்கும் யாழ்.சுகாதார திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் -

இம்மாதத்தில் இவை செயற்படுத்தப்படவுள்ளன என்றும் - வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

இவ்வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள ஆண், பெண் வார்ட்டுக்கள் மற்றும் பிரசவ விடுதி, பிரசவ வார்ட் என்பனவற்றை விரைவில் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - கூறப்பட்டது.

இதேசமயம் -

கடந்த போர்க்கால அனர்த்தங்களின்போது முற்றாகச் சேதமடைந்த குடும்ப சுகாதார சேவை அலுவலருக்கான வசிப்பிடம் மற்றும் சிற்றூழியருக்கான வசிப்பிடம் என்பவற்றை இங்கு புதிதாக நிறுவவேண்டியுள்ளது.

பிரசவ விடுதி இயங்கும் போது குடும்ப சுகாதார சேவை அலுவலர் (மருத்துவ மாது) ஒருவர் இங்கு தங்கி இருக்கவேண்டியது அவசியம் என்றும் -

இதற்கு வசதியாக வைத்தியசாலை வளவில் வசிப்பிடம் ஒன்று முற்றாகச் சேதமடைந்த வசிப்பிட கட்டடத்திற்குப் பதிலாக நிறுவப்படவேண்டும் என்றும் - கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## தடகள விளையாட்டு விழா

வலி.மேற்கு,மார்ச்19

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வருடாந்த தடகள விளையாட்டுவிழா நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் மோகன்றாஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி க.றொஹான் ராஜசிங்கம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வி.நோயல் விமலேந்திரன், சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம் பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர். (ம-5-175)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

வரணி,மார்ச்19

கைதடி, நவபுரம் கிராம அபிவிருத்தச் சங்கத்தின் அனுசரணையுடன், எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2மணியளவில் நீர்வேலி சவாரித்திடலில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெற உள்ளது.

நவபுரம் கிராம அவிபிருத்திச் சங்கத் தலைவர் ச.தங்கராசா அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு வடமாகாண மட்டத்தில் நடைபெற உள்ளதுடன் போட்டி மூன்று பிரிவுகளைக் கொண்டதாக அமையும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-170)



அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசஅதிபர் ப.திலகநாயகம் போல், மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற யுவதி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-10)

## திருப்பலி

கொழும்புத்துறை,மார்ச்19

யாழ்.பிரதான வீதி கத்தோலிக்க அச்சகக் கட்டடத்தில் உள்ள புனித சூசையப்பர் ஆலய திருவிழாத் திருப்பலி இன்று காலை 9மணிக்கு இடம்பெறும்.

இவ்விடத்தில் இருந்த பழமை வாய்ந்த சூசையப்பர் ஆலயம் புதிய கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டு கொண்டாடப்படும் முதலாவது திருவிழா இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை,மார்ச்19

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா இன்று காலை 7மணிக்கு கூட்டுத்திருப்பலியுடன் இடம்பெறும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் நடைபெறும். (ம-30)

# கிளிநொச்சி மருத்துவர் சங்க அங்குரார்ப்பணம் ஞாயிறன்று

கிளிநொச்சி,மார்ச்19

கிளிநொச்சி மருத்துவர் சங்கம் ஒன்று, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட இருக்கின்றது.

கிளிநொச்சியில் உள்ள 1- 9 ஹோட்டலில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வைத்தியபீடத்தின் மருத்துவப்பிரிவுத் தலைவரான வைத்திய கலாநிதி (திருமதி) ஜே.கணேசமூர்த்தி கலந்துகொள்வார்.

நிகழ்வில் யாழ். வைத்தியசாலை நிபுணர்களும், மருத்துவபீட அதிகாரிகளும் கலந்துகொள்வர். (ம-3)

# ஆறாம்தர மாணவர்களுக்கான பல்பாடநூல் வந்துசேரவில்லை

## கற்பித்தல் செயற்பாடுகளில் சிரமம்

வலி.தெற்கு,மார்ச்19

புதிய பாடத்திட்டத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட ஆறாம் ஆண்டுக்கான தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுக்கான பல்பாட நூல்கள் இதுவரை யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படாமையால், மேற்படி வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்துக்கான முதலாம் தவணை முடிவடைவதற்கு சொற்ப தினங்களே உள்ள நிலையில் உரிய பாடநூல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் ஆசிரியர்களும், மாணவர்களும் திட்டமிட்ட முறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாதிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கணிதம், தமிழ் ஆகிய பல்பாட நூல்களில் தத்தம் பாடசாலை மாணவர்களுக்குப் பயன்படுத்த தீர்மானித்துள்ள நூல்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான நூல்களின் எண்ணிக்கை என்பவற்றை உரியகாலங்களில் பாடசாலை அதிபர்கள் தத்தம் கோட்டக்கல்வி அலுவலகங்களூடாக அனுப்பிவைத்திருந்த போதிலும், முதலாம் தவணை முடிவடைய உள்ள காலத்திலும் கூட புத்தகங்கள் கிடைக்கப்பெறவில்லை எனக் கூறப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச பாடநூல்கள் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டபோதிலும், ஐந்தாம் ஆண்டுக்கான தமிழ் மொழிப் பாட நூலும் இதுவரை விநியோகிக்கப்படவில்லை.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பாட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமிழ்மொழி பாடநூல் இதுவரை வழங்கப்படாமையால் பாதிப்படைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-152)

## விவசாய உள்ளீடுகள் வழங்கல்

தென்மராட்சி,மார்ச்19

பட்டினிக்கு எதிரான இயக்கத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இரண்டாம் கட்ட விவசாய உள்ளீடுகளை அந்தந்தக் கிராம அலுவலர் பணிமனைகளில் வைத்து வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் 22ஆம் திகதி கொடிகாமம் வடக்கு (ஜே/326) பிரிவிலும், 23ஆம் திகதி மிருசுவில் வடக்கு (ஜே/335) பிரிவிலும், 25ஆம் திகதி தாவளை, இயற்றாளைப் பிரிவிலும் காலை 10 மணிக்கு உள் உணவு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள தமது பங்கீட்டு அட்டையுடன் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

# துரை விஸ்வநாதன் நினைவு கவிதை, பேச்சுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்19

கம்பன் விழாவை ஒட்டி கொழும்பு கம்பன் கழகம் பேச்சு, கவிதைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இதுதொடர்பாகக் கம்பன் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்பு கம்பன்கழகம் ஆண்டுதோறும் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு தலைநகரில் பெருவிழா எடுத்துவருகிறது. இவ்வாண்டுக் கம்பன் விழா எதிர்வரும் மே மாதம் 20,21,22,23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. வழமைபோலவே இவ்வாண்டும் இவ்விழாவினை ஒட்டி அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்தப் பேச்சு, கவிதைப் போட்டிகளைக் கொழும்பு கம்பன் கழகம் நடத்தவுள்ளது.

உடன் வழங்கப்படும் தலைப்பில் பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளலாம். 25 வயதுக்கு உட்பட்ட எவரும் (சென்ற விழாக்களில் தங்கப்பதக்கப் பரிசில்களை பெற்றோர் தவிர்ந்த) இப்போட்டிகளில் கலந்துகொள்ளமுடியும். போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் முழு வெள்ளைத்தாளில் பெயர், பால், கலந்துகொள்ளும் போட்டி, பிறந்த திகதி, முகவரி, மாவட்டம், கல்விகற்கும, கற்ற பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் ஆகிய விவரங்களை எழுதி கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது கிராம சேவகர் ஆகியோரிடம் தம் தகைமைகளை உறுத்தப்படுத்தி, கடித உறையின் மேல் கலந்துகொள்ளும் போட்டியின் பெயரை குறித்து, ச.ஆ.பாலேந்திரன, கொழும்புக் கம்பன் கழகம், 11, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு - 06 எனும் முகவரிக்கு 10.04.2004 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

இப்போட்டிகளில் இனங்காணப்படும் விசேட திறமையுள்ள இளைஞர்களுக்குக் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும். ஒவ்வொரு போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் நடைபெற இருக்கும் கம்பன் விழா மேடையில் அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பிக்கும் போட்டியாளர்களுக்கு போட்டி பற்றிய முழு விவரங்களும் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைக்கப்படும். மேலதிக விவரங்கள் வேண்டுவோர் 2360525 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### தவக்காலத் தியானம்

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தின் ஏற்பாட்டில் இன்றுமுதல் 3 தினங்கள் யாழ். அகவொளி நிலையத்தில் தவக்காலத் தியானம் இடம்பெறவுள்ளது.

பங்கு மறையாசிரியர்களுக்கான இத்தியானத்தில் 'மனம்மாறி பணி புரிவோம்' என்ற கருத்தில் அருட்தந்தை அந்தோனிமுத்து (அ.ம.தி.) தியானம் நிகழ்த்துவார். (ம-ரி)

# ஊடகப் பயிற்சி நெறி

கொழும்புத்துறை,மார்ச்19

யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவும் 'பாதுகாவலன்' பத்திரிகையும் இணைந்து நடத்தும் ஊடகத்துறைப் பயிற்சி நெறி யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நாளையும் நாளைமறுதினமும் இருதினங்கள் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை பயிற்சி வகுப்புகள் இடம்பெறும். துறைசார்ந்த நிபுணர்கள் பங்குபற்றிக் கருத்துரைகள் வழங்குவர்.

பயிற்சி முடிவில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் சான்றிதழ்கள் வழங்கப்படும். பங்குகொள்ள விரும்புவோர் யாழ். பிரதான வீதியில் உள்ள 'பாதுகாவலன்' பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இயக்குநர் அருள்திரு.ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் கேட்டுள்ளார். (ம-30)


நெஞ்சம் நெக்குருகும் நினைவுகளுடன்

**31 ஆம் நாள் அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 09 - 07 - 1941



மறைவு 18 - 02 - 2004

**அமரர் இராமசாமி பரராசசிங்கம்**

(உரிமையாளர், சிங்கம் புடைவையகம்,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்)

தஞ்சம் தந்து நின்று
தயவு பல கொண்டு
கிஞ்சிற்றும் ஓய்வறியா
கடமை நிறை ஐயாவே!
சஞ்சலம் அடைகின்றோம்
சோர்வுற்றுக் கதறுகின்றோம்
அஞ்சாத சிங்கமான
எங்கள் அன்பு ஐயாவே!
அஞ்சலித்தோம் உங்களுக்காய்
ஆண்டவன் திருவடியை!

அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*170, அரசடி வீதி, கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(29776)(34-19-18-24)


### செயலமர்வுகள்

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளின் விஞ்ஞானத் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு நாளை சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

9 ஆம், 10 ஆம், 11 ஆம் வகுப்புகளில் கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-152)

★ ★ ★

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் மூன்றின் சமூகக் கல்வி ஆசிரியர்களுக்கு இன்றும் நாளையும் நடைபெறவிருந்த கண்ணிவெடி தொடர்பான செயலமர்வுகள் எதிர்வரும் 21ஆம், 22 ஆம் ஆகிய திகதிகளில் நடைபெறுமென அறிவிககப்பட்டுள்ளது.

மார்ச் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை வரணி ஆசிரிய நிலையத்திலும் இந்தச் செயலமர்வு நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

★ ★ ★

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரிய நூலகர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளன.

செயலமர்வில் அனைத்து நூலக ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்விவலய நூலக இணைப்பாளர் கேட்டுள்ளார். (ம-ரி)

### சங்கானைப் பகுதி பிரதான வீதிகளில்

# போக்குவரத்துக்கு இடையூறான விளம்பரப்பலகைகள் அகற்றப்படுகின்றன

வலி.மேற்கு,மார்ச்19

சங்கானைப் பகுதியில் பிரதான வீதிகளில் சட்டவிரோதமான முறையில் நிறுவப்பட்டிருந்த வியாபார நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மையில் வலி. மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன், இது தொடர்பான செய்தி 'உதயனிலும்' பிரசுரமாகியிருந்தது.

இதற்கிடையில் சங்கானை நகரை அண்மித்த இடங்களில் - பிரதான வீதிகளில் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டிற்கும், பாதசாரிகள் பாதையைக் கடப்பதற்கும் வசதியாக வீதியில் மஞ்சள் நிறத்தில் அடையாளங்கள் இடப்படுகின்றன. (எ-175)

## தவக்காலச் சிந்தனை

### அன்புவழி மனமாற்றம்

உன்மீது அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மேல் அன்பு கூர்வாயாக *(மாற். 12:31)*

**இருபத்திநான்காம் நாள்**

இன்றைய உலகம் தான்வாழ மற்ற எல்லோரையும் பயன்படுத்தும் உலகம். தன் சுயநலத்திற்காக எத்தனை ஆயிரம் உயிர்களையும் பலிகொடுக்கத் தயங்காத சுயநலமிகள் வாழும் உலகம். அன்பு என்றால் அது எந்தக் கடையில் கிடைக்கும் என ஏளனம் செய்யும் உலகம். தொண்டனைத் தீக்குளிக்கவிட்டு வேடிக்கை பார்த்து வேதனையை முதலீடாக்கி இலாபம் சம்பாதிக்கும் இலட்சியத் தலைவர்கள் வாழும் உலகம். இங்குதான் நாம் பிறரன்பில் இறையன்பைக்காண அழைக்கப்படுகிறோம். பாவியின் மனமாற்றத்தைவிடப் பெரிய அதிசயம் வேறில்லை என்பார் புனித பேசில். இந்நிலையில் முதலில் நீ உன்னை நேசிக்கின்றாயா?

*- செ.பிறின்ஸ்லி.*


**கண்ணீர் அஞ்சலி**



இலங்கை மின்சார சபை மின்பாவனையாளர்
சேவை நிலைய நகரப் பணிமனையில்
மின்மானி வாசிப்பாளராகக் கடமையாற்றிய

**கந்தையா தனபாலசிங்கம்**

அவர்கள் 16.03.2004 அன்று காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருடன் நாமும் சேர்ந்து துயர்பகிர்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி **அமரர் தனபாலசிங்கத்தின்** ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை மின்சாரசபை, வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.**

(29779)(34-19-18-24)



**யா அல்லாஹ்**

மீன் வளையெல்லாம்
இத்துப்போட்டது

அன்று



மீன்பாடும் தேன் நாட்டை சேர்ந்த நாம கடந்த கால யுத்தம் காரணமா மீன்பிடி தொழிலையே கைவிட்டோம். கடலுக்கு போய் சுதந்திரமா மீன் பிடிக்க முடியாம போனது தான் அதற்கு காரணம். மூன்று வேள சாப்பாடு போட்ட அந்த தொழில் கைவிட்டுபோனதால பட்டினியால வாடினோம்.

இன்று



ஆனா, ரெண்டு வருஷமா யுத்தம் இல்லாம சமாதானம் இருக்கிறதால திரும்பவும் பழையபடி மீன்பிடிக்க முடியுது. எந்த தடையும் இல்லாம சுதந்திரமா மீன்பிடிக்க கூடிய நிலை வந்திருக்கு. இந்த நிலை எந்த நாளும் இருக்கோனும்ன்றது தான் எம்மோட எதிர்பார்ப்பு. அந்த எதிர்ப்பார்ப்பு நிலைக்கனும்னா அதற்காக போராடும் ஐதேகட்சிக்கு ஆதரவு தெரிவிக்கனும். உறுதியோடு செயலாற்றும் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்களுக்கு ஆசிர்வாதம் அளிக்கனும்.



நாட்டை வளமாக்க
சமாதானத்தைத் தொடருங்கள்.

(சி-33698)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970இல் பிறந்த, அவிட்ட நட்சத்திரம லண்டனில் தொழில் உரிமைபெற்ற மணமகனுக்கு கனடா, ஐரோப்பிய நாடுகளில் PR உடைய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: திரு.மு.கோகுலன் T.P. 077 6155839, 077 6309939. (29699)

### தவறிவிட்டது

கைதடி வடக்கைச் சேர்ந்த மாதன மகேஸ்வரன் என்பவருடைய தே.அ.அ.(இல.601751950V), வி.அ.அ (இல. 091000250) என்பன கைதடிக்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் துஷா பல்மூக்குக் கண்ணாடி அகம், 544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P 021 222 3461, தகுந்த சன்மானம் வழங்கப்படும். (29791)

## மணற்காட்டில் அனுமதியின்றி சவுக்குமரம் அழிப்பு

மணற்காடு, குடத்தனைப் பகுதியில் சவுக்குமரங்கள் இரவோடு இரவாக விறகுக்காகத் தறிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இரவோடு இரவாகத் தறிக்கப்படும் மரங்கள் துண்டுதுண்டாககப்பட்டு அதிகாலை வேளைகளில் கடத்தப்படுவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-170)

### வேலை ஆள் தேவை

அச்சக வேலைகளில் நல்ல அனுபவமுள்ள ஆண் ஊழியர் தேவை.

**தாரணி பதிப்பகம்**
இல.319,K.K.S.வீதி
(மனோகரா தியேட்டர் அருகில்),
யாழ்ப்பாணம்.
(C/33700)

### தேவை

*சட்டத்தரணியின் அலுவலகத்தில் வேலை செய்வதற்கு பெண் ஆங்கிலத் தட்டெழுத்தாளர்/ எழுதுவினைஞர் தேவை. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

தொடர்பு
**திரு.V.நடராசா (சட்டத்தரணி)**
இல. 3, நவீனசந்தை
(மேல்மாடி), யாழ்ப்பாணம்.
(29796)

## கொட்டடியில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்19

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் கணனிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோரை நாளை சனிக்கிழமை முற்பகல் 11மணி முதல் கொட்டடி சனசமூக நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## கணித, விஞ்ஞானப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, மார்ச்19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான வினாடிவினாப் போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

தரம் ஆறு தொடக்கம் பதினொன்று வரையான வகுப்பு மாணவர்களுக் கிடையில் ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனியாகப் போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

இதற்கமைய பாடசாலை மட்டத்திலான வினாடிவினாப் போட்டிகளை ஜூன் மாதம் 10ஆம் திகதிக்கு முன்பாக நடத்தி முடிக்குமாறும் -

வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்களை ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும் - வலிகாமம் வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-152)

## கலாசாரப் பேரவைப் பொதுக்கூட்டம்

வலி.மேற்கு,மார்ச்19

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர் வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள சகல கலைஞர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

வருடாந்தம் நடத்தப்படும் இசை விழாவினை இவ்வருடம் நடத்துதல், கலாசாரத்தைப் பேணுவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள், கலைஞர்களின் கலைத்திறனை வளர்ப்பது போன்ற பல விடயங்கள் இதில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-175)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# கேள்விப்பத்திர அறிவித்தல்
# சீருடைத் துணி வழங்கல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சீருடைத் துணி வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.**

| | |
|---|---|
| வெள்ளைப் பொப்லின் (White Poplin)/ வெள்ளைப் பொலியஸ்டர் சூட்டிங் (White Poliyester Suiting) 36" | 1187.1 மீற்றர் |
| நீல பொப்லின் (Bule Poplin)/ நீல பொலியஸ்டர் சூட்டிங் (Bule Polilyester Suiting) 36" | 21.6 மீற்றர் |
| வெள்ளை றில் (White Drill)/ வெள்ளைப் பொலியஸ்டர் சூட்டிங் (White Polilyester Suiting) 28" | 1548.90 மீற்றர் |
| காக்கி றில் (Karki Drill)/ காக்கி பொலியஸ்டர் சூட்டிங் (Karki Poliyester Suiting) 28" | 778.95 மீற்றர் |
| சாம்பல் நிற றில் (Grey Drill)/ சாம்பல் நிற பொலியஸ்டர் சூட்டிங் (Grey Poliyester Suiting) 28" (55x16.38m) | 900.9 மீற்றர் |
| நீல றில் (Blue Drill)/ நீல பொலியஸ்டர் சூட்டிங் (Blue Poliyester Suiting) 28" | 36.46 மீற்றர் |
| வெள்ளை பொலியஸ்டர் சேட்டிங் (White Polilyester Shirting) | 14.85 மீற்றர் |
| வெள்ளை நூல் சேலை/வெள்ளை பொலியஸ்டர் சேலை | 03 |
| நீல நூல் சேலை/நீல பொலியஸ்டர் சேலை | 09 |
| பாதணி (Safety Shoe with rubber sole) | 48 சோடி |
| பாதணி (Strong genuine leather center lacing shoe) | 55 சோடி |
| காலுறை (Cotton/Nylon - Black/Brown) | 110 சோடி |

*மேற்படி துணிகளைப் பின்வரும் அளவுகளில் ஒரே துண்டாகப் பொதிசெய்து தருவதற்குமான கூறுவிலைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.*

| காக்கி துணி | வெள்ளை சேட் துணி | வெள்ளை காற்சட்டைத் துணி |
|---|---|---|
| 12.15 மீற்றர் அளவில் 59 துண்டுகள் | 2.7 மீற்றர் அளவில் 03 துண்டு கள் | 5.4 மீற்றர் அளவில் 112 துண்டுகள் |
| 13.5 மீற்றர் அளவில் 01 துண்டு | 5.85 மீற்றர் அளவில் 01 துண்டு | 9.0 மீற்றர் அளவில் 52 துண்டுகள் |
| 16.2 மீற்றர் அளவில் 03 துண்டுகள் | 6.3 மீற்றர் அளவில் 01 துண்டு | 9.9 மீற்றர் அளவில் 47 துண்டுகள் |
| | 6.75 மீற்றர் அளவில் 145 துண்டுகள் | 10.8 மீற்றர் அளவில் 01 துண்டு |
| | 9.00 மீற்றர் அளவில் 01 துண்டு | |
| | 10.35 மீற்றர் அளவில் 13 துண்டுகள் | |
| | 14.85 மீற்றர் அளவில் 03 துண்டுகள் | |

*கேள்விப் பத்திரதாரர் தங்கள் கூறுவிலையுள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5000.00உம் காசுக்கட்டளையாக அல்லது காசாக நிதிக்கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சீர் உடையின் 6"x6" அளவுடைய மாதிரியுடன் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலிஎன்ற முகவரியிட்டு 31.03.2004 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பாக பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் " சீர் உடைகள் வழங்கலுக்கான கேள்விப் பத்திரம்" UJ/F/SK/T// 04/03 எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் சமுகம் தரலாம்.*

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C/33704)(34-21-12-14)

## United Nations Development Programme

UNDP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UNDPs Transition Programme in Sri Lanka is focused on supporting the transition from conflict to development .The Transition Programme provides four areas of expertise as follows: Economic recovery through microfinance activities, Capacity building and training, Post conflict planning, and Peace & reconciliation activities. UNDP transition Programme, Jaffna field office has the following vacancies.

### POST OF PROGRAMME ASSISTANTS

**Duties & Responsibilities**

- Monitoring projects/programme activities by reviewing a variety of records, including control plans, progress reports, project inputs, budgets and financial expenditures.
- Maintains, processes and analyses information on subject matters relevant to the project.
- Contributes to the preparation of status and progress reports by providing information, preparing tables and drafting selected sections of it, prepares background material for use in discussions & briefing sessions. Responsible for presenting the summary of monitoring in monthly report formats.
- Assists in the identification and formulation of development cooperation projects and participates in the preparation of draft project documents.

**Qualification & experience**

- University degree in relevant field ( Economics, Management, Social science & Agriculture)
- Excellent command of English (Writing, Speaking, & Reading)
- Excellent people skills and a good team player capable of building and maintaining relations with local organizations, NGOs, Government officials, Diplomats and Humanitarian workers.
- Thorough substantive knowledge of the working area and issues relating to conflict affected areas in Srilanka.
- Computer skills in word processing, spreadsheets with data base experience.
- Previous experience with UN or INGOs an asset.

### POST OF DRIVER

**Duties & Responsibilities**

- Drive all UNDP vehicles (4WD Vehicles) safely & responsibly
- Drive UNDP staff/visiting missions to meetings/field visits
- Ensure the required visibility & security materials are available in vehicles
- Operate & maintain all UNDP radio equipments to professional standard
- Abide by all UN security regulations & UNDP policy & procedures & field restrictions made on road travel by authorities
- Maintaining logbooks, & ensuring service maintenance of vehicles

**Qualification & experience**

- Valid driving license, knowledge of Sri Lanka driving rules & regulations
- Five years of work experience as a driver with a safe driving record
- Working knowledge of English
- Knowledge of Sinhala an asset
- Familiar in minor vehicle repairs
- Motivated, flexible, team worker and capable of working under pressure

**Please send in your applications with a detailed CV with two non-related referees & contact telephone numbers, to reach us on or before 2nd April 2004.** Applications should be addressed to The Programme Manager, Transition Programme- UNDP, 121/4, Temple road, Jaffna. UN promotes equal opportunities and encourages applications from women. Only short listed candidates will be notified. (Tel: 2222277).

(C/33699)